# ளவாய்த்தாத்தா

(அரியநாயக முதலியார்)



M. S. சுப்பிரமணிய ஐய

பதிப்பாசிரியர்: பி. ஸ்ரீ.

தினமணி வெளியீடு

12 அணா

தினமணி வெளியீடு : 10    பதிப்பாசிரியர் : பி. ஸ்ரீ.

# தளவாய்த் தாத்தா

அல்லது

## தளவாய் அரியநாயக முதலியார்

PRESENTED BY:
KASIVISWANATH... CHETTIAR
PAGA...

M. S. சுப்பிரமணிய ஐயர்

Y.M.G.
ASSOCIATION
PAGANERI



"இருள் அகற்றும்
கைவிளக்கே கற்ற அறிவுடைமை"

தினமணி காரியாலயம்
100, மவுண்டு ரோடு
சென்னை
1944

காபிரைட்]    [விலை அணா 12

## தினமணி வெளியீடு

### இலக்கிய ஆலோசனையாளர்கள்

ஸ்ரீமதி. எஸ். அம்புஜம்மாள்,
ஆழ்வார்பேட்டை, சென்னை.

திரு. கே. சந்திரசேகரன்,
மயிலாப்பூர், சென்னை.

திரு. ஏ. என். சிவராமன்,
"தினமணி" ஆசிரியர்.

திரு. கே. சுவாமிநாதன்,
ஆங்கிலப் பேராசிரியர்,
ப்ரெஸிடென்ஸி காலேஜ், சென்னை.

திரு. டாக்டர் டி. எஸ். திருமூர்த்தி,
நுங்கம்பாக்கம், சென்னை.

திரு. கே. ஏ. நீலகண்ட சாஸ்திரியார்,
சரித்திரப் பேராசிரியர்,
சென்னை யூனிவெர்ஸிடி.

திரு. ஸி. என். முத்துரங்க முதலியார்,
பேட்டை, செங்கற்பட்டு ஜில்லா.

திரு. ஏ.வி. மெய்யப்ப செட்டியார்,
ஸரஸ்வதி ஸ்டோர்ஸ், பிரகதி பிக்சர்ஸ்,
சென்னை.

திரு. எஸ். வையாபுரிப் பிள்ளை,
தமிழ் ஆராய்ச்சித் துறைத் தலைவர்,
சென்னை யூனிவெர்ஸிடி.

# பொருள் அடக்கம்


| | | | |
|---|---|---|---|
| 1. | முகவுரை | .... | 5 |
| 2. | விளையும் பயிர் | .... | 9 |
| 3. | அரமனைச் சேவகம் | .... | 16 |
| 4. | ராஜயோகம் | .... | 25 |
| 5. | மதுரை மந்திரி | .... | 34 |
| 6. | தமிழர்—தெலுங்கர் | .... | 42 |
| 7. | பாளைய வகுப்பு | .... | 51 |
| 8. | நன்றியறிவு | .... | 57 |
| 9. | மகாராஜ மகுடம் | .... | 62 |
| 10. | ஸாம்ராஜ்யம் சிதறல் | .... | 70 |
| 11. | தும்பிச்சி நாயக்கன் | .... | 73 |
| 12. | சிம்மள யுத்தம் | .... | 77 |
| 13. | முதலியார் கோட்டை | .... | 81 |
| 14. | ஆலயத் திருப்பணி | .... | 85 |
| 15. | மகா புருஷன் | .... | 90 |

வெளி வந்துவிட்டது! தினமணி வெளியீடு: 9

# முன்னிலா

தமிழ் வாசகர்களுக்குப் புது விருந்தான சிறு கதைகள் படித்துப் படித்து, ரஸித்து ரஸித்து அனுபவிக்க வேண்டிய நூல்

தமிழ்க் கதை - உலகில் புது வழிகாட்டும் ஆறு ஆசிரியர்கள் எழுதிய சிறு கதைத் தொகுதி இது.

ஸ்ரீ எம். அனந்தநாராயணன், ஐ.ஸி.எஸ்.

ஸ்ரீ எம். கிருஷ்ணன், எம். ஏ.

ஸ்ரீமதி லக்ஷ்மி அம்மாள், எம்.ஏ., ப்ரொ∴பெஸர், குவீன்மேரிஸ் காலேஜ்.

,, மீனும்பாள்

,, விசாலாக்ஷி அம்மாள் (காசினி)

,, டாக்டர் ஸரஸ்வதி அம்மாள்

ஆகிய இந்த ஆசிரியர்கள் அறுவரும் பிரசித்தி பெற்ற 'பத்மாவதி' என்ற தமிழ் நாவலை எழுதிய ஸ்ரீ. அ. மாதவையாவின் புதல்வரும் புதல்வியரும் ஆவர்.

எத்தனையோ புதுமை புதுமையான வழிகளில் சிறு கதைகளை எழுதித் தமிழுக்கு வளமும் தமிழர்களுக்கு நல்லின்பமும் அளிக்கலாம் என்பதற்கு, பிரசித்தி பெற்ற இந்த ஆசிரியர்களின் கதைத் தொகுதி ஓர் அருமையான சாட்சி.

112 பக்கங்கள் விலை அணு 12

# முகவுரை

**மா**டு இளைக்கும். ஆனால், கொம்பு இளைக்காது. இன்று சுயவரசு இல்லை. அன்னிய ஆதிக்கந்தான். என்றாலும், சுதந்திர உணர்ச்சி கொழுந்து விடுகிறது. அன்னிய ஆதிக்கம் அலமருகிறது. இன்றுதான் அந்நிலை என்ல் வேண்டாம். என்றும் அப்படித்தான்.

பல்லாண்டு பல்லாண்டாக நம் முன்னோர் சுயவரசு கொண்டிருந்தனர். வல்லரசு கண்டும் வீறுக வாழ்ந்து வந்தனர். இடை இடையே அன்னியர் தோன்றி ஆர்ப் பரித்தது மெய்தான். எனினும் ஆதியில் கிரேக்கப்படை வெள்ளத்தை மௌரிய சந்திர குப்தனும் சாக்ஸ சாணக்கி யனும் புரட்டி எறிந்தனர்.

அப்பால் யவனர், ஹூணர் முதலியோர் இங்கே தாண்டவம் கொண்டனர். குப்தகுல திலகம்—சமுத்திர குப்த சக்கரவர்த்தி—அந்த அன்னியரை முறியடித்தான், வல்லரசொன்றும் நிருமித்தான். அவன் வழியில் வந்த விக்கிரமாதித்தனே மீண்டும் பாரத பூமிக்குப் புத் துணர்ச்சியும் பெருமையும் ஊட்டியவன்.

பின்னர் மீண்டும் ஹூணர் தோன்றி, கோலாகலங் கொள்ளக் கருதினர். அப்போது ஹர்ஷ மகாராஜன் அக்கும்பலைப் புறங்கண்டு வீரக்கொடி தூக்கினான். தெற்கிலோ புலிகேசின் என்பான் பெருமித வல்லர சொன்று நிறுவி, மக்களுக்கு வாழ்வளித்தான்.

ஹர்ஷனும் புலிகேசினும் மறைந்தனர் நாளடைவில். உடனே வட இந்தியாவில் ரஜபுத்திரர் என்போர் சீறிக் கிளம்பி, சிறிய சிறிய ராஜ்யங்கள் கொண்டனர். அப் போதுதான் இங்கே முகம்மது கஜனி, முகம்மது கோரி இவர்கள் தோன்றினர். ஆயினும், ரஜபுத்திரர் வாளா இருக்கவில்லை. முடிவுவரையில் மொய்யமர் புரிந்து, பகைவரை வெட்டிச் சாய்த்து, வீர சுவர்க்கம் புகுந்தனர்.

அதன் பின்பே டில்லியில் துருக்கவரசு முளைத்தது. ஆயினும், தேச மக்கள் ஓயாமல் ஒழியாமல் அவர்களுடன் கடைசிவரையில் சமர் செய்து நின்றனர். அவ்வரசைக் கதிகலங்கவும் செய்தனர். எனினும், பாக்கியம் துருக்கர் பக்கம் நின்றது. ஆதலின், வட இந்தியாவில் அவர்களின் அரசு பெருகியது. அத்துடன் அவ்வரசு திருப்தி கொள்ளவில்லை.

அல்லாவுதீன் கில்ஜி என்பான் இத்தேச முழுதும் கொடி போட எண்ணினன். அதற்கிணங்க அவன் சேனைத் தலைவன் மலிக்காபூர் என்பான் புறப்பட்டான் பெருஞ்சேனையுடன். தெற்கே ராமேசுவரம் வரையில் சென்றான். சேதுவிலே ஒரு மசூதியும் கட்டிக் களித்தான் என்பர்.

அப்போது, ஓரங்கல் கணபதி ராஜ்யம், தேவகிரி யாதவ ராஜ்யம், துவார சமுத்திர ஹொய்சால ராஜ்யம் இவை யெல்லாம் தவிடுபொடி யாயின. தலை நகரங்களெல்லாம் தரைமட்டங் கொண்டன. இலட்சக்கணக்கான மக்கள் ஒன்று உயிரிழந்தனர், அல்லது அடிபிடி கட்டாயத்தால் மதங் கெட்டனர். கோடிக்கணக்கான செல்வம் கொள்ளை போயிற்று. இம்மட்டோ?

காஞ்சீபுரம் கோயில்கள் இடிபட்டன. ஸ்ரீரங்கத்தில் கர்ப்பக் கிருகம் தவிர ஏனை யபாகங்கள் துகளாயின: திருவானைக்காவலும் தத்தளித்தது. அரங்கநாதப் பெருமானைத் தூக்கிக் கொண்டு, பிள்ளை லோகாசார்யார் ஓட்டமெடுத்தார். வேதாந்த தேசிகரும் விரைந்தேகினார் மைசூர் நோக்கி. சுதர்சன பட்டர் அரங்கநாதன் சந்நிதியிலே வெட்டுண்டு வீழ்ந்தார்.

தென் மதுரை என்னாயது? தூள் தூள் ஆயது. மீனாட்சியம்மைக்குப் பூஜை நிவேதனம் கிடையாது. ஆலய நிலங்கள் அனைத்தும் பறியுண்டன. அம்மதுரைமா நகரிலே முகம்மதியர் குந்திக் கொண்டனர். ஒருவர் பின் ஒருவராக எண்மர் துருக்கர் ஆங்கிருந்து ஐம்பதாண்டு ஆட்சியும் புரிந்தனர் அட்டகாசமாக. தெய்வம், தேசம், தர்மம் இவை நிலை கலங்கின.

அங்கிலேயிலும் நம்மவர் ஒரேயடியாய்ச் சாய்ந்துவிட வில்லை. தலைதூக்கி நின்று, பகையைப் பிளந்தெறியவே முனைந்து முயலா நின்றனர். அவர்களில் ஹரிஹரன், புக்கராயன், முதலிய சோதரரை முன்வைத் தெண்ண வேண்டும். அவ்வீர புருஷரின் விடா முயற்சியினால், துங்கபத்திரை நதிக்கரையிலே விஜயநகர ஸாம்ராஜ்யம் சிறிக் கிளம்பியது; தென்னாட்டிலிருந்த துருக்கரை யடித்துத் துரத்தியது; புராதன ஹிந்து மக்களின் பெருமையை மீண்டும் நிலை நாட்டியது.

துருக்கரை வெருட்டி ஓட்டியும் என்ன? தமிழகத் திலே நிலையான ஆட்சி உதிக்கவில்லை. தடி யெடுத்தவ னெல்லாம் தண்டல்காரனாகத் துலங்கினான். எங்கும் தலைக்குத் தலை அம்பலமாய்க் கிடந்தது. இவற்றை யெல்லாம் உணர்ந்தார் விஜயநகரின் வீரரான வேந்தர் பெருமான் கிருஷ்ணதேவராயர். வீர விளக்கான அரிய நாயகத்துடன் விசுவநாத நாய்க்கனைத் தமிழகத்துக்கு அனுப்பினார்.

விசுவநாத நாயக்கன்மீது கிருஷ்ணதேவருக்கு அவ் வளவாக நம்பிக்கை இல்லை. ஆதலினால்தான் தளவாய் அரியநாயக முதலியாரையும் உடன் அனுப்பினார். அரிய நாதரின் பெரு முயற்சியினால், தமிழகம் முழுதும் தனி யாட்சி ஏற்பட்டது. மதுரை நாயக்கரின் பரிபாலனம் சீர் பட்டது. மதுரையில் முன்போல் பாளையக்காரர் முளைத் தனர். நால்வகையிலும் நம் நாடு நலம் பல எய்தியது.

அத்தகைய அரியநாதரின் சரிதமே இது. தமிழகம் என்றும் அவரை மறக்க ஒண்ணாது. மூவேந்தருக்குப் பின்னர் நம் தமிழகத்தை உய்விக்க வந்த பெரியார் அவர். பிரதம மந்திரியாகவும் தளவாயாகவும் திகழ்ந்தார். முடிசூடா மன்னராக மகிமை பெற்றார். அவர் சரிதம் தமிழருக்குத் தனிப் பெருமை தரும். படித்துப் பாருங்கள்.

இங்ஙனம்

சென்னை,
10–10–'44.

**எம். எஸ். சுப்பிரமணிய ஐயர்**

# யாத்திரையும்

# வெளி நாடுகளும்

தீர்த்தயாத்திரைகளிலெல்லாம் மிகச் சிறந்தது கைலாஸ மானஸரோவர் யாத்திரை. இது இன்றும் அபாயகரமான யாத்திரையாகவே யிருக்கிறது. இந்த யாத்திரையைக் குறித்து விஞ்ஞானியின் மனப்பான்மையுடனும் வியாபாரியின் நிதான புத்தியுடனும் ஸ்ரீ. எஸ். வேதாந்தம் எழுதியிருக்கிறார்.

## கைலாஸம்—மானஸரோவர்

அழகிய கட்டடம் | கண்கவர் படங்கள்

**96 பக்கங்கள்** | **விலை அணா 8**

---

நமது மனப்பான்மை விரிவடைவதற்குத் தேச சஞ்சாரம் போல் சரித்திர சஞ்சாரமும் அவசியமாகும். போலந்து பின்லந்து என்ற இரண்டு வெளிநாடுகளின் சரித்திரங்களிலும் சஞ்சாரம் செய்து பார்த்த யாத்திரிகர் ஸ்ரீ த. கிருஷ்ணமூர்த்தி, அந்த நாடுகளின் விரிவான பிரச்னைகளைச் சுருங்கிய அளவில் விவரமாகக் குறிப்பிட்டிருக்கிறார். பத்திரிகை வாசிக்கிறவர்களுக்கும், உலகப் போக்கை அறிந்துகொள்ள விரும்புகிறவர்களுக்கும் ஒரு வழி காட்டியாக இவர் தமது நூலை எழுதியிருக்கிறார்.

## போலந்து—பின்லந்து

**124 பக்கங்கள்** | **விலை அணா 12**

# தளவாய்த் தாத்தா

அல்லது

# தளவாய் அரியநாயக முதலியார்

## 1. விளையும் பயிர்

உலகத்து இயற்கை இருவகை. செல்வம் ஒருவனிடம்; அறிவு ஒருவனிடம்! இரண்டும் ஒருங்கே அமைதல் அருமை. திருவுடையாரிடம் அறிவிராது; அறிவுடையாரிடம் திருவிராது. ஆயினும், நம் கதா நாயகன்—அரிய நாயகம்—அவ்விதிக்கு ஒரு விலக்கு.

அரியநாயகம் பிறந்தது ஓர் ஏழைக் குடும்பம். கஞ்சி குடிக்கவும் வகை கிடையாது. எனவே, பள்ளியில் சேர்ந்து படிக்க வகை ஏது? விட்ட குறை, தொட்ட குறை போலும்! குழந்தைப் பருவத்திலேயே நல்ல அறிவு பிரகாசிக்கிறது. பேராண்மை ஓங்குகிறது. உடல் வன்மையும் சோபிக்கிறது. நாளடைவில் நாடெங்கும் புகழ் பரவுகிறது.

வேளாண்மைக்குப் பிறந்தவர் வாளாண்மை மேற்கொள்ளுகிறார்; தமிழகத்திலே நாயக்கரின் ஆட்சியை நிலைநாட்டுகிறார். இம்மட்டோ? அடுத்தடுத்து நான்கு வேந்தரிடம் பிரதானி, தளவாய் ஆகிய அரும் பதவிகள் வகிக்கிறார்; தென்னாட்டிலே பாளையக்காரரை நிறுவுகிறார்; மதுரைமா நகருக்குக் கோட்டை கொத்தளங்கள் கட்டுகிறார்; சரித்திரத்திலே சாலச் சிறப்பெய்துகிறார்; கற்சிலைகளில் கம்பீரமாக இன்றும் காட்சியளிக்கிறார். தமிழருக்குத் தனிப் புகழ், தணியாப் புகழ் நாட்டிச் சென்ற இவர் சரிதம் பார்ப்போம்.

பாரத பூமியிலே, முத்தி தரும் நகரங்கள் ஏழு. அவை காசி, காஞ்சி, மதுரை, மாயை, அயோத்தி, அவந்தி, துவாரகை. அவற்றுள் மூன்று சிவ ஸ்தலங்கள்; நான்கு விஷ்ணு ஸ்தலங்கள். காஞ்சியோ சைவ, வைண

வர் இருவருக்கும் பொது; முன்னம் பௌத்த, ஜைன சமயங்களுக்கும் ஒரு கோட்டை. அங்கே புராதன நாக ரிகச் சின்னங்கள் அனந்தம்; சிற்பத் தூண்களும், சிலைகளும் மிகுதி; சரித்திர சாஸனங்களும் கல்வெட்டுக்களும் ஏராளம்.

பல நூறு ஆண்டுகளுக்கு முன்னம், காஞ்சிமா நகரம் சோழ அரசரின் இராஜதானி; கிள்ளிவளவன் மகன் இளந்திரையன் அரியணை ஏறிய அரும்பதி; அப்பால் பல்லவ வேந்தரின் தலைநகரம்; சரித்திரப் பெருமைக்கும் ஆராய்ச்சிக்கும் சால்புடைய சீரிய தலம்; 'பொன் எயில் காஞ்சி,' 'தேவர் கோமான் காவல் மாநகர்' என்று மணிமேகலை மகிழ்ந்து கூறும் பூமி; சான்றோர் நிரம்பிய தொண்டை நன்னாட்டின் சிறந்த பதி.

அத்தகைய காஞ்சிமா நகருக்கு அருகே மெய்ப்பேடு என்று ஒரு கிராமம். அக் கிராமத்திலே, வேளாண் மக்கள் அதிகம்; அனைவரும் சைவ வேளாளர்; சிறப்பான தொண்டைமண்டல வேளாளருமாம். எல்லோரும் உழுவித்து உண்போரே. அன்னவரில் இருபத்து நான்கு குடும்பங்களுக்கு ஏற்றம் மிகுதி. சுதேச மன்னரின் ஆட்சிக் காலத்தில் அக் குடும்பத்தாருக்கே அமைச்சுத் தொழில், தளகர்த்தர் பதவி, கோட்டைத் தலைமை, கொத்தளக் காவல், ராஜ பிருதுகள் முதலியன உண்டு.

நமது அரியநாயகம் அக் குடும்பங்களிலே ஒன்றில் உதித்தவர். பிறந்த காலம் சுமார் ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்பு. இவர் தந்தையின் பெயர் காளத்தியப்பர்; தாயார் சிவகாமி யம்மை. இருவரும் பரம ஏழையர். பிள்ளைதான் சொத்து. குழந்தையின் வடிவழகே வயிற்றுப் பாட்டுக்கு மருந்து. குற்றேவல் செய்து பிழைக்கவோ மனமில்லை. பரம்பரை மானம்! என்ன செய்வது? இருவரும் ஏங்குவர்; தேம்புவர்; திகைப்பர்; 'கச்சி ஏகம்பனே!' என்பர்; 'காஞ்சி வரதா! கருணை கூராயோ?' என்று துதிப்பர். இவ்விதம் நாட்கள் பல கழிந்தன. கலி நீங்கினபாடில்லை. கவலை பெருகிக் கொண்டே வந்தது.

ஒரு நாள் மாலைவேளை. காளத்தியப்பர் வெளியே சென்றிருந்தார். சிவகாமியம்மை 'நீர்சேந்தி' வரக் கேணிப் பக்கம் போயிருந்தாள். தரையில் பாதியுடம்பும் கந்தைத் துணியில் பாதி யுடம்புமாகக் குழந்தை கண் வளர்ந் திருந்தது. புறக்கடையிலே பெரிய கரையான் புற்று. அதன் புழைக்குள் கிடந்த ஸர்ப்பம் ஒன்று இரையை நாடி வெளியே கிளம்பிற்று; வீட்டினுள்ளே விரைந்து புகுந்தது. ஆகாரம் ஒன்றும் அகப்படவில்லை. அரிய நாயகக் குழந்தை தென்பட்டது. உடனே ஊர்ந்துசென்று குழந்தையின் பக்கம் சேர்ந்தது; படத்தை விரித்த வண்ணம் கூர்ந்து நோக்கிற்று!

அது சமயம், தாயார் உள்ளே வந்தாள்; மாநாகத் தைக் கண்டு கூச்சல் போட்டாள். உடனே, அது அரிய நாயகத்தை வலம் வந்தது; வந்த வழியே சென்றது; புற்றினுள் புகுந்து கொண்டது. சிறிது நேரத்துக் கெல்லாம் காளத்தியப்பர் வந்து சேர்ந்தார். அவரிடம் நடந்ததைச் சொன்னாள் அப் பெண்மணி. "குழந்தை பிழைத்தது, குலம் விளங்கும், எல்லாம் ஏகம்பன் கருணை" என்றார் அவர். அதுகேட்டு, அந்த அம்மை ஆறுதல் அடைந்தாள். நாளடைவில் குழந்தைக்கு ஐந்தாண்டுகள் நிரம்பின. வித்தியாப்பியாசம் செய்விக்க வேண்டுமே. பெற்றோர் இருவரும் பேசுற்றனர். அவ் வேளை, மெய்ப்பேட்டு நம்பியான்—விநாயகர் ஆலயத்தில் பூஜை புரியும் வேதியன்—காளத்தியப்பரைக் காண வந்தான்; குழந்தையை வாரி யெடுத்து உச்சிமுகர்ந் தான்; கையிலிருந்த பிரஸாதத்தைக் கொடுத்தான்; 'கவலை விடுக' என்று கனிவுடன் கூறிச் சென்றான்.

பிரஸாத மகிமை போலும்! அரியநாயகத்தின் முகத்திலே புதிய பொலிவொன்று துலங்கியது. நாமகளின் கடைக்கண்ணோக்கும் வந்து கூடிக்கொண்டது. நாள்தோறும் நம்பியான் தன் ஆலயத்துக்கு அரிய நாய கத்தை அழைத்துச் செல்லுவான்; தான் கற்ற வேத சாஸ்திரங்களைப் புகட்டுவான். படித்து மறந்து நினைப் பில் உதிப்பதே போல், பாடமெல்லாம் பையனிடம்

படியும்! பார்த்தான் நம்பியான்; பூரிப்புக்கொண்டான்; பாலனுக்கு மேலும் கலைபல புகட்டத் தொடங்கினன் கருத்துடன்.

பூர்வ ஜன்ம வாசனை; கணித சாஸ்திரம் கரதல பாடமாயிற்று. இலக்கிய ஞானம் எளிதில் கைவந்தது. சிடனது சரீர அமைப்புக் கண்டு வியந்த நம்பியான், சிலம்ப வித்தை சொல்லிக் கொடுத்தான்; மற்போரில் பயிற்சி யூட்டினன்; வாள் வரிசையிலும் பயிற்றுவித் தான். காளைப் பருவமான பதினாறுண்டினுக்குள், எல்லாம் தெரிந்தவனானன் அரியநாயகம். வாலிபனது கணிதப் பயிற்சியும் இலக்கிய அறிவும் மற்போர் மாண்பும் வாள் வரிசையும் மெய்ப்பேடெங்கும் பரந்தன.

மாலை வேளையிலே, அரியநாயகம் தன்னை யொத்த இளைஞருடன் விளையாடுதல் வழக்கம். கழிச்சண்டை, குத்துச் சண்டை, வாள்வீச்சு, தோள்வரிசை எல்லாம் நடக்கும். எதிலும் வெற்றி நமது கதாநாயகத்துக்கே. தோல்வியுண்ட காளையர் அரியநாயகத்தின் மீது அசூயை கொள்ளார்; மற்று, மதிப்பும் பரிவுமே காட்டுவர்; கட்டி யணைத்தும், தோள்மீது தூக்கியாடியும் களிப்பு எய்துவர். அக்கிராமவாசிகளும் அரியநாயகம் அரிய நாயகமே என்று பேசிப் புகழ்வர்; நல்லாசியும் நவில்வர்!

ஒரு தினம், பந்தய வெளியிலே பையன்களின் பல வகை விளையாட்டுக்கள் நடந்தன. அவ்வழியே வந்தார் விருத்த வேதியரொருவர்; வாலிபரின் விளையாடல் களைக் கண்டு சற்றே நின்றார்; அரியநாயகத்தின் அருஞ் செயல்களைக் கண்டு அடங்கா வியப்புக் கொண்டார்; அசைவற்று நின்றார்; நித்திய நியதியான ஏகாம்பர தரிசனத்தையும் மறந்தார்; முடிவில் அம்மைந்தனை யணுகி, "அப்பனே! உன் மதிவண்ணம் கண்டு மகிழ்ந் தேன்; தோள் வண்ணம் கண்டு களித்தேன்; கை ரேகை வண்ணத்தையும் காண விரும்புகின்றேன்" என்று கூறினர்.

அத்தருணம் தற்செயலாக அங்கே வந்து தோன் றினன் நம்பியான்; அந்தணரின் வசனம் கேட்டதும்,

"குழந்தாய்! இப் பெரியவர் சாமுத்திரிகா லட்சண சாஸ்திரியார். ஆருடத்தில் அதிவல்லவர்; சோதிடத்திலும் சாலச் சிறந்தவர்; இவரிடம் கையைக் காட்டு; யோகபாவம் புலப்படும்; விப்பிர சிரேஷ்டரின் விழுமிய வாக்கையறிவோம்" என்றான். அரியநாயகம் உடனே இருவரையும் வணங்கி, வலக்கையை நீட்டினான். தானிய ரேகை, தன ரேகை, ஆயுள் ரேகை, அனைத்தையும் பார்த்தார் வேதியர்; தமக்குள்ளே உவகை பொங்கினார்.

மறையவரின் உவகைப் பெருக்கைக் கண்டதும், பையன்களில் ஒருவன் பரவசமானான்; "ஐயா! ஆனந்த உவகையில் எங்களுக்குப் பங்கு கிடையாதா? எங்கள் அரியநாயகத்துக்கு என்ன யோகம்? எப்போது? சீக்கிரம் சொல்லுங்கள்" என்றான். வேதிய வித்தகர் வாய் திறக்கவில்லை; ஆனந்தக் கடலில் ஆழ்ந்து திளைத்துக்கொண்டிருந்தார். "ஐயனே! பெரிய மனது பண்ணுங்கள்; நாங்களும் கேட்டானந்திக்கிறோம்" என்றான் நம்பியான்.

"யோகமா? ராஜயோகம்! ராஜனையே ஆக்கும் யோகம்! நானிலத்தில் நல்லரசை நிறுவும் யோகம்! சேனாதிபதியாகச் சிறக்கும் யோகம்! எல்லாம் அதி விரைவில்! பூர்ண ஆயுஸ். போக பாக்கியம் கொஞ்சமா நஞ்சமா? மகோந்நதமான யோகம்! ஆயிரம் ஆயிரமாக் குடும்பங்கள் ஈடேறும், அக்கிரகாரங்கள் தோன்றும். கொடையில் சிறந்த கை; ஆலயத் திருப் பணி செய்யும். அது கண்டு நாடெல்லாம் களி கூரும். குப்பை மேட்டிலா மாணிக்கம் கிடப்பது? மணி மகுடத்திலன்றோ மகிமை பெறவேண்டும்! நம்பியாரே! சுக்கிரன் வரவேண்டியது தான் தாமதம். படிப்படியாக வாழ்வு வளரும்; யோகம் உயரும், உச்சநிலை அடையும். மகராஜன், மகராஜன்!" என்று அப்பெரியவர் பகர்ந்தார்.

பின்னர் அரிய நாயகத்தை அவர் ஏற இறங்கப் பார்த்தார்; "அப்பா! மெய்ப்பேட்டில் இருந்தது போதும். மகா ராஜாதி ராஜன் ராயலுவாரு சமஸ்தானம்

தெரியுமா? சீக்கிரம் அங்கே போய்ச் சேர். அதுவே உனக்கு உகந்த இடம். புறப்படு. பஞ்சைப் பார்ப்பான் ஏதோ சொன்னான் என்று நினையாதே. ஸ்ரீதேவி உன்னை அழைக்கின்றாள்; அங்கே உன்னை எதிர் பார்த்துக் கொண்டும் நிற்கின்றாள்! சாஸ்திரம் பொய்க்காது; என் வார்த்தையும் அப்படியே: கொஞ்ச நாளில் தெரியும். ராஜ வாழ்வு வந்ததும் என்னை மட்டும் மறவாதே; ஞாபகம் இருக்கட்டும்" என்றிசைத்தார்.

"அரியநாயகம் நல்ல புத்திமான், உத்தமன், பெரியவர் எவரையும் மறக்கமாட்டான். தங்களையா மறப்பான்? ஒரு நாளும் மறவான்" என்றான் நம்பியான். பெரியவர், "நல்லது. உலக இயற்கை உமக்குத் தெரியாதோ? செல்வம் வந்துவிட்டால், சிந்தனை பிறிதாகு மன்றோ?" என்றார். "எல்லாம் தெரிந்த தங்களுக்கு ஏன் சந்தேகம்? குழந்தையின் கைரேகையே கூறுமே. இவனு மனந் திரிவான்? இன்றுபோல் என்றும் யாரிடமும் விசுவாசமாய் இருப்பான். ராஜயோகம் கூறிய தங்களிடமும், தங்கள் குடும்பத்தாரிடமும் பரம விசுவாசம் காட்டுவான், சத்தியம் இது" என்று இயம்பினான் நம்பியான்.

"ஆம், ஆம்! கைரேகையின் மூலம் குணத்தையும் உணர முடியும். என்றாலும், ஓர் எழுத்து இருத்தல் நல்ல தல்லவா? நான் சொன்னபடி ராஜயோகம் சம்பவித்தால், என்ன தருவான்? இன்னது தருவேன் என்று இவன் கைப்பட எழுத்திருத்தல் நலமன்றோ?" என்றார் விருத்த வேதியர். அரியநாயகம், "என் ஐயனே! எழுத்து வேண்டுமா? இதோ எழுதித் தருகிறேன். இந்த ஐயப் பாடு ஏன்? நறுக்கொன்று தாருங்கள், கைச்சாத்திட்டுக் கொடுக்கிறேன்" என்றான் விநயமாக. நல்லது என்று கீழே கிடந்த பனையோலை ஒன்றை எடுத்துச் சீவி, எழுத் தாணியையும் நீட்டினார் சோதிட சாஸ்திரி.

நீட்டிய நறுக்கில், அன்று நடந்ததை யெல்லாம் அரியநாயகம் எழுதினான். "எனக்கு ராஜயோகம் வந்த காலத்திலே, யார் வந்து இந்தச் சீட்டைக் காட்டினாலும், எனது சம்பத்தில் பாதி தட்டாது தருவேன். இப்படிக்கு

அரியநாயகம்'' என்று கைச்சாத்திட்டுக் கும்பிட்டுக் கொடுத்தான். அவர் அதனை ஆவலுடன் வாங்கிக் கொண்டார். உடனே, "நேரமாகிவிட்டது, அர்த்தஜாமத்தில்தான் ஏகாம்பரனைத் தரிசிக்கவேண்டும். சந்தியாகால சேவை கிட்டாது'' என்று கூறிக் கடுகி நடக்கலானார்.

இளைஞரில் ஒருவன் "ஏன் ஐயா? ஏகாம்பரனது தரிசன பலன் சீட்டில் இருக்கிறதே. ராஜயோகத்தில் பாதிப்பங்கு உமக்குத்தானே" என்று நையாண்டி பண்ணினான். அத்துடன் அக்குறும்பன் நிற்கவில்லை. "ஐயா! ஒரு சேதி. எங்கள் அரியநாயகத்துக்கு ராஜயோகம் வந்தால், அதில் பங்கு வேண்டும் என்றீர்கள். தாங்கள் கேட்டபடியே அவனும் வரைந்து கொடுத்தான். அப்படியே அவன் நடப்பான். ஒரு வேளை ராஜயோகம் சம்பவியாவிட்டால், என்ன செய்வது? தங்களைக் கண்டு எங்ஙனம் கேட்பது? தங்கள் ஊரும் பேரும் உத்தியோகமும் தெரியவேண்டாமா?'' என்றான்.

"அப்பா! புத்திசாலி நீ. எதற்கும் நம்பிக்கையே காரணம். மந்திரமும் தேவும் மருந்தும் குரு அருளும் தந்திரமும் ஞானம் தரும் வார்த்தையும் மெய்யென்னில், மெய்யாய் விளங்கும்! வீண் மயக்கம் வேண்டாம். வேதம் ஓதும் நாவில் வரும் வாக்கு ஒரு நாளும் பொய்க்காது. முன்னோர் எழுதிவைத்த சாஸ்திரம்! எனக்குப் பூர்ண நம்பிக்கை உண்டு! நம்பிக்கை கொண்டே சொன்னேன். வேறென்ன விளம்புவேன்? வேண்டுமானால், இதோ நறுக்கு, எடுத்துக்கொள்'' என்று நீட்டினார் நறுக்கை.

அரியநாயகம் அது கண்டு, தன் தோழனைக் கையமர்த்தி, "ஐயா! பெரியவரே! இவன் விளையாட்டுப் பிள்ளை. நையாண்டி பேசுகிறான். இயற்கை போகுமா? கோபம் வேண்டாம். வேத சாஸ்திரங்களில் எனக்குப் பூர்ண நம்பிக்கையுண்டு. பெரியவர்களின் திருவாக்கில் இன்னும் நம்பிக்கை யதிகம்'' என்று ஆறுதல் கூறினான். நம்பியானும், "வேதியர் திலக! அர்த்த ஜாமத்தில் ஆண்டவனைத் தரிசிக்கும் பொழுது எங்கள் அரியநாய

க்த்தைக் குறித்தும் வேண்டிக் கொள்ளுங்கள். இதுவே என் பிரார்த்தனை. எனக்குப் புத்திர ஸ்தானத்தில் உள்ளவன் அரியநாயகமே. தங்கள் கருணையால் காளத்தியப்பரின் கலி நீங்குமாக! தங்கள் வாக்குப்படியே ராஜயோகம் வந்து சம்பவிக்குமாக! தினம் திருமூர்த்திகளை அடியேனும் துதித்து வருகிறேன். ஈசன் அருள்! எல்லாம் தங்கள் ஆசி!" என்றான்.

அனைவரையும் வாழ்த்திவிட்டு அக்கிழவர் புறப்பட்டார். நம்பியானும், அரியநாயகமும் ஏனைய இளைஞரும் அவரைச் சிறிது தூரம் வழிவிட்டுத் திரும்பினர். திரும்புகையில், அரியநாயகத்தின் தோழர் கும்மாளம் கொண்டனர்; "அரியநாயகம் ராஜாதிராஜன், ராஜமார்த்தாண்டன், ராஜ பரமேச்வரன்" என்று ஏத்தினர். பின்னர் ஒருவன், "நானே அரியநாயக மகாராஜாவின் ராயஸக்காரன்" என்றான். இன்னொருவன் "நானே, மகாராஜாவின் மெய்க்காவலன்" என்றான். வேறொருவன் "நானே சேனாதிபதி" என்றான். மற்றொருவன் "நானே தண்டல்காரன்" என்றான்.

சுட்டிப்பையனோ, "நம்பியாருக்கு யாது பதவி?" என்றனன். "அவரே மகாராஜாவின் குருபீடம்" என்றான் ஒருவன். "குருபீடம் மட்டுமா? பிரதானி பதவியும்கூட" என்றான் இன்னொருவன். நம்பியானோ, "மக்காள்! எல்லாரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே என் குலக்கடமை! என் தோத்திரமுமாம். இந்த ஊராரும் நீங்களும் நம் நாடும் சுகமே வாழின், அதுவே எனக்குப் போதும், வேறொன்றும் வேண்டிலேன்" என்று விளம்பினான். முடிவில் அனைவரும் தத்தம் இல்லம் ஏகினர்.

## 2. அரமனைச் சேவகம்

**பா**ரதபூமிக்குப் பன்னிரண்டாம் நூற்றாண்டு பரமசாபத்தீடான நூற்றாண்டாகும். அந்நூற்றாண்டின் இறுதியில்தான், வடஇந்தியாவிலே சுதேச மக்களின் ஆட்சி சாய்ந்தது; அன்னியரின் ஆட்சி தலையெடுக்கத் தொடங்கிற்று. டில்லிமா நகரிலிருந்து துருக்க அரசர்

ஒருவர்பின் ஒருவராக் ஆட்சி புரியத் தலைப்பட்டனர்; நாளடைவிலே விந்தியமலை வரையில் அன்னவரின் ஆட்சி பரவிவிட்டது.

பதினைலாம் நூற்றாண்டின் மத்தியில் துக்ளக் வமிசத்தார் அம்மாநகரிலிருந்து ஆட்சி செலுத்தினர். அப்போதும், அதற்குப் பின்னரும் தட்சிணத்திலே முகம்மதியச் சிற்றரசுகள் முளைக்கலாயின. அங்ஙனம் முளைத்த அரசுகளில் ஒன்று பாமினி ராஜ்யம். சிறிதுகாலம் சென்றதும், அப்பாமினி ராஜ்யம் ஐந்து பாகமாகச் சிதறிப்பது. அந்த ஐந்தும் ஆமதுநகர், பீஜபூர், கோல்கோண்டா, பீடார், பீரார் என்பன. அவை தம்முள் சதா சண்டையிட்டு நின்றன; ஜன்மப் பகையும் பூண்டு பொருதன. ஒன்றை யொன்று விழுங்குவதே நோக்கம்.

வேற்றுநாட்டில் அரசு கொண்ட ஆணவம், கண்மூடித்தனமான மதவைராக்கியம், இரண்டும் கூடிக்கொள்ளவே, அம்மன்னவரில் சிலர் மதிபிசகி நெறிதவறி, நடக்கலாயினர். அதனால் தேச மக்களான ஹிந்துக்களில் பலர் மதங்கெடவும், மனம் புண்ணாகவும் நேர்ந்தது. தெய்வம், தேசம், தர்மம், இவற்றைக் காக்கவல்ல ஹிந்து சுயஅரசு இல்லையே என்றும் பலர் ஓலமிட்டனர். வடஇந்தியாவிலும் தக்காணத்திலுமுள்ள முகம்மதிய அரசுகள் தென்னிந்தியாவிலேனும் தலை காட்டாதிருக்க வேண்டும் என்று தேச, மதாபிமானிகளில் சிலர் சிந்தனை செய்து நின்றனர்.

தக்காணத்திலுள்ள ஓரங்கல் நாடு டில்லி முகம்மதியரின் கையில் சிக்கியதும், அச்சிந்தனையில் சிறந்து நின்ற ஹரிஹரன், புக்கராயன் ஆகிய இருவரும் துங்கபத்திரா நதிக்கரை சேர்ந்தனர். வித்யாரண்யர் என்னும் குருவின் அருள் கொண்டு, அந்நதி தீரத்திலே வித்யாநகரம் என்னும் நகரை எழுப்பினர்; ஆங்கிருந்து நேர்மையாக ஆட்சி புரியவும் தலைப்பட்டனர். முகம்மதியரின் ஆட்சியில் அவதியுற்ற ஹிந்துக்களுக்கு அந்நகரம் ஒரு தஞ்சமாக விளங்கலாயிற்று. அச்சோதரர் தங்கள் மதிவன்மையும் தோள் வலியும் கொண்டு வெற்றிமேல் வெற்றிகண்டு, அரசைப்

பெருக்கி, அனைவருக்கும் ஆறுதல் அளித்து வந்தனர். காலக்கிரமத்தில் அதுவே **விஜயநகர** ஸாம்ராஜ்யம் ஆயிற்று. வால்மீகனும் கம்பனும் ராமகதையிலே பம்பா ஸரஸ் என்பதுபற்றிப் பலபடப் பேசியுளர். அந்தப் பம்பா ஸரஸின் அருகிலேயே, விஜயநகரம் எழுந்தது. வாலியும் சுக்கிரீவனும் வாழ்ந்து வந்த கிஷ்கிந்தை எனும் பிரதேசத்திலே அந்த ஸாம்ராஜ்யம் முளைத்து நாலுதிசையும் கிளைக்கலாயிற்று. மலையும் காடும் ஆறும் ஏரியும் இயற்கை யரண்களாக விளங்கினமையின், விஜயநகரம் விருப்புக் கொள்ளுதல் இலகுவாயிற்று. அந்நாளிலே விஜயநகரின் செல்வச் செருக்கு, நாகரிகச் சிறப்பு, கலைப் பெருக்கு, கல்விச் செழிப்பு, தொழில் வளமை, வர்த்தக விரிவு இவற்றை நேரில் கண்ட மேனாட்டினர் வியந்தும் புகழ்ந்தும் எழுதிவைத்துளர்.

இத்தாலிய கனவான் நிக்காலேர் என்பான் கூறும் வண்ணம், விஜயநகரம் போகபூமியே; துங்கபத்திரையின் வடகரையில் ஆனைகுந்தி நகரும் கோட்டையும் துலங்கும்; தென்கரையில் விஜயநகரம் விளங்கும். அங்கே எங்கும் குன்றுகளும் பாறைகளும் அதிகம். நகரைக் காத்து நிற்கும் கல்மதில்கள் பெருமிதமான அக்குன்றுகளைப் பிணைத்து நிற்கும். நகரின் சுற்றளவு எழுபது மைலுக்கு மேலிருக்கும். அந்த எல்லைக்கு உட்பட்ட அழகிய பெரிய நகரிலே, பளிங்குக் கற்களால் ஆன கால்வாய்கள் எங்கும் பரந்தோடும்; ஓடுகையில் செந்நெல்லும் கரும்பும் செறிந்த புலங்களையும் பூங்காவனங்களையும் செழிக்கச் செய்யும்.

நகரெங்கும் வானை யளக்கும் மாட மாளிகைகள்; மேகத்தைக் கிழிக்கும் கூட கோபுரங்கள்; பேராறு போன்ற ஆவண வீதிகள்; பொன்னும் மணியும் குவிந்துள்ள காசுக் கடைகள்; நவதானியக் களஞ்சியம் போன்ற சந்தைக் கூடங்கள்; காளையரும் கன்னியரும் ஒயிலாக உலாவும் பூங்காவனங்கள்; கண்ணைக் கவரும் சிற்பச் சாலைகள்; கருத்தை அள்ளும் ஓவியக் கூடங்கள்; பாலாவியும் பாம்புரியும் போன்ற பட்டாடைச் சாலைகள்; சிலந்திவலை போன்ற நுண்ணிய பூம்பருத்தியாடைக்

கடைகள்; மாண்பு மிக்க தேவாலயங்கள்; பண்பு நிறைந்த பட்டி மண்டபங்கள்; கலைபயில் கழகங்கள் முதலியன அனந்தம்.

விஜயநகரச் சேனையின் தொகை பதினைந்து லட்சம். யானை குதிரைகள் பல்லாயிரக்கணக்கு; நகர மக்கள் பத்துலட்சம். நகரெங்கும் ரோஜாப்பூக் கடைகள். நகர மாந்தர் ரோஜாமலரின்றி வாழார்! அணிகல வியாபாரிகளும் நவரத்தின வர்த்தகரும் எங்கும் தென்படுவர். இவை யாவும் புடைசூழ, நடுநாயகமாக ராஜமாளிகை தோன்றும்; அந்தப்புரக் கோயில்களும் அழகாகத் துலங்கும். சக்கரவர்த்தியோ புஜபல பராக்கிரமசாலி. அவன் பவனி வந்தால், நாலாயிரம் மங்கையர் பரிமீதமர்ந்து, முன்னும் பின்னும் அணி அணியாகச் செல்லுவர். மகிஷியரோ தந்தப் பல்லக்கில் அமர்ந்து, பாங்காகப் பின்னே பெருமிதமாக வருவர்.

மகா ராயரின் ஆஸ்தான மண்டபத்தில் புகுந்தால் வடிவழகியரான பெண்மணிகளின் ஆடல் பாடல்கள் ஒருபால்; வேத சாஸ்திர விற்பன்னரின் விவேக வாதுரைகள் ஒருபால்; அயல் நாடுகளிலிருந்து நேயத்தை நாடி வந்துள்ள தூதுவரின் ஓதுரைகள் ஒருபால்; கைவரிசைக் கம்மியரும் சொல் வரிசைச் சூழ்ச்சியரும் நிகழ்த்தும் நேர்த்தி ஒருபால்; மகாமண்டலேசுவரர்களும் கர்த்தாக்களும் சமயம் பார்த்து அறிக்கை சமர்ப்பித்தல் ஒருபால்; குமரிவரையுள்ள சிற்றரசர் சமயம் நோக்கி விண்ணப்பிக்கும் முறையீடுகள் ஒருபால்.

விஜயநகர அதிபதிகள் கர்னாடகத் தெலுங்கு அரசர்கள்; க்ஷத்திரிய மரபில் வந்தவர்கள். அவர்களுக்கு மகா ராயர், மகா ராயலு என்னும் பட்டப் பெயர்கள் உண்டு. மகா ராஜாதி ராஜன், மகா பரமேசுவரன் என்றும் அவர்களை யழைப்பர். சக்கரவர்த்திக்கு அடுத்தபடி, மகாமண்டலங்களை மேற்பார்க்கும் ராஜப் பிரதிநிதிகளான மண்டலேசுவரர்கள் பலர் இருப்பர். இவர்களுக்குக் கீழே சிற்றரசுகளைக் கண்காணிக்கும் கர்த்தர்கள் எனும் காவலர்கள் (கவர்னர்கள்) உண்டு. அங்

நாளிலே, தமிழ் மூவேந்தரது சேர, சோழ, பாண்டிய நாடுகளும் மைசூர் ராஜ்யமும் விஜயநகர ஸாம்ராஜ்யத்துக்கு அடக்கம். பதினாறும் நூற்றாண்டின் மத்தியிலே, இவ்வளவு பெரிய ஸாம்ராஜ்யத்தின் அதிபனாக ஆண்மை செலுத்தியவன் கிருஷ்ண தேவ ராயன்.

அண்டையிலுள்ள முகம்மதியச் சிற்றரசுகளுக்கும் விஜயநகருக்கும் உள்ளூரக் கடும்பகை தான். விஜயநகரின் வீறுப்பையும், சேனா பலத்தையுங் கண்டு, அவை கறுவியே கிடந்தன. எனினும் அந்த அரசுகள் ஒரொரு சமயம் தனித்தனி போருக் கெழுந்து, விஜயநகரிடம் பல சமயம் தோல்வி கொண்டதுண்டு. ஆதலின், அயலிலுள்ள நாடுகளை விழுங்கி அரசைப் பெருக்கிக் கொள்ள அவற்றினுக்கு வகையில்லை. எனினும் மண்ணாசை மேலிட்டே நின்றது. அவற்றினுக்குள்ளே ஒற்றுமை என்பது பூஜ்யம். தனித்து நின்று நெடுங்காலம் தோல்வியே கொண்ட பின்னர், அவை எல்லாம் ஒன்று சேர்ந்தன. விஜயநகரை எதிர்க்கவும் பத்து வருஷ காலமாக ஆயத்தங்கள் பல செய்தன.

கிருஷ்ணதேவராயர் ஆவிதாங்கி நிற்கும் வரையில், அவ்வரசுகள் வாளா கிடக்க நேர்ந்தது. பின்னர் ராமராயர் பட்டத்துக்கு வந்ததும், அவை யுத்தத்துக்குச் சன்னத்தம் ஆயின. 1565-ம் ஆண்டு தலைக்கோட்டை என்னுமிடத்தில் போர் மூண்டது. ஒரு பக்கம் ஒரே மனங்கொண்ட பல முகம்மதிய அரசுகள்; ஒரு புறம் விஜயநகர ஸாம்ராஜ்யம். ஜன்மப் பகையும் மத வெறியும் மண்ணாசையுங் கொண்டு அக் கூட்டரசுகள் கொடுஞ்சமர் ஆற்றின. ராமராயர் எழுபது வயதுக் கிழவராயினும், இளஞ்சிங்கம் போல் முன்னணியில் நின்று மொய்ம்புடன் போர் புரிந்தார். முகம்மதியச் சேனை வெள்ளம் சின்னா பின்னமாயிற்று.

விஜயநகரம் வெற்றிமாலை சூட வேண்டிய சமயம். ராமராயர் பக்கமிருந்த விஜயநகரச் சேனையில் நெடு நாளாகச் சேவித்து நின்று, மானியமும் மகிமையும் பெற்றுயர்ந்த முகம்மதியப் படை வகுப்பொன்று துரோ

கத்தில் இறங்கிவிட்டது. ஆதலின், எவரும எதிர் பார்ராத வகையில், வஞ்சனையாக அவ்வேந்தர்பிரரான் இரணகளத்தில் கொல்லப்பட்டுப் போனான். உடனே அவன் சிரத்தை யறுத்து நீண்ட கோலிலே செருகி அந்தரத்தில் தூக்கிக் காட்டவே, விஜயநகரச் சேனையின் முன்னணி திகைப்புற்று நிற்கலாயிற்று. அதுவே சமய மெனக் கொண்ட முகம்மதியப் படைஞர் முன்னேறி விஜயநகர வீரரை வெட்டிச் சாய்த்தனர். விஜயநகரத் தாரில் எவரும் முதுகு கொடாமல் முடிவுவரையில் போர் புரிந்து வீர சுவர்க்கம் சேர்ந்தனர்.

வெற்றிக் களிப்பினால் வெறிகொண்டுவிட்ட முகம் மதியச் சேனைகள் விஜயநகரில் புகுந்து, கொள்ளையும் கொலையும் நடத்தின. நகரைத் தரைமட்டம் ஆக்கவும் தலைப்பட்டன. குயவனுக்குப் பலநாள் வேலை, தடி காரனுக்கு ஒரு நாழிகை வேலை. என்றாலும், நகரை நிர்மூல மாக்க ஐந்து மாதகாலம் பிடித்தது. இலேசாக அதனை அழிக்க இயலவில்லை. எனவே மாடமாளிகைகளைத் தீயிட்டுப் பொசுக்கினர்; மதிலரண்களை வெடி மருந் திட்டுத் தகர்த்தனர். அப்போதும் எஞ்சி நின்ற இடங் களை மண்வெட்டி, கோடரி, குந்தம் முதலிய ஆயுதங்கள் கொண்டு இடித்துத் தள்ளினர்.

பாரோர் புகழ்ந்த பட்டணம் இப்போது படுபாழாய்க் கிடக்கின்றது! பல்லாரி எனும் நகருக்கு அருகிலுள்ள ஹம்பி எனும் கிராமம் சென்றால், கண்ணுக்கு எட்டின வரையில் ஒரே பாழ்தான் தோன்றும். இடிந்த மாளிகைகளும், குறைபட்ட கோயில்களும் தென்படும். இந்நிலையிலும் பழம்பதியின் முன்னைய பெருமையை உய்த்துணரக்கூடும். நாகரிக வளர்ச்சிக்கும் செல்வச் சிறப்பினுக்கும் முன்னம் உறைவிடமாயிருந்த அப்புரி யிலே இப்போது ஒரு பக்கம் வௌவால்கள் ஊசலாடும்; ஒரு பக்கம் நாய் நரிகள் ஊளையிடும்; ஒரு பக்கம் கூகையும் கோட்டானும் குமுறும்; ஒரு பக்கம் ஆந்தைகள் ஜதை யாக இருந்து அலறும்; ஒரு பக்கம் பாம்பினங்கள் பட மெடுத்துச் சீறும்; ஒரு பக்கம் கவுளிகள் குறிகூறும்;

ஒரு பக்கம் சிலந்திப் பூச்சிகள் சித்திரவலை கட்டி நிற்கும்; ஒரு பக்கம் புதர்களில் கிடந்து புலிகள் உறுமும்; பட்ட வர்த்தனர், மகுட வர்த்தனர், மண்டலீகர் புடைசூழ அரசர் பலர் கொலுவிருந்த இடத்திலே, இப்போது கொலுவிருப்பது யார்? பாழ் எனும் பரதேவதையே என்று பரிபவத்துடன் கூறவேண்டும்.

விஜயநகருக்கு அக்கதி நேருவதற்கு, நாற்பதாண்டு களுக்கு முன்புதான், அரியநாயகத்துக்கு ராஜயோகம் என்று சொல்லிச் சென்றார் வேதவித்தான சோதிடர். வேதியரின் வாக்கைக் கேட்டு வீடு திரும்பிய அரிய நாயகம் தன் பெற்றோரின் வறுமைப் பிணியை எண்ணிப் பார்த்தான்; சோதிட சாஸ்திரத்தையும் பூசுரரின் வாக்கையும் கூர்ந்து ஆராய்ந்தான்; மறுதினம் பொழுது புலர்ந்ததும் நம்பியானிடம் தெலுங்கு கற்றுக்கொண் டான். நாள் சில சென்றதும், விஜயநகருக்குப் பயண மாகப் பெற்றோரிடம் விடைகேட்டான். வறுமையால் வாடி நின்றும், அறிவறிந்த மைந்தனை விட்டுப் பிரிய அப் பெற்றோர் இணங்கவில்லை.

நம்பியானும் நம்பியும் அடுத்தடுத்து வற்புறுத்தி வந் தனர். ராஜயோகம் வரப்போகையில் குறுக்கே நிற்பதா என்று நம்பியான் வாதித்தான். முடிவில் அப் பெற்றோர் ஒருவாறு இசைந்தனர். பயணத்துக்கு ஏற்றதொரு நன்னாளை நம்பியானே குறித்துக் கொடுத்தான். அந் நன்னாளில் அரியநாயகமும் விடை பெற்றுக் கிளம்பினான்.

பையன் பயணமாதல் கண்டு தாய் தந்தையரின் நெஞ்சம் பதைத்தது; நயனங்கள் இரண்டும் நீரைப் பெருக்கின; வாயும் நாவும் குழறின. ஆயினும் மனமார, வாயார வாழ்த்தினர்! அமுத மொழியும் ஆசியுரையும் கூறி விடை கொடுத்தனர். நம்பியானுக்கும் புத்திர ஸ்தானமான அரியநாயகத்தைப் பிரியும் துக்கம் ஒரு புறம்; ராஜயோகம் கிட்டும் என்ற உவகை ஒரு புறம்; இரண்டும் மாறிமாறி ஊசலாடின. மூவரும் சேர்ந்து சிறிது தூரம் சிறுவனை வழிவிட்டுக் கன்றைப் பிரியும் பசுவேபோல் திரும்பினர்.

மூவரின் ஆசியுரையும், பெரியவரின் வாக்கும் துணை புரிய, அரியநாயகம் கால் நடையாக விஜயநகரம் நோக்கி ஞன். வழியிலே பட்டினியும் பசியும் நடையின் களைப்பும் நாயகத்தைப் பெரிதும் வாட்டின. எப்பாடு பட்டாலும் விஜயநகரம் சேரவேண்டும்; அரண்மனைச் சேவகத்தில் அமரவேண்டும்; பெற்ருேரின் கலியைத் தீர்க்கவேண்டும் எனும் உறுதிகொண்டு, அவ்விளைஞன் விரைந்து வழி நடந்தான். சின்ஞளில் விஜயநகரம் போய்ச்சேர, **நாகம நாயக்கர்** எனும் பிரபுவின் மாளிகையில் அம் மைந்த னுக்குக் கணக்கு வேலை கிடைத்தது.

நாகம நாயக்கர் தட்சிண மகா மண்டலேச்வரர். சக்கரவர்த்திக்கு அடுத்தபடியிலுள்ள பெரு மக்களில் சிறந்தவர். அவருக்கு நெடுநாளாக மக்கட்பேறு இல்லா திருந்தது. ஆதலினல், விச்வேச்வரனைக் குறித்துத் தவங் கிடந்து, காசி யாத்திரையும் சென்ருர். எனினும் புத்திர சம்பத்து வாய்க்கவில்லை. அரியநாயகம் வந்தமர்ந்ததும், மைந்த ஞெருவன் பிறந்தான். அவனுக்கு **விசுவநாதன்** என்று நாமஞ் சூட்டினர். நாளடைவில் கிருஷ்ணதேவ ரிடம் விசுவநாதனுக்கு அடைப்பத் தொழில் கிட்டியது. அவனது அழகையும் அறிவையும் கண்டு மகாராயர் மனங்களித்துத் தம் புத்திரனைப்போல்அபிமானித்து வர லாஞர். அத்தகைய விசுவநாதனும் அரியநாயகமும் உற்ற நண்பராயினர் ஒரு சில நாளுக்குள்! ஒத்த அறிவும் உணர்வும் நட்புரிமை ஊட்டுமன்ருே?

அவ்விருவரின் நட்பினைக் கண்டு நாகம நாயக்கர் மனம் பூரித்தார். அவர் மனைவியும் அப்படியே அகமகிழ்ந் தாள். அரியநாயகத்தின் அரிய அறிவையும் ஆன்ற குணத்தையும் கண்டு, பரவசமாஞன் விசுவநாதன். எனவே அரியநாயகம் உயிரும், விசுவநாதன் உடம்புமாக இருவரும் நேசம் மிகுந்து குலாவி வந்தனர். விசுவநாதன் ராஜசபை செல்லும்போது, அரியநாயகமும் உடன் செல் லுதல் வழக்கம். அவ்வேளை நாயகத்தின் முகப்பொலிவும் தோற்றமும் மகாராயரின் உள்ளத்தைக் கவரும். சக்கர வர்த்தியின் அறிமுகம் வளர வளர, நாயகத்தின் உத்தி

யோக்மும் உயர்ந்து கொண்டே வந்தது. முடிவில் அரமனைச் சேவகமும் கிட்டிற்று.

கிட்டிய சின்னுளுக்கெல்லாம், நவராத்திரி விழா வந்தது. விஜயநகர அரண்மனையிலே அப்பண்டிகை வெகு விமரிசையாக நடைபெறும். அவ்விழாவின் கடைசி நாளில் காட்டெருமைக் கடாவைப் பலி கொடுத்தல் பண்டைய வழக்கம். வனத்திலிருந்து பிடித்து வந்த கடாவோ பருத்துக் கொழுத்து, மூர்க்கமும் பொருந்தி யிருந்தது. மேலும் அதன் இருகொம்புகளும் வால்வரை யில் நீண்டு, வரிச்சல் பிடித்ததுபோல் இருந்தன. பலி கொடுப்பதானல், ஒரே வீச்சில் தலைவேறு, உடல் வேருக வெட்டித் தள்ளுதல் விதி. இல்லையேல், அது அபசகுனம். ஏதோ விபத்து நேரும் என்றே பலரும் எண்ணுவர். அங்ஙனம் வீசித் தள்ளலாம் என்ருல், கொம்புகளோ கழுத்துக்கு ஒரு பாதுகாப்பாக விளங்கி நின்றன. கொம் பிரண்டையும் சேர்த்து ஒரேவீச்சில் வெட்டித் தள்ளுதல் பெருவீரருக்கும் ஆகாத காரியம்.

மீண்டும் வேடுவரைக் கானகம் விடுத்து, வேருெரு கடாவைக் கொணரவோ அவகாசம் இல்லை. எனவே, மகா ராயரும் பிரபுக்களும் யாது செய்வதெனத் தெரியாமல் திகைத்து நின்றனர். அவ்வேளையில் அரியநாயகம் அரிய யோசனை ஒன்று சொன்னன். அதாவது, பலிபீடத்தின் அருகே சிறு குழியொன்று தோண்டி, அதனுள் பசும் புல்லை நிரப்பி வைத்துக் கால்களின் இடையே குழியிருக் கும் வண்ணம் கடாவை நிறுத்திஞல், புல்லைத் தின்னும் ஆசை கொண்டு கடா தன் கழுத்தை நன்கு வளைத்துக் குனிந்து குழிக்குள் தலையையிட்டுப் புல்லைத் தின்னும்; தின்னுகையில், அதன் கொம்புகளோ கழுத்தை விட்டு வேருக விலகி அந்தரத்தே நிமிர்ந்துநிற்கும்: அத்தருணம் அதனை ஒரே வெட்டில் வீழ்த்துதல் எளிது என்பதாம்.

மந்திரி திம்மராசு அதுகேட்டு ‘ஆம், ஆம்’ என்று தலை யசைத்தனன் தணியாக் களிப்புடன்! கிருஷ்ணதேவ மகாராஜனுக்கோ சிறிது ஐயமே நிகழ்ந்தது. அங்ஙன மாயின் “அடியேனே பலியை நிறைவேற்றித் தருவேன்”

என்முன் அரியநாயகம். அரைமனதுடன் நல்லது என்ருர் கிருஷ்ண தேவ ராயர்.

உடனே அரியநாயகம் தனது யோசனைக்கேற்பக் குழியைத் தோண்டி அதனுள் புல்லையும் பரப்பினன். மல்லர் இருவர் அக்கடாவைக் கொணர்ந்து நிறுத்தினர் பலிபீடத்தினருகே. பசும் புல்லைக் கண்டு கடாவும் பரவசமாகி, நன்கு குனிந்து புல்லைத் தின்னத் தொடங்கியது. அப்போது, அதன் கொம்புகள் இரண்டும் ஆகாயத்தே உயர்ந்து நின்றன. உடனே அரியநாயகம் தனது பட்டாக்கத்தியை உருவி, ஒரே வீச்சில் கடாவின் உடல் வேறு, தலைவேருக வெட்டிச் சாய்த்தான்.

மகாராயரும் பிரபுக்களும் அது கண்டு அளவிலா ஆனந்தம் அடைந்தனர். ஸாம்ராஜ்யத்துக்கு நேர இருந்த பேராபத்து நீங்கியதென ஏனையோர் ஆறுதல் அடைந்தனர். மந்திரி திம்மரசும் மனமகிழ்ந்தான். கிருஷ்ண தேவர் உடனே தம் கழுத்திலிருந்த முத்துவடத்தையும், மலர்மாலையையும் கழற்றி, அரியநாயகத்தின் கழுத்திலிட்டு, "உன் உதவியை என்றும் மறவேன்!" என்று பேசிப் புகழ்ந்தார். விஜயநகரும் அரியநாயகத்தை மறவாமல், என்றும் விசுவாசமே பூண்டிருக்கும் என்றனர் பிரபுக்களும். அவ்வாறு நவராத்திரி விழா இனிது நடந்தேறியது. அதன் முடிவில் அரியநாயகத்துக்கு அரமனைச் சேவகம் கிட்டிற்று. அன்று முதல் அரியநாயகம் என்ருல் விஜயநகரிலே அனைவருக்கும் ஒரு மதிப்பு!

## 3. ராஜயோகம்

ஆவது விதி எனின், அனைத்தும் ஆயிடும். விஜயநகரிலே காலடி வைத்த நாள் முதல், அரியநாயகத்துக்கு ஒரே யோகந்தான். அரமனைச் சேவகம் கிட்டியதுதான் தாமதம், யோகம் பொங்கிப் பெருகத் தலைப்பட்டது. ஒரு சமயம் ஸாம்ராஜ்யத்தின் கணக்கறிஞர் வரவையும் செலவையும் சரிபார்த்து, இருப்புக் கட்ட முனைந்தனர். ஒரு தினம், இருதினம், ஒன்பது தினமாகியும் இருப்பும் புள்ளியும் ஈடாகவில்லை. ஏடுகளைப்

புரட்டிப் பார்த்தும், மீண்டும் மீண்டும் புள்ளி போட்டும், பயனில்லாது பேர்யிற்று.

மறுதினம் மகாராரயரிடம் கணக்கு வழக்கு ஒப்புவிக்க வேண்டும். வகை காணுமல் கணிதப் புலிகள் கலங்கி நின்றனர். அத்தருவாயில் அரியநாயகம் தற்செயலாக அங்கே வந்தார்; முகக்குறிப்பிஞல் கணக்கரின் கலக்கத்தை உணர்ந்தார்; ஒரு நாழிகை நேரம் உடனிருந்து புள்ளிகளைச் சோதித்துப் பிழையைச் சூட்டிக் காட்டிஞர்; இருப்புக்கு ஏற்றவாறு கணக்கையும் சரிக்கட்டிக் கொடுத்தார். உடனே கணக்கரின் கலக்கம் விண்டது. அவர்களுக்கு ஆறுதலும் பிறந்தது. அரியநாயகத்தை அன்னவர் வாயார வாழ்த்தினர். கிருஷ்ணதேவ ராயருக்கு அச்செய்தி எட்டியதும், அரியநாயகமே அரசாங்கத்தின் பெரிய கணக்கராஞர்.

ஒருநாள் மன்னவைக்கு மல்லனெருவன் வந்தான். வடிவிலும் தோற்றத்திலும் அவனை வீமன் என்றே சாற்றலாம். "வட இந்தியாவெங்கும் மல் யுத்தத்தில் வெற்றிக்கொடி நாட்டிவிட்டேன்; தட்சிணத்திலும் கொடி போடுவதே கோட்பாடு. பந்தயம் பேசவல்ல மல்லர் இங்குளரோ?" என்று வீரியங்கூறி, விருதுகளைக் காட்டிஞன் அப்பலவான். சமஸ்தான மல்லரில் ஒருவரும் அவனை எதிர்க்க முன்வரவில்லை. சபையை நாற்புறமும் நோக்கிஞர் கிருஷ்ணதேவர். எங்கும் மௌனமே நிரம்பி நின்றது.

"இவனுக்கு ஏற்ற ஜோடி விஜயநகரில் இல்லையோ?" என்று வாய் திறந்து வினவ அவர் கருதும் சமயம், "அடியேன் இருக்கிறேன், ஆணை தரவேண்டும்" என்ருர் அரியநாயகம். சபையோர் பிரமித்தனர். ராயரோ நல்லது என்ருர். பல சொல்லி என்ன? அரையில் கச்சை கட்டி, உயரிய தோள் தட்டி, ஹுங்காரம் செய்து, "வடநாட்டு வீரமல்ல! வருக! நம் இருவரின் தோள் வரிசையை இச்சபையோர் பார்க்கட்டும்" என்று கோதாவில் இறங்கிஞர் கணித நூல் வல்லவர். உடனே மல் யுத்தம் மூண்டது. அம்மல்லன் அரியநாயகத்தின் கையைக் குலுக்குவான்போல் பாசாங்கு பண்ணிஞன்.

அரியநாயகமும் வந்தனம் என்றார். அவ்வளவில் நாய கத்தை வாரியெடுத்து ஆகாயத்தே வீசப் பார்த்தான் வடநாட்டான்.

தர்ம யுத்தம் செல்லாது என்று நாயகத்துக்குத் தோன்றியது. உடனே நம் நாயகம் அம்மல்லன் கையைப் பற்றிக் கரகரவென இழுத்து, அவனைக் காற்றாடிபோல் சுற்றினார்; மாறி மாறி முகத்திலும் மார்பிலும் தோளி லும் தாளிலும் குத்தினார்; தன் தலைகொண்டு அவன் தலையைப் படீரென மோதினார். மோதவே மல்லனது கழுத்தெலும்பு நற நற என்றது; சிரமெங்கும் சிவந்தது; தோளும் தாளும் நசுங்கின. அடி தாளாத மல்லனோ மூர்க்கமே மிகுந்தான்; நாயகத்தின் கழுத்தை நெரித் தான்; தொடை யிரண்டையும் பிசைந்தான்; தாளிரண் டையும் தனியே ஈர்த்தெறியக் கருதினான். மல்யுத்தம் மரண யுத்தமாக மாறிவிடுமோ என்று பலரும் அஞ்சினர். கழுத்தும் தொடையும் கசங்கியும், நம் அரியநாயகம் சிறிதும் தளரவில்லை.

இருவரும் சரிசமமான வீரமும் வலியும் வாய்ந்தோரே. நாயகத்துக்கோ அறிவும் லாகவமும் அதிகம். ஆதலின் எதிரியின் சூதை உணர்ந்து, தந்திரமாகவே போர் புரிந் தார். ஒரு நாழிகை யுத்தம் நடந்தது. வளர்த்துக் கொண்டு போக நாயகம் விரும்பவில்லை. மதிவலியும் புய வலியும் கொண்டு மல்லனை வாரிச் சாய்த்தார் தரையிலே.

அதன்மேல் மல்லன் நல்லறிவு கண்டான். 'ராட்சத னுக்கு ஒரு புரோட்சதன் உண்டு!' என்று கண்டான். காணவே "வடக்கே வெற்றிக்கொடி தூக்கி என்ன? தக்காணத்தில் சாய்ந்துவிட்டது!" என்று ஓலமிட்டான். இடவே, நாயகம் அவனைத் தூக்கி நிறுத்திக் கைலாகு கொடுத்து ராயரின் அருகே இட்டுச்சென்றார். இரு வரும் அம்மன்னவனை வணங்கி, ஆசனத்தில் அமர்ந் தனர். உடனே ராயர் வீரக் கழலும் வெற்றி வாளும் நாயகத்துக்குப் பரிசளித்தார். மல்லனுக்கும் சால்வை ஒன்று தந்தார். அடுத்த நாளே விஜயநகர ஸாம்ராஜ் யத்தின் தளபதிகளில் ஒருவரானார் அரியநாயகம்.

பின்னாள் சென்றது. கிருஷ்ணதேவராயர் திடீரென நோய்கொண்டார். மருத்துவ வல்லார் வந்து, அரிய ஔஷதங் கொடுத்தனர். நோய் நீங்காமல் முற்றியது. அந்தப்புரத்து மாதர் அது கண்டு பெருங் கவலை கொண்டு, சோதிடரை வருவித்து ஆயுள் பாவம் ஆராய்ந் தனர். திட்டமாக ஏதுஞ்சொல்ல இயலாமல் சோதிடர் தயங்கினர். மகாராயருக்கும் மகிஷியருக்கும் கவலை அதிகரித்தது. அஃதறிந்ததும், அரசர்க்கரசனது ஜன்ம நாளையும் கோளையும் அரியநாயகம் கூர்ந்து நோக்கினார்; "வாரமொன்றில் குணங்காணும், சத்தியம் இது. மயக் கமும் கலக்கமும் வேண்டாம். நோய் குணமானதும், நம் வேந்தர் வேந்தனுக்கு வெற்றிமேல் வெற்றி கிட்டப் போகிறது!" என்று உறுதி கூறினார்.

அரியநாயகம் உரைத்த வண்ணம், ஓர் ஆறு நாளைக்குள் மகாராயர் குணமடைந்தார். நகரமாந்தர் அனைவரும் ஆனந்தம் அடைந்து, "அரியநாயகம் ஒரு சஞ்சீவியே" என்று ஏத்தித் தொழுதனர். மகாராயரும் அவரை மார்புறத் தழுவி, அருஞ்சிறப்புப் பலவும் செய் தார். நோயொன்று தீர்ந்ததும், ராயருக்கு ராயச்சூர்க் கோட்டையின் நினைவு வந்தது; மரணப் படுக்கையில் கிடந்த தந்தைக்குத் தந்த வாக்குறுதியும் உடன் தோன்றியது. அவ்வளவுதான் தாமதம். விஜயநகரப் படைகள் வெகுண்டெழுந்தன; 'பீஜபூர் சுல்தானைப் புறங்காண்போம், ராயச்சூரை மீட்போம்' என்று சிங்க நாதஞ் செய்தன. பத்து லட்சம் காலாளரும் பரிவீரரும் கொண்ட சேனைக்கு மகாராயரே தலைமை வகித்துச் சென்றார்.

ராயச்சூரின் அருகே இருதிறத்தார் சேனைகளும் (1520-ம் ஆண்டு மே மாதம்) கைகலந்தன. பீஜபூரின் முன்னணியில் நின்ற குதிரை வீரர் எக்காளத்துடன் கிளம்பி, விஜயநகரப் படையின் முன்வரிசையில் பாய்ந் தனர். அக்கணமே இரு பக்கத்திலும் மாண்டு வீழ்ந் தனர் எண்ணிறந்த வீரர். முடிவில் பீஜபூர் வீரரின் மூர்க்கங்கண்டு, விஜயநகர வீரர் சற்றே பின்வாங்க

நேர்ந்தது. அத்தருணம் பீஜபூரின் காலாட்படை கடுகி வரவே, விஜயநகரரின் நிலைமை படுமோசமாயிற்று. நல்ல வேளையாக அத்தருணம் விஜயநகரருக்குத் துணைப் படைகள் வந்து தலைகொடுத்தன. அதனால் தோல்வி என்பது தொலைந்தது.

கிருஷ்ணதேவராயர் வீரவாசகங் கூறி ஊக்கம் ஊட்டினார். ஊட்டவே அவரது படைஞர் பரவசங்கொண்டு பகைவர்மீது பாய்ந்து, வாகைமாலை சூடினர். பீஜபூர்-சேனை பின்வாங்கி ஓடிற்று. அச்சமயம் பீஜபூர் தளபதிகளில் ஒருவன்—சலபத்கான் என்பவன்—முதுகு காட்டி ஓடுவதாகப் போக்குக் காட்டினான்; பின்புறமாக வந்து விஜயநகர வீரரின்மீது திடீரென விழுந்தான்; கூப்பிடு தூரத்தில் கிருஷ்ணதேவராயரையும் நெருங்கி விட்டான். தொலைவில் இருந்த படைத் தலைவரும் பிறரும் அப்பேராபத்தை எதிர்பார்க்கவில்லை. அனைத்தையும் உணர்ந்த அரியநாயகம் தம் படைஞருடன் விரைந்து, மகாராயருக்கும் சலபத்கானுக்கும் இடையே நின்று, சமர்புரியத் தொடங்கினார்.

அப்போதுதான் தலைக்குமேலுள்ள ஆபத்தை ராயரும் ஏனையோரும் கண்டுகொண்டனர். சூழ்ந்துள்ள ஆபத்தினைத் தடுக்க வீரர் பலர் விரையுமுன்னம், சலபத்கானைச் சிறைசெய்து கிருஷ்ணதேவர் முன்பு கொணர்ந்து நிறுத்தினார் அரியநாயகம். அதுகண்டு மகாராயர் மகிழ்பூத்து நாயகத்தைக் கட்டியணைத்து, "அரியநாயகமே! நீ அரிய நாயகம்தான். இம்மட்டோ? எனக்கு அரிய நாதனுமாம். என் உயிரைக் காத்தாயன்றோ? இன்று முதல், நீ 'முதலி' என்னும் பட்டம் பெறுவாய். மந்திரிமாரிலும் ஒருவன் ஆகுவாய். பல்லக்கில் செல்லும் பெருமையும் எய்துவாய். உன்னை அனைவரும் அரியநாத முதலியார் என்றே அழைத்தல் வேண்டும்" என்றார் எல்லாரு மறிய.

பின்னர், ஜயபேரிகை முழங்க, ராயச்சூரில் கிருஷ்ண தேவர் பிரவேசித்தார். அதனை வசமாக்கிக் கொண்டதும், விஜயநகரம் திரும்பினார் வெற்றிக் களிப்புடன்.

விஜயநகரம் திரண்டு வந்து, இறைவனையும் அரிய நாதரையும் ஆடம்பரமாக வரவேற்றது; ஒருமாத காலம் அந்த நகரம் வெற்றி விழாவில் திளைத்தது; வீரருக்கு விருந்தும் நடத்தியது; விருதுகளும் வழங்கியது!

வெற்றி விழா தீர்ந்ததும், முதலியாரின் திருமண விழாவையும் அந்நகரம் அதிசிறப்பாகக் கொண்டா டிற்று. கர்ண பரம்பரைச் செய்தி கூறும்வண்ணம், மகா ராயரின் சன்னிதானத்திலேயே அரியநாதரின் திருமணம் நடந்தேறியது. அப்போது, பத்து லட்சம் பூவராகன்கள் கடிமணச் செலவாயின. நாற்பதாயிரம் வேளாளர் நல் விருந்து—ராஜ விருந்து—அளிக்கப் பெற்றனர்.

முதலியாருக்கு மணமான மறுமாதம் அவர் (ஒன்று விட்ட) தங்கையின் கலியாணம் மெய்ப்பேட்டில் நிகழ்ந் தது. நேரில் சென்று அதனை நடத்த அரியநாத முதலி யார் பெரிதும் விரும்பினார். அரசாங்க அலுவல் இடந் தரவில்லை. ஆயினும் லட்சம் வராகனுக்கு வரிசைப் பொருள்கள் வாங்கி யனுப்பினார்; தங்கத்தால் ஒரு கலப்பையும் பொன்னால் தாற்றுக்கோலும் சீதனமாகக் கொடுத்தார். தொண்டை நாட்டிலுள்ள மெய்ப்பேடு வாசிகள் அது கண்டு, அரியநாயகத்தினால் மெய்ப்பேடு மேம்பட்டது என்று மனங்களித்தனர்; நம்பியாரையும் ஏகாம்பரனையும் தொழுது வாழ்த்தினர். பிறந்த இடம், புகுந்த இடம் இரண்டிலும் அங்ஙனம் இசை பரப்பி வாழ்ந்து வரலானார் அரியநாயகம். இந்நிலையில், அக் காலத்திய தமிழகத்தின் சரிதம் சிறிது கவனிப்போம்.

பதினாலாவது நூற்றாண்டின் தொடக்கத்தில், **அல்லாவுதீன் கில்ஜி** என்பான் டில்லிமாநகரிலிருந்து ஆண்டு வந்தான். அவனது படைத்தலைவனான மாலிக் **காபூர்** என்பானே திக்விஜயமாகப் புறப்பட்டுத் தெற்கே சேது வரையில்சென்று, ஜயஸ்தம்பம் நாட்டினான் என்பர். அப்போது மதுரைச் சீமையை ஆண்டு வந் தான் ராஜசிம்ம பாண்டியன் என்பவன். அவன் அம் மாலிக்காபூருக்குப் பயந்து **சின்னமனூர்** புகுந்து மறைந்து கொண்டான். அதன் விளைவாக ஓர் ஐம்பது வருஷ

காலம் (1315-1365) மதுரைச் சீமையில் எண்மர் முகம்மதியர் ஒருவர் பின் ஒருவராக ஆட்சி செலுத்தி வந்தனர் கோலாகலமாக.

தென்னாட்டிலுமா அன்னியரின் அழிம்பு? இதனைத் தடுத்தாக வேண்டும் எனும் கருத்துக் கொண்டே விஜய நகரம் வீறுகொண்டு கிளம்பிற்று அல்லவா? விஜய நகர வேந்தர் தென்னிந்தியா முழுதும் தனியரசு கொள்ள முனைந்தனர். அவ்வமயம் விஜயநகரின் ஆணை தாங்கிக் **கம்பன்ன உடையார்** என்பார் பெருஞ் சேனையுடன் தமிழகத்தில் புகுந்து, முகம்மதியரைப் போர்முகத்தில் வென்று, மதுரையிலே அன்னவரின் ஆட்சியையும் ஒழித்தார். அதன்பின் சோழ, பாண்டியர்கள் அச்சந்தீர்ந்து, விஜயநகரின் சிற்றரசராகத் தத்தம் நாடுகளை ஆண்டு வரத் தலைப்பட்டார்கள். 1559-ம் ஆண்டில் சோழ வேந்தன் **வீரசேகரன்** என்பான் மதுரையை ஆண்டு வந்த **சந்திரசேகர** பாண்டியனை வென்று, அப்பாண்டி நாட்டையும் கைப்பற்றிக் கொண்டான்.

உடனே சந்திரசேகரனும் அவன் புதல்வனும் விஜய நகரஞ் சென்றனர்; மகாராயரிடம் முறையிட்டுக் கொண்டனர். பணம் பத்துஞ் செய்யும் என்பரன்றோ? பாண்டியன் பன்னெடுநாள் காத்திருந்தும், மகாராயரின் பேட்டி கிட்டவில்லை. சோழ வேந்தனோ திரவியத்தை வாரியிறைத்து, விஜயநகர மந்திர சபையில் சிலரை வசமாக்கிக் கொண்டனன். பஞ்சைப் பாண்டியன் என்ன செய்வான்? மதுரை ஆலவாய்க் கடவுளே கதி, மீனாட்சியம்மையே துணை—என்று அங்கே தேம்பிக் கிடந்தான். அரியநாத முதலியார் அம்மந்திர சபையில் அங்கம் வகிப்பவர் அல்லவா? அவரது பெயரையும் புகழையும் கேட்டறிந்த பாண்டியன் அவரைச் சரணடைந்தான்.

இயற்கையிலேயே இளகிய நெஞ்சம்; எளியாரைக் கை தூக்கி விடும் சுபாவம்; நியாயம் நிலவவேண்டுமென்பதில் நாட்டம்; எல்லாம் ஒருங்கே வாய்ந்த முதலியாருக்கு மந்திர சபை அங்கத்தவரில் சிலரது மனநிலை கண்டு, நெஞ்சு பொறுக்கவில்லை. மந்திர சபையில்

பாண்டியனுக்காக நியாயம் வேண்டி வாதாடிப் பார்த்தார். முதலியாரின் ராஜயோகமும் மகாராயரின் பேரபிமானமுங் கண்டு, மந்திரிமாரில் சிலருக்கு அசூயை உண்டு. தவிர, புதிதாக அங்கம் வகிப்பவருக்கு அரசியல் வருமோ என்றும் அவர்களுக்கு அலட்சியம் மிகுதி. ஆனது பற்றி, அவரது நியாய வாதம் பலிக்கவில்லை. அதன் மேல், பாண்டியனுக்கு மகாராயரிடம் பேட்டி தேடிக் கொடுத்தார் முதலியார்.

சோழனது நடத்தை கேட்டதும், கிருஷ்ணதேவருக்குச் சீற்றம் பிறந்தது. தென்னிந்தியாவின் மகா மண்டலேசுவரரான நாகமநாயக்கரை ஏவினார் சோழ வேந்தன் மீது. அவ்வரசனைப் போரில் வென்று, பாண்டியனுக்குப் பட்டாபிஷேகம் செய்து வைக்க வேண்டும் என்பதே நாகம நாயக்கர் கொண்ட கட்டளை. பற்பல போர்களில் வாகையே சூடிவந்த நாகம நாயக்கர் ஒரு பெருஞ் சேனையுடன் புறப்பட்டார்; போர்முனையிலே சோழனைப் புறங்கண்டார்; சந்திரசேகரனுக்கும் முடி சூட்டினார். நாட்டிலே அமைதி நிலவும் வரையில் பாண்டிய நாட்டிலே தங்கி, நல்லமைச்சனாகவும் விஜய நகரப் பிரதிநிதியாகவும் துலங்கினார்.

அறமே நிரம்பி, அருளே பூத்த அருந்தவத்தினரையும் செல்வம் என்பது பேதித்து விடுமன்றோ? பாண்டி நாட்டின் வளமை நாகம நாயக்கரின் உள்ளத்தைக் கவர்ந்தது. மகா மண்டலேசுவரனாக இருப்பதினும், மன்னவனாக முழங்குவதே மேலென்றும் தோன்றியது. கெடுமதிக் கேற்பக் கயவர் சிலரும் நாகமருக்குத் துர்ப் புத்தி கூறினர். அவ்வளவில், நாகமர் தரும நெறி தவறினார்; நயவஞ்சகம் பூத்தார்; சேனையைத் தம் வசமாக்கிக் கொண்டார்; சந்திரசேகரனைச் சிறை செய்தார்; தாமே பாண்டியாதிபதி ஆனார். வேலியே பயிரைத் தின்று விட்டது!

அஃது அறியலானார் கிருஷ்ண தேவ ராயர். ஆத்திரம் பொங்கி விட்டது. விஜயநகர ஸாம்ராஜ்யத்தில் அத்தகைய அநீதி நடப்பதை அவர் சகிப்பது எங்

ஙனம்? "மோசமும் துரோகமும் புரிந்ததற்கு யாது காரணம்? முகாந்தரம் சொல்ல வேண்டும், நேரில் வந்து விளங்க உரைத்தலே மேல்" என்று ஒரு தூதுவனை ஏவினார் மதுரைக்கு. செல்வச் செருக்கினால் சிந்தை திரிந்த நாகம நாய்க்கர் நேரிலும் செல்லவில்லை; தூதன் மூலம் முகாந்தரமும் சொல்லியனுப்பவில்லை. 'ஆயிரம் மைலுக்கு அப்பாலுள்ள அரசு எம்மாத்திரம்?' என்றே இறுமாப்புக் கொண்டுவிட்டார்.

கிருஷ்ணதேவருக்குச் சினம் மிகுந்து நின்றது. சிறையில் கிடந்த பாண்டியனோ சோகம் மிகுந்து, அறிவழிந்து ஆவி நீத்தான். அவன் மகன் தந்திரமாகத் தப்பி விஜயநகரஞ் சேர்ந்து, முதலியாரிடமே தஞ்சம் புகுந்தான். முதலியாரின் நிலைமை இருதலைக்கொள்ளி எறும்பு போலாகிவிட்டது. பாண்டியனுக்குப் பரிந்து பேசினால், பழைய எஜமானனும், உயிர்த்தோழனது தந்தையுமான நாகம நாயக்கருக்குத் தீமை நேரும். பரிந்து பேசாவிட்டால், தஞ்சத்தைக் கைவிட்ட தீவினை வந்து சூழும்; தர்ம நெறியும் தவறிப்போகும். இந்நிலையில், ஸாம்ராஜ்யத்துக்கு மாசு நேரக்கூடாது என்பதே அவர் கொண்ட கோட்பாடு. ஆகவே, காலங்கருதி நின்றார் கொற்றவனைக் காண.

முதலியாரின் உதவிகொண்டு, மகாராயரைப் பார்த்தான் பாண்டியன். "விஜயநகர ஸாம்ராஜ்யம் தர்ம ராஜ்யம். இந்த ராஜ்யத்தில் அநீதி நடக்கலாகுமோ? பரம்பரையாக என் முன்னோர்கள் ஆண்டுவந்த நாடு. அதனை நாகம நாயக்கர் கைப்பற்றிக் கொண்டுவிட்டார். நான் பரதேசிபோல் பரிதவித்தல் முறையோ? தர்மந்தான் ஆகுமோ?" என்று கூறிக் கண்ணீர் பெருக்கினான். கிருஷ்ணதேவர் யாது சொல்வார்? சொல்-சூடு தாங்காமல் மனமுளைந்தார்.

அன்றிரவில் அவருக்கு ஊணுமில்லை, உறக்கமுமில்லை. பட்டமகிஷி வந்து வேண்டிக்கொண்டும், அவர் பாலும் பருகவில்லை. 'வெள்ளையாடையில் கருங்கறை பட்டதே! என்ன செய்யலாம்?' என்று துடித்தார்; நம்

கையே நம் கண்ணைக் குத்தியது போல், நாகமனே நமக்கு மாசு விளைத்தான் என்று மறுகினார். நித்திராதேவி ஒரொரு சமயம் எட்டிப்பார்த்தும், கிட்ட வரவில்லை. மன்னவன் மனம் மங்கிக் கிடந்தது போல், இரவும் ஒளி யின்றிக் கிடந்தது. பொழுது புலருவதை எதிர்நோக்கி நின்றான் அவ்விறைவன். அருணனை முன்னே யனுப்பி அவன் பின்னே தோன்றினான் கதிரவனும்.

கிருஷ்ணதேவராயர் அதிகாலையில் ஆண்டவனைத் தொழுதார்; அருங்கடன்கள் பலவும் ஆற்றினார்; ஆண்டவன் ஆலயஞ் சென்று, பாடித் துதித்தார். நேரே அத்தாணி மண்டபம் சேர்ந்தார். குறித்த நேரத்துக்கு முன்னதாகவே கொற்றவன் வந்தமை கண்டு, காவலாளர் கதிகலங்கினர்; இன்று யாது விளையுமோ என்றும் அச்சம் கொண்டனர்.

# 4. மதுரை மந்திரி

நல்லரசுக்கு நாகமனால் நேர்ந்த சிறுமை கண்டு கலங்கிய கிருஷ்ணதேவராயர் சினவெறி கொண்டு, மந்திரிகளையும் தந்திரிகளையும் போர் வீரர்களையும் வரவழைத்தார்; நாகம நாயக்கரது நயவஞ்சகத்தை நெஞ்சம் பதைக்க நவின்றார்; நம்பிக்கை மோசத்தையும் ராஜத் துரோகத்தையும் ஆத்திரம் பொங்க எடுத்துரைத்தார்; பின்பு, "வீரர்காள்! அந்த அநீதியை முறை செய்யவேண்டும்; அந் நாகமனது சிரத்தைப் பாதகாணிக்கையாகக் கொணர்தல் வேண்டும்; அங்ஙனம் வினையாற்றும் வீரன் ஏற்ற வெகுமதி பெறுவான்" என்று கர்ஜித்தார்.

நாகம நாயக்கரோ அதி வீரர்; அசகாய சூரர்; விஜயநகரின் விழுமிய பிரபுக்களில் ஒருவர்; தென் இந்தியாவின் மகா மண்டலேசுவரர். மேலும் அவர் மைந்தன் விசுவநாத நாயக்கன் பெரிய போர்வீரன்; மகாராயரின் கண்மணி போன்றவன்; சில ஆண்டுகளுக்கு முன்னம் கலிங்க வேந்தனை வென்றவன்; ராயச் சூரிலே முகம்மதியரை முறியடித்தவன்; பீஜபூருக்கு

உதைப்பு ஊட்டியவன். எனவே, 'வினையை முடிக்க வல்லேன்' என்று அச் சபையினரில் ஒருவருமே முன் வரவில்லை. அது கண்டு, "இதனை ஆற்றவல்ல வீர னெவனும் இங்கில்லையல்லவா? நல்லது. ராயரே புறப் படுவார்" என்று கிருஷ்ணதேவர் கொதித்தெழுந்தார்.

அச்சமயம் ஆங்கிருந்தோரிலே இருவர் ஏககாலத் தில் ஏதோ சிந்தித்தனர். சிறிது நேரம் பேசாமல் உட்கார்ந்தனர்; பிறகு, கண்ணிரண்டும் சிவக்க மீண்டும் அன்னவர் எழுந்தனர். இருவரில் ஒருவனையே முதலில் நோக்கினார் கிருஷ்ணதேவராயர்; சிறிது மனவாட்டம் தவிர்ந்தார். பின்பு அவனை நோக்கி, "விசுவா! என்ன இது? உன் நினைவுதான் யாது? தஞ்சம் புகுந்த பாண்டி யனது அரசை நாகமன் கவர்ந்ததும், முகாந்தரம் தெரிவி யாமல் மௌனம் சாதிப்பதும், அடுக்குமா? நியாயந்தான் ஆகுமா? இந்த ஸாம்ராஜ்யத்துக்குத்தான் சிறப்பா? அந்த நாகமன் சிரம் என் அடிமிசை வந்து படிதல் வேண்டும். உன் கருத்தும் துணியும் உடனே புலப்படுதல் வேண்டும்" என்றார்.

மகாராயர் அவ்வாறு கூறலும், விசுவநாதனுக்கோ துயரமும் துடிப்பும் தலைமிஞ்சின; பின்னும் ஏதேதோ அவன் சிந்தித்தான். இதற்கிடையில், அரியநாத முதலியாரும் ராயர் கண்ணில் பட்டார். "அன்பர் அரிய நாதரா அது? விசுவத்தின் முடிவை அறிவோம்; பின் னர், அவசியமாயின் நம் முதலியை விடுப்போம் வினை மீது" என்றார் அம் மகாராஜர். சபையோரில் சிலர், "ஈதென்ன விந்தை? எவன் ராஜத்துரோகியோ, அவ னது ஏகபுத்திரனையே மகாராயர் நாடுகிறார்! எதற்கும் நம்பிக்கையே காரணம்" என்று தம்முள் சிந்தித்தனர்.

விசுவநாதன் தன் ஆசனத்தை விட்டுச் சிறிது முன் சென்று, சபையின் நடுவே நின்று, "நிருப! என் பிதா பண்ணியது பெருந் தவறேயாம். ஆயினும் மைந்தனே தந்தைக்குத் தீங்கிழைத்தல் மாபாவமன்றோ? - என்று சற்றே தடுமாறினேன். பின்னரோ, 'மன்னவனே மாபெருந் தந்தை; அவன் கடன் ஆற்றுதலே என் முதற்

கடமை' என்று உணர்ந்தேன். தர்மம் தவறிய தகப்பன் மீது இதோ செல்கின்றேன், விடை தருக" என்ருன் எடுப்பாக. அங்ஙனமாயின் "நாகமன் சிரம் வேண்டாம், அவனை விலங்கிட்டுக் கொணர்ந்தால் போதும்" என்ருர் கிருஷ்ணதேவராயர்.

அவ்வண்ணம் கிருஷ்ணதேவர் கூறியும்என்ன? அவருக்கு நிம்மதி பிறக்கவில்லை. "தகப்பன்மீது பிள்ளையை ஏவியுள்ளோம். இரத்த பாசம் இலேசன்று; என்ன செய்யலாம்?" என்று அவர் சிந்தித்தார். முடிவில் "விசுவநாதன் விசுவாசமாகவே நடப்பான்; என்ருலும் முன் ஜாக்கிரதையுடன் இருத்தலே மேலாம். விசுவநாதனுக்கு அரியநாதன் எத்துணையிலும் தாழ்ந்தவன் அல்லன்; மிக உயர்ந்தவனே. மேலும், தென்னட்டு வளப்பம், மக்களின் பழக்க வழக்கம் எல்லாம் அரியநாதனுக்கு நன்கு தெரியும். ஆதலின் இவனையும் உடன் அனுப்புவோம்" என்று முடிவு செய்தார்.

ஆருயிர்த் தோழர்களான விசுவநாத நாயக்கனும் அரியநாத முதலியாரும் சதுரங்க சேனையுடன் தென்திசை நோக்கிச் சென்றனர். தந்தையும் தனயனும் போர்முகத்தே எதிர் எதிராக நிற்பதில் முதலியாருக்கு மனமில்லை. ஆதலின் போர் புரியாமல் காரியத்தை முடிக்க எத்துணையோ முயன்று பார்த்தார், அது பலிக்கவில்லை. பிதுர் பக்தியினும் ராஜவிசுவாசமே சாலச் சிறந்ததெனக் கருதி, மைந்தன் வந்திருத்தல் கேட்டு, நாகம நாயக்கர் வெஞ்சினங் கொண்டார். "நமது பழைய சேவகன் அரியநாதனை துணையாக வந்துள்ளான்" என்று அடங்கா ஆத்திரமும் அடைந்தார். உடனே நாகமன் சேனை சீறி யெழுந்து, சோழாந்தகனூர் (சோழவந்தான் என்று இப்போது மருவி வழங்குகிறது) சேர்ந்தது.

நேசர் இருவருக்கும் பக்கபலமாக விஜயநகரச் சேனையும் அவ்விடம் குறுகியது. அவ்வளவுதான். மூண்டது போர் கனகடுமையாக; நடந்தது ஒரு முகூர்த்தநேரம். அரியநாத முதலியாருக்கு ஆற்றுமல் நாகம நாயக்கர் போர்முனையில் முறிபட்டார். அவர் உயிர் அரிதில்

தப்பியது. உடனே அவரை வலிதில் பற்றினான் விசுவநாதன். அங்ஙனம் பற்றியவன் விலங்கேந்திய கரத்துடன் தந்தையின் முன் நின்று கண்ணீர் விட்டுக் கரைந்தழுதான். தர்ம சங்கடத்தால் தவிக்கும் தன்னை மன்னிக்குமாறு வேண்டினான். பிதாவின் பணியைச் சிரமேற் கொண்டு, தாயைத் தண்டித்த பரசுராமன் கதையை முதலியார் ஞாபகமூட்டி, அருமந்த மைந்தனுக்கு ஆசி கூறுமாறு நாகமனை வேண்டினார்.

தன் வினையையும் விதியையும் உணர்ந்த நாகமன் அவ்விருவரையும் நோகவில்லை; மற்று வாழ்த்தி, விலங்கு பூணவே இசைந்தார் விதியின்றி. அவ்வாறே நாகமனை விலங்கிட்டு விஜயநகரிலே கிருஷ்ணதேவரிடம் கொண்டு சேர்த்தனர் இரு பெரு வீரரும். மகாராயர் அதுகண்டு அடங்கா மகிழ்ச்சி கொண்டார்; "விசுவா! உன் விசுவாசமே விசுவாசம்" என்றார்; "அரியநாதா! உன் செயலின் அருமையே அருமை!" என்று புகழ்ந்தார். "யாது பரிசு வேண்டும்?" என்றும் வினவினார்.

அதற்கு அரியநாதர், "அரசே! நாகமன் நெறி தவறியது மெய்யே. எனினும் அவரது பழைய சேவகத்தை மறப்பதற்கில்லை. அவருக்கு உயிர்ப்பிச்சை அளிக்கவேண்டும். இதனையே அரும்பரிசாகக் கொள்வோம்" என்று இரந்து கேட்டார். மகாராயரும் பரவசம் கொண்டு, நாகமனை மன்னித்து முன்னைப் பதவியில் மீண்டும் அமர்த்தினார்.

மதுரைமாநகரிலே சுந்தர குமாரனுக்குப் பட்டஞ் சூட்டப்பெற்றது. அவன் நெறிப்படி நாட்டை முறை செய்து வந்தான் ஈராண்டுகாறும். பாண்டிய வமிசம் மறைந்தொழியும் காலம் போலும்! சுந்தரகுமாரன் திடீரென்று காலகதி யடைந்தான். அவனுக்குச் சந்ததியில்லை. பட்டத்திற்கு உரிய பாண்டிய குமாரரும் உடனே கிடைக்கவில்லை. முன்னம் முகம்மதியர் மொய்ம்பு கொண்ட காலத்திலே பாண்டியரது கிளை வமிசத்தினர் மதுரையை விட்டகன்று, தென்காசியைத் தலை நகரமாகக் கொண்டு ஆங்கிருந்து ஆண்டுவரத் தொடங்கினர். அக்கிளை வமி

சத்தாரில் ஏற்ற ஒருவனைத்தேடி, மதுரையில் அமர்த்தவும் விஜயநகரம் அக்கறை கொள்ளவில்லை.

இந்நிலையில், மதுரை வாசிகளில் சிலரேர், அரிய நாய்க் முதலியாரையும் விசுவநாத நாயக்கனையும் ஆட்சி புரிய அனுப்புமாறு விஜயநகரை வேண்டிக்கொண்டனர். அச்சமயம் விஜயநகரிலே மகாராயராக விளங்கியவர் **அச்சுத ராயர்.** இவருக்கோ மண்ணாசை மிகுதி. ‘சஞ்சி வரதப்பா என்றால், எங்கு வரதப்பா’ என்பது ஒரு மூதுரை. அதற்கேற்ப, மதுரை வாசிகளின் வேண்டுகோளை மனத்துள் கொண்டார் அச்சுதராயர். விசுவநாத நாயக்கனையும், அரியநாத முதலியாரையும் மதுரைச் சீமையைக் காவல் புரியுமாறு ஆணையிட்டனுப்பினர்.

அரியநாத முதலியாரின் அருந்திறனையும் பெருஞ் சூழ்ச்சியையும் விசுவநாத நாயக்கன் நன்கறிந்தவன். அன்றியும் ஸாம்ராஜ்யத்திலே முதலியாருக்குள்ள மிகுந்த செல்வாக்கையும் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் கண்டவன். ஆகவே விஜயநகரின் கர்த்தா அல்லது பிரதிநிதி என்ற முறையில் பாண்டி மண்டலாதிபதியாக முடிசூட்டிக் கொள்ளுமாறு அவரை வேண்டிக் கொண்டான். முதலியார் அதுகேட்டு, “அன்ப! உனது உதாரமொழி கண்டு உள்ளம் உவந்தேன். நீயே மகாமண்டலேசுவர பரம்பரையில் வந்தவன். உன் தந்தை இம்மண்டலாதிபதியாக இருந்தவர். ஆதலின் நீயே மண்டலாதிபத்தியம் கொள்ளுதல் வேண்டும். இதுவே அழகு, இதுவே தர்மம்” என்றார்.

விசுவநாதன் அதனை ஒப்பவில்லை. முதலியார் மீண்டும், “நண்ப! நானோ வேளாளண் மரபினன். மன்னவருக்கு முடிசூட்டுதலும், மகள் - கொடை நேர்தலும், தண்டத் தலைமை வகித்தலும், தளவாய்ப் பதவி கொள்ளுதலுமே எங்கள் பரம்பரை. நீயோ க்ஷத்திரிய மரபில் வந்தவன், ஆட்சி புரிவதற்குரியவன்; உன்னை முடி வேந்தனாக்கி மகிழ்வதே எனக்கு மாண்பளிக்கும். ஆதலின், கர்த்தாவாக நீயே முடிசூடிக்கொள். நான் உடனிருந்து, உற்றவிடத்து உதவி, உயர்நீதி கூறி, உன் அரசாட்சியை

ஓங்கச்செய்வேன்'' என்று சாற்றினர். விஜயநகர வேந்தரும் முதலியாரின் ஆலோசனைக்கு ஒப்பம் கொடுத்தனர். கி. பி. 1559-ம் ஆண்டு மதுரைமா நகரிலே விஜயநகரின் ராஜப்பிரதிநிதி அல்லது கர்த்தர் என விசுவநாதனுக்கு முடிசூட்டு வைபவம் நடைபெற்றது.

விசுவநாத நாயக்கன் பாண்டியநாதனுக விளங்கினன். அரசியலிலே அரும்பதவி, பொறுப்பு இரண்டையும் அரியநாதர் ஏற்றுக்கொண்டார். முன்னம் மதுரையரசிலே ராணுவ விஷயங்களை மேற்பார்க்கும் சேனுதிபதி (தளவாய்) வேறு, ஏனைய விஷயங்களை எல்லாம் கவனிக்கும் பிரதானி வேறு, என்றிருந்தது. நாட்டின் நிலையை நோக்குகையில், தளவாய், பிரதானி இருபதவிகளையும் முதலியாரே ஏற்கவேண்டுமென்ருர் மகாராயர். அரியநாதரின் போர்வலி, மந்திரச் சூழ்ச்சி, தந்திரத் திறமை, ஆட்சித்திறன் அனைத்துக்கும் வேறு அத்தாட்சி வேண்டுமோ?

அப்போது பாண்டிநாடிருந்த நிலைமை யாது? மாலிக்காபூரின் பராக்கிரமங் காரணமாக, ஓர் ஐம்பது வருஷகாலம் மதுரையிலே முகம்மதியர் கோல் கொண்டு நின்றனர் அல்லவா? பிறகு விஜயநகரத்தார் தலைதூக்கி, அம்முகம்மதியரை வெருட்டியோட்டித் தென்னட்டை ஒருவாறு அடிப்படுத்திக் கொண்டனர். கிருஷ்ணதேவராயர் பட்டத்துக்கு வருமுன்பு, பழைய பாண்டியமரபினர் ஆங்காங்கே அரசு கொள்ளத் தலைப்பட்டனர். கிருஷ்ணதேவரின் காலத்திலே சோழ வேந்தனது கொழுப்பையடக்க நேர்ந்தது. இதன் விளைவாக நாகம நாயக்கன் அரசுகொண்டு ஆண்மை செலுத்தலானுன். அந்நாகமனை வென்று பாண்டியனுக்கு முடிசூட்ட நேர்ந்தது. அப்பாண்டியன் சந்ததியற்றுப்போகவே விசுவநாத நாயக்கன் பாண்டிய கர்த்தாவாக முடிசூட்டிக்கொண்டான்.

அவ்வாறு ஓர் இருநூறுண்டு ஆட்சிப் புரட்சிகள் பல தோன்றியிருந்தமையின், நாட்டிலே நல்லமைதி நிலவவில்லை; கள்ளர், மறவர் முகம்மதியர், தொட்டியர், வடுகர் முதலியோர் ஆங்காங்கே அழிம்புகளும் அல்லல்

களும் இழைத்து நின்றனர். போர் வீரரிலும் சிலர் அக்கூட்டத்தாருடன் கூடிக்கொண்டு, கொள்ளைகளும் கொலைகளும் நடத்திவந்தனர். நாட்டுமக்களோ சொல்ல வொண்ணக் கஷ்டநஷ்டம் அடைந்து, தேம்பிக்கிடந்தனர். இவ்வளவும் போதாதென்று, பழைய பாண்டியரின் காதற்கிழத்தி மைந்தர் ஐவர் பஞ்சபாண்டியர் எனும் நாமம் தாங்கி, அரசு தங்களுக்கே உரியதென வாதும் போரும் நிகழ்த்தி நின்றனர்.

இவ்வளவையும் சமாளித்து ஒழுங்குசெய்யும் பொறுப்பு பிரதானியும் தளவாயுமான அரியநாத முதலியாரைச் சார்ந்தது. சோழநாட்டு எல்லையும் பாண்டிநாட்டு எல்லையும் வரையறுக்கப்படாமல் கிடந்ததை முதலில் முதலியார் கவனித்தார்; மதுரைக்குச் சொந்தமான தஞ்சைக்கு அருகிலுள்ள வல்லத்துக் கோட்டையைச் சோழநாட்டாருக்குக் கொடுத்தார்; சோழருக்குச் சொந்தமான திரிசிராப்பள்ளியை அதற்கு ஈடாகப் பெற்றுக் கொண்டார். ஆறலைத்து நின்ற கள்ளர்களைத் தம் ஆணைக்கு உட்படுத்தி, மக்களுக்கு நேர்ந்த சோர பயத்தை அறவே போக்கினர்.

அந்நாளிலே காவிரி நதியின் இருபாலும் அடர்ந் தோங்கிய காடுகள் அதிகம். அவற்றில் கள்ளர் கூட்டமும் துஷ்ட மிருகங்களும் பதுங்கியிருக்க, ஜனங்களுக்குத் துன்பம் பல நேர்ந்தன. உடனே அக்காடுகளை வெட்டியழித்து, நாடாக்கத் திருத்தினர்; எங்கும் நீர்ப்பாசன வசதிகளை நன்கமைத்தார்; ஆற்றோரமெங்கணும் அக்கிரகாரங்களையும், கிராமங்களையும் ஏற்படுத்தினர்; கிராமங்கள் தோறும் ஆலயப் பிரதிஷ்டை செய்தார்; திருவரங்கத்துப் பெரிய கோயிலையும் பழுதுபார்த்துப் புதிதாக்கினர்.

திரிசிராப்பள்ளி எல்லை நகரமாதலின், அங்கே கோட்டையும் கொத்தளங்களும் கட்ட நேர்ந்தது. ஆதலினல், அந்நகரைச் சுற்றிலும் ஒன்றின்பின் ஒன்ருக, இரு பெரிய மதில் சுவர்கள் எழுப்பினர். அவ்விரண்டினுக்கும் வெளியே அகன்ருழ்ந்த அகழியொன்று அமைத்தார்.

கோட்டைமீது கொத்தளங்கள் கட்டிக் காவலுக்கு வகை செய்தார்; தற்போது ஆங்குள்ள தெப்பக்குளத்தைத் தோண்டிப் படிக்கட்டுக்களும் கட்டினர். தாயுமானவரின் மலைக்கோட்டையை நன்ருகச் செப்பனிட்டார். அரசருக்குரிய அரண்மனைகளையும் மக்களுக்கு வேண்டிய ஆவணங்களையும் நிர்மாணித்தார்.

எல்லைப்புற நகரை அங்ஙனம் நிருமாணித்த பின்பு, மதுரைமா நகரின் மீது தளவாய் முதலியாரின் கவனம் பாய்ந்தது. பாண்டியரது காலத்தில் மதுரையில் எழும்பிய கோட்டை இடிந்தும் சரிந்தும் கிடந்தது. ஆதலின், அதனைத் தகர்த்தெறிந்து, நகரைச் சுற்றி நல்ல கோட்டை கட்டினர். வைகை நதியே அகழிபோல் ஒருபுறம் காவலாக விளங்கவே, வேறு அகழிதோண்ட அவசியம் நேரவில்லை. அக் கோட்டையில் எழுபத்திரண்டு கொத்தளங்கள் நிருமித்தார். பிற்காலத்தே அக்கோட்டை கொத்தளங்கள் இடிபட்டுப்போயின; என்ருலும், அவற்றின் சின்னங்களை இன்றும் ஒரு சிறிது காணலாம்.

வைகை நதியில் வெள்ளம் புரண்டு வருங்கால், மதுரைமா நகரம் மிகவும் சேதமுறும். அன்றியும் அதன் நீர் அனைத்தும் முன்னம் வீணுகியது. தளவாய் முதலியார் அது கண்டு பேரணை, சிற்றணைகள் கட்டினர்; பற்பல கால்வாய்கள் வெட்டி, அவற்றின் வழியே நீரைத் திருப்பி விட்டார். திருப்பவே எண்ணிறந்த பூமிகள் விவசாயத்துக்கு வந்தன. அதனல் மக்கள் பலருக்கும் பிழைப்பு ஏற்பட்டது. இவ்வளவு வேலைக்கும் திரவியம் வேண்டுமே, தாமும் விசுவநாதனும் தேடியிருந்த நிதியனைத்தையும் தட்டாது செலவிட்டார் அத்தளவாய்.

திருச்சியிலும் மதுரையிலும், அவ்விதம் பல வேலைகளைத் துவக்கி வைத்தபின், விசுவநாத நாயகன் அவற்றை மேற்பார்த்து வந்தான். அவ்விரு இடங்களிலும் அமைதி நிலவத் தொடங்கிற்று. ஆனல் திருநெல்வேலிப் பக்கத்திலோ குழப்பம் மிகுந்திருந்தது. இதனை யடக்க எழுந்தார் நம் தளவாய். அவருடன் திரண்ட சேனையொன்றும் சென்றது.

# 5. தமிழர்—தெலுங்கர்

காவிரி முதல் குமரி வரை ஒரு குடையில் குலவ வேண்டும்; எங்கும் அமைதியும் ஒற்றுமையும் நிலவவேண்டும். இஃதே விசுவநாதன், அரியநாதர் இருவரும் கடைப்பிடித்த கொள்கை. அதனை நிறைவேற்றுகையில், மதுரைக்குத் தெற்கே திருநெல்வேலிச் சீமையில் குழப்பமும் கொந்தளிப்பும் தலைவிரிகோலம் கொண்டன. இதன் காரணம் யாது? சிறிது ஆராய்வோம்.

சுந்தரகுமார பாண்டியன் சிவலோகம் சென்றும் என்ன? அவன் பரம்பரை மங்கிவிடவில்லை. அவன் பாட்டனது காதல் கிழத்தியின் மைந்தர் ஐவர் **கயத்தாறு** என்னுமிடத்தில் குறுநில மன்னவராகக் கோலோச்சி வந்தனர். "பாண்டிய மரபு பூண்டற்றுப் போயிற்றோ? நம்மவருக்குச் சொந்தமான பரம்பரைப் பதியிலே, அன்னிய வடுகர் ஆண்மை செலுத்துவதோ? வடநாட்டுத் தெலுங்கர் வீறான வேந்தரென நந்தமிழகத்தில் முடிசூடுவதோ? காதல் கிழத்தியின் குமாரராயின் என்ன? பாண்டிய வமிசத்தாரன்றோ? பரம்பரைப் பெருமையைக் கைவிடோம். அன்னியரை அண்டவிடோம்; தமிழரின் வீரத்தைத் தரணி முழுதும் பரப்புவோம்" என்று அந்த ஐவரும் ஆண்மை பேசி ஆர்த்தெழுந்தனர்.

அந்த ஐவரையும் **பஞ்ச பாண்டியர்** என்பர். கயத்தாறுக் காவலர் என்றும் இயம்புவர். அவர்களில் ஒருவன் பாரத வீமனை போன்றவன். ஆதலின் **தென்பாண்டி வீமன்** என்று சிறப்புப் பெயர் படைத்தவன். தென்பாண்டி வீமன் என்றால், அந்நாளிலே திருநெல்வேலிச் சீமையில் தமிழர் அனைவருக்கும் ஒரு மதிப்பு; மாற்றார் அனைவருக்கும் ஓர் உதைப்பு. பத்தாம் நூற்றாண்டிலிருந்தே, பஞ்சபாண்டியரின் மூதாதையர் தனியரசர்; எனினும் மதுரைப் பாண்டியருக்கு—மூத்த பாண்டியருக்கு—உட்பட்ட ஓர் சிற்றரசர்; எவருக்கும் புறங் கொடாத பெருவீரர்; எங்கும் புகழ்கொண்ட பேராண்மையாளர்.

அப் பஞ்சபாண்டியரின் ஆழ்ந்த தேசாபிமானம் என்ன? சுதந்திர ஆர்வமென்ன? சோர்விலா வீரமென்ன? பரம்பரைப் பற்றென்ன? பாண்டிய மரபார் என்பதென்ன? இவையெல்லாம் சேர்ந்து கொள்ளவே, திருநெல்வேலிச் சீமைவாசிகள் எல்லாரும் திரண்டெழுந்தனர்; தண்டிலே பேரிய இரண்டிலொன்று பார்ப்போமென்று வஞ்சினம் பூண்டனர்; வீராவேசத்துடன் கிளம்பி, அரிய ஆயுதங்கள் பலவும் தாங்கி, அப் பாண்டியருக்கு மூலபல மாயினர்.

அத்தகைய பஞ்சபாண்டியரையும் அவர் தம் துணைவரையுமே நம் அரியநாத முதலியார் எதிர்க்க நேர்ந்தது. பகைவரின் தேசபக்தி, சுதந்தரப் பற்று இரண்டையும் முதலியார் கண்கூடாகக் கண்டார். ஒருபுறம் களித்தார்; ஒருபுறம் கலங்கினார்; என் செய்வோமெனத் திகைத்தார்; விதியின்றிப் போர்முனையில் குதித்தார். அக்கணமே கொடுஞ்சண்டை மூண்டது. ஒரு பக்கம் தேசாபிமானம் சீறிநிற்கிறது. ஒரு பக்கம் ராஜசேவை ஓங்கி நிற்கிறது. இருதிறத்தாரும் நெடுநாள் இரணகளத்தில் வெட்டுப்பழி குத்துப்பழி காட்டினர்.

களப்பலியின் கோரம் கூறிமுடியாது. பார்த்தார் தளவாய் முதலியார்; பிரமித்தார்; பாண்டியரின் வீரங் கண்டு திகைத்தார் வெற்றிக்குறி காணுமல். பாண்டியர் ஐவரும் சிறிதும் சளைக்கவில்லை. அவர்களின் தோழர்களும் தளரவில்லை. வாகைசூட முடியாதென்றே முதலியார் கண்டார்; கதி கலங்கினார்! அந்நிலையில் மதுரையிலிருந்து விசுவநாத நாயக்கன் விரைந்து வந்தான். பெருஞ்சேனை யொன்றும் அவனுடன் வந்தது. துணைவலி பெற்ற தளவாய் மீண்டும் இரணகளத்தில் பெருமிதமாகப் பாய்ந்தார்.

ஓர் ஆறு திங்கள் அரும்போர் நிகழ்ந்தது. இரு கட்சியிலும் ஆயிரம் ஆயிரமாக வீரர் மாண்டு மடிந்தனர். அது கண்டு விசுவநாதனுக்கும் அரியநாதருக்கும் அச்சமே பிறந்தது; தோல்வியே இருவர் சிந்தையிலும் உதித்தது; தொடை நடுக்கமும் தலைகாட்டத் தலைப்

பட்டது! நிலையை நோக்கினர் முதலியார்; உயிர்க் கொலையைத் தடுக்க உன்னினர்.

பஞ்சபாண்டியர் மறைந்தாலன்றி, நாயக்க அரசு நடுவே முறியுமென்று தளவாய் கருதினர். இனிமேல் பின் வாங்குவது எப்படி? பின் வாங்கினல், பேரனர்த்தம் விளையும். எனவே நாயக்கனும் முதலியாரும் நெடுநேரம் சிந்தனையில் ஆழ்ந்து கிடந்தனர். முடிவில் முதலியார் ஓர் உபாயம் கண்டார். அதனை நாயக்கனிடம் விண்டார். அது யாதெனில் :—

"பஞ்சபாண்டியரோ கயத்தாற்றின் காவலர். கயத்தாற்றுப் பெருமானே அவர்களுக்குக் கண்கண்ட தெய்வம்; குலதெய்வமுமாம். நமக்கும் அத் திருமாலே கதி. அவ்வள்ளலின் உள்ளப்படி நடப்போம். அம் மாலவன் முன்னிலையில், தனிப் போர் புரிவோம். சேனைகளைப் பலிகொடுக்க வேண்டாம். நம் பக்கத்திலிருந்து ஒப்பற்ற ஒருவன் முன் வரட்டும்; அவர்களின் பக்கத்திலும் அங்ஙனமே ஒருவன் வரட்டும்; அந்த இருவரும் போர் புரியட்டும். பெருமாளே சாட்சி. வெல்லுவோருக்கே நாடாளும் உரிமை. தோற்றோருக்கோ வேற்று நாட்டுவாசம். ஈசன் செயலையும் விதியின் வலியையும் பார்ப்போம்" என்பதாம். இந்த ஏற்பாட்டினுக்கு இரு சாராரும் இசைந்தனர்.

நாயக்கன் பக்கம் முக்கிய புருஷனுக ரணரங்கத்தில் யார் இறங்குவது? நானே என்றான் விசுவநாதன். அன்று, நானே என்றார் அரியநாதர். மன்னவன் ஆணை என்றான் நாயக்கன். தளவாயின் விண்ணப்பம் என்றார் முதலியார்; மேலும், "அன்ப! பாண்டியநாதன் நீ! அவ்விதம் முடிசூடியவனும் நீயே. முதல் மன்னவனைக் கொண்டு விஷப் பரீட்சை பண்ண ஒண்ணாது. தளத்தின் பதியே தகுந்தவன். தனிச் சமருக்கும் அவனே ஏற்றவன். தளவாயின் தீர்ப்பு இது. பிரதானியின் பெரு முடிவுமாம். தீர்ப்பையும் முடிவையும் நாபதி ஏற்கவேண்டும். தட்டவொண்ணாது" என்று திடம்படப் பேசினர். "முடிக்கு ஒருவன், முனைக்கு ஒருவனா?" என்றான்

நாயக்கன். "ஆம்" என்றார் அரியநாதர். "வீண்வாதம் ஏன்? விசுவநாதனே இறங்குவான்; எவரும் தட்டிப் பேசக் கூடாது" என்றான் பாண்டியநாட் டதிபதி. தளவாய் வாய் மூடிவிட்டார்.

பஞ்சபாண்டியரின் பக்கத்திலோ, தென்பாண்டி வீமன் முன்வந்தான். ஏனைய நால்வரும் அதனை ஒப்ப வில்லை. நானே குதிப்பேன் என்று ஒவ்வொருவனும் மன்றாடினான். வீமனை முன்னிட்டே வாழவேண்டும் என்றனர் பிறரும். முடிவில் வீமனுக்கே சீட்டு விழுந்தது. அவ்வளவுதான். இருவகைப் படைஞரும் வரிசை வரிசை யாக எழுந்தனர்: பெருமாளின் சந்நிதியில் சேவித்தனர்; எதிரேயுள்ள மைதானத்தில் வந்து கூடினர். அவர் களுக்கு ஆவல் ஒரு பக்கம்; கவலை ஒரு பக்கம்; வந்து குழுமிய ஊராருக்கும் அப்படித்தான்.

"பெருமாளின் முன்னே இருவரின் தனிப் போர்! திருமாலின் அருள் எப்படியோ அப்படித்தான் இரு வரின் பாக்கியமும். தமிழருக்கு அரசா? தெலுங்கருக்கு அரசா? தமிழகத்தின் தலைவிதி பார்ப்போம்" என்று துடியாதார் கிடையாது.

தென்பாண்டி வீமனே முன்னதாக அப்பெருமாளின் சன்னிதியில் தோன்றினான்; அங்கமெல்லாம் நிலத்தில் தோய, அம்மாயவனை வணங்கினான். "மாதேவ! நான் மண்ணாசை கொண்டு, மற்போரில் இறங்கவில்லை. பரம் பரை மானம், தேசாபிமானம், இரண்டையும் காக்கவே இறங்கியுள்ளேன். வேறில்லை; உன் தெய்வச் சித்தம் எப்படியோ? ஏழையேன் அறியேன். இன்னருள் புரிக!" என்று துதித்தான்; இரு கைகூப்பி மகாசபையையும் வணங்கினான்; ஜயித்தால் சிம்மாசனம்; இன்றேல் வீர சுவர்க்கம் என்று தோள் தட்டினான்; "விசுவநாத! விரைந்து வருக!" என்று கர்ஜித்தான். அவனும் உடனே போரில் இறங்கினான்.

இருவரும் ஏற்ற ஜோடி; இருவருக்கும் எடுப்பான தோற்றம்; கம்பீரமான பார்வை; ஒத்த வயது; உயரிய

வலி. சிறிது நேரம் இருவரும் சும்மா இருந்தனர். பின்பு சிங்கநாதம் செய்து இருவரும் எதிர் எதிரே நின்றனர். ஒருவரை யொருவர் வணங்கினர்; கைகுலுக்கினர்; குறு நகை புரிந்தனர்; கட்டியணைந்தனர். கடுகி மற்போரில் முனைந்தனர். ஒருவரை யொருவர் இறுகக் கட்டினர்; இணைந்து புரண்டனர்; மீண்டும் எழுந்தனர். பின்னுக்கு வாங்கினர்; முன்னோக்கி வந்து முட்டினர்; மொய்ம்பு கூட்டினர்; மெய்வலி காட்டினர். இடசாரி வலசாரி வந்தனர்; இங்கும் அங்கும் பார்த்தனர்; ஒருவரை யொருவர் வாரித் தரையில் வீச முயன்றனர்; மற்போர் வரிசை யெல்லாம் விளக்கினர்; ஒருவருக்கும் அப்போரில் வெற்றி, தோல்வி கிட்டவில்லை. பின்பு இருவரும் வாட் போரில் விருப்புக் கொண்டனர். உடனே உடைவாளை உருவினர்; உயரக் காட்டினர், உறுத்து வீசினர்; ஒருவர் சிரத்தை ஒருவர் குறி பார்த்தனர்.

விசுவநாதனுக்கு அங்கமெல்லாம் காயம். பெருக் கெடுத்தது உதிரம். வழிந்தோடியது பூமியில். அது கண்டு, சற்றே திகைத்தான்; தரையிலும் சாய்லானன். உடனே தென் பாண்டி வீமன் விரைந்து நாயக்கனைத் தாங்கிக் கொண்டான். தாகத்துக்குத் தேமதுரப் பழச் சாறு கொடுத்தான்.. விசுவநாதனுக்கு வெட்கம் வந்து ஒரு பக்கம் மூடிக்கொண்டது; விருப்பும் ஒரு பக்கம் வளர்ந்தோங்கியது. உடனே வாளமரில் வீறுகாட்ட முனைந்தான்.. வீமனும் ஆவேசங்கொண்டு உறுமினன்; பட்டாக்கத்தியைப் பாங்காக வீசினன். பல சொல்லி யென்ன! இருவரும் படுகாய முற்றனர்; பாரில் சாய்ந் தனர். விசுவநாதனுக்கு உயிர் தக்கியது. வீமனுக்கோ உயிர் பிரியும் தறுவாய்! "கயத்தாற்றுப் பெருமானே! உன் கருணை இவ்வளவு தானோ? எனக்கு வீர சுவர்க் கமே பிராப்தி போலும்" என்று கூறிக் கண்மூடினன் கவலையின்றி.

"பாளை மணம் கமழ்கின்ற கயத்தாற்றுப் பெரு மாளே! வேளை யிதில் உன் கருணை இருந்தவாறு அழ காமோ? தெலுங்கர் வெல்லத் தமிழர் சாய்தலும் உன்

விதியோ?" என்று பலரும் கண்ணீர் வடித்தனர். ஏனைய நான்கு பாண்டியரும் யாது செய்வர்? விதி வலியும் மாயன் அருளும் இருந்தவாறு; பாபம் பாபம் என்றியம்பிப் போர் ஒழித்துத் தெற்கு நோக்கினர்.

அப்பால், பட்ட படுகாயங்களைக் கட்டியாற்றிக் கொள்ள, விசுவநாத நாயகன் மதுரைக்குத் திரும்பினன். கயத்தாறனைத்தும் நாயகன் வசமாயிற்று. வெற்றிமாலை பெற்று விட்டாலும், தளவாய் அரியநாதர் அக்களிப்பில் திளைக்கவில்லை. அவருள்ளத்தில் ஒரு கலக்கமே குடி கொண்டது.

மேலும் தெற்கு நோக்கி முதலியார் சென்றார்; ஆங்காங்குள்ள கோளாறுகளையும் கொந்தளிப்பையும் சாமோபாயங்கொண்டு சரி செய்தார். திருநெல்வேலி சேர்ந்து, அந்நகரை முற்றிலும் புதுப்பித்தார்; அழகு படவும் அமைத்து வைத்தார்; அங்கே எழுந்தருளியுள்ள நெல்வேலிநாதரின் ஆலயத்தைச் செப்பஞ் செய்தார்; அங்கே ஆயிரக்கால் மண்டப மொன்று நிர்மாணித்தார்; இன்னும் பல திருப்பணிகளும் செய்வித்தார்; அதன் பின்னர், தாமிரவர்ணியின் இரு கரையிலும் காடழித்து நாடாக்கினார்; சோலைகளும் சாலைகளும் செழித்தோங்கச் செய்தார். ஆற்றோரங்களில் அக்கிரகாரங்களும் அமைத்தார்; பாளையங்கோட்டை எனும் இடத்திலே பெரிய கோட்டை ஒன்று எழுப்பினார்.

மேற்கு மலைச் சாரலிலே, கம்பம் என்றொரு கோட்டை உண்டு. அங்கிருந்த குறுநில மன்னரான சோழ மரபினரில் சிலர் அக்கோட்டைக்குள் தங்கி, அரியநாதருக்கு அல்லல் பல இழைத்தனர். வடகரை என்னும் பிரதேசத் தலைவனது துணை கொண்டு, அம்மன்னவரையும் அடிப்படுத்தினார் அரியநாத முதலியார்.

அக்காலத்தில், ஆனைமலை முதல் குமரிமுனை வரையில் சேதுபதிக்கு அடக்கம். அச்சேதுபதி எந்நாளும் விஜய நகர ஸாம்ராஜ்யத்தை ஒரு பொருட்டாக எண்ணியதில்லை. நினைத்த மாத்திரத்தில், ஆயிரக்கணக்கான மறவரைத் திரட்டி, மொய்யமர் புரிய அவன் பின் வாங்கி

யதுமில்லை. இஷ்டப்பட்டால், அவ்வேந்தல் காணிக்கை செலுத்துவான்; இல்லையேல் வாளா இருந்து விடுவான். அத்தகைய சேதுபதியும் தளவாய் முதலியாரின் முன்னே ஆற்றாது போயினன். இருவருக்கும் ஓர் உடன்பாடு பிறந்தது.

அப்பால் அவர் கொங்கு நாடு சென்று, அங்குள்ள குறுநில மன்னரையும் மடக்கினர். உடனே, கோவையும் சேலமும் அவருக்கு அடிபணிந்தன; கப்பமும் கட்டின. தளவாயின் திக் விஜய விளைவாக மதுரை நாயக்கரின் செங்கோல் நாற்றிசையிலும் பரவியது.

பரந்த ராஜ்யங் கொண்டால், அதனைப் பகைவரி னின்றும் பாதுகாக்க வேண்டுமல்லவா? ஆனது பற்றி, எல்லைப்புறமெங்கும் பற்பல கோட்டைகள் அமைக்கப் பட்டன. வடக்கிலும் வடமேற்கிலுமாக மட்டும் 24 கோட்டைகள் எழுந்தன. அவற்றுள் முதன்மை வாய்ந்தது, மைசூருக்கும் கோவைக்கும் இடையிலுள்ள சத்தியமங்கலக் கோட்டை. அதன் முதன்மை கருதி, நம்பிக்கைக்குகந்த மாகாண கவர்னர் ஒருவன் அங்கே இருந்து வரலானான்.

பவானித் தாலுகாவிலே காவேரிபுரம் ஒரு கோட்டை யாம். இக் கோட்டை 1859-ம் ஆண்டு வரை நின்று நில விற்று. சாமபுரத்தில் எழுந்த கோட்டை மிக்க பல மானது. 1856-ம் ஆண்டில் அதனை இடித்து அதிலுள்ள செங்கற்களை மட்டும் ஆயிரக்கணக்கான ரூபாய்க்கு விற்றனர். பவானிக் கோட்டையும் பிரசித்தி பெற்ற தாம். இதன் இடிந்த சுவர்களை இன்றும் அங்கே காண லாம். ஆண்டியூர்க் கோட்டை முற்றிலும் கருங்கல்லால் அமைந்தது. சிற்ப வேலைப் பாடமைந்த சிவாலய மொன்று இன்றும் அங்கே விளங்கா நிற்கும். தணை நாயகன் கோட்டை மற்றொன்றாம்.

வடமேற்கிலே அட்டில் துறை, பாகேசுவரன் கோட்டை, மலைக்கோட்டை முதலியன குறிப்பிடத் தக்கன. மேலே கண்டவை எல்லாம், கோவைக்கு அப் பாலுள்ளன. சேலமாநகரிலும் ஒரு கோட்டை எழுந்தது.

தவிர, ஓமலூர், சேந்தமங்கலம், அனந்தகிரி, பாமட்டி, மோகனூர், நாமக்கல், சங்கிரிதுர்க்கம், திருச்செங்கோடு இவற்றில் கிளம்பிய கோட்டைகளும் பலம் பொருந்தியவை. ஒவ்வோரிடத்திலும் கோட்டைக்குரிய காவலாளருடன் தண்டொன்றும் இருந்து வந்தது. ஹைதர் கலாப காலத்திலும், அதற்கப்பால் நிகழ்ந்த குழப்பத்திலும், கோட்டைகளில் பல இடியுண்டு போயின. என்றாலும், இடிந்த பாழைக்கொண்டு, கோட்டையின் புராதன நல்லமைப்பை ஒருவாறு ஊகித்துணரலாம்.

தற்காலத்திலே ஐரோப்பாவிலுள்ள கோட்டைகளைப் பிரமாதமாகப் புகழ்ந்து பேசுவார்கள். தளவாய் முதலியார் அன்று கட்டிய கோட்டைகள் பலவும், பின்னாளில் பழுதுபட்டு விட்டமையால், மேனாட்டுக் கோட்டைகளுடன் ஒப்பிட்டு உணரவும் உரைக்கவும் இயலவில்லை. எனினும், கோட்டைகளின் உள்ளே அமைந்த கள்ள அறைகள், இருட்டுப்பாதைகள், சுரங்கவழிகள், மருந்துக்கிடங்குகள், பீரங்கி மேடைகள் இவற்றை உன்னி நோக்கின், நம்தேசக் கோட்டைகள் ஐரோப்பியக் கோட்டைகளைவிட ஏற்றம் வாய்ந்தன என்றே எளிதில் புலப்படும். இயற்கையான மலையரண், ஆற்றரண், காட்டரண் வாய்ந்த இடங்களிலே, அசுரமுயற்சியுடன், கூரிய மதிவன்மையால் கிளம்பிய கோட்டைகளின் அமைப்பு தற்காலத்தவரையும் பிரமிக்கச் செய்யும். தஞ்சை, திருவாங்கூர் எல்லைகளில் எழுந்த கோட்டைகளும் அங்ஙனம் ஆகும்.

எல்லைப்புறத்தில் மட்டும் கோட்டைகள் எழுந்தன என்பதில்லை. மதுரைநாதன், மண்டலத்தலைவன், கோட்டைக் காவலன், பாளையக்காரன், நாட்டாண்மைக்காரன் முதலிய பற்பல அதிகாரிகள் வதிந்துவந்த இடங்களிலும் பலவாறான கோட்டைகள் பெருமிதமாக எழுந்தன. அவை ஆங்காங்குள்ள நிலைமைக்கும், அதிகாரியின் தன்மைக்கும் ஏற்றவாறு மண், செங்கல், பாறை முதலியவற்றால் ஆக்கப்பட்டன. நாமக்கல், திண்டுக்கல், அழகர்மலை, சத்தியமங்கலம் முதலிய முதல்தரமான கோட்டைகளின் தலைமைக் காவல் பதவி எல்லாருக்கும் கிட்டாது. பரம விசு

வாசமும் பெருந்திறமையும் அரிய ஆற்றலும் படைத்த பெருமக்களுக்கே கிட்டும்.

மதுரைமாநகரில் எழுந்த கோட்டை மிக முக்கியமானது. அதன் அமைப்பையும் எழுச்சியையும் தளவாய் முதலியார் நேரிலிருந்து கவனித்தார். சில சமயங்களில் விசுவநாத நாயக்கரும் கவனிப்பதுண்டு. பாண்டியரின் காலத்தில் மீனாட்சியம்மையின் ஆலயத்தைச் சுற்றிமட்டும் ஒரு சிறிய கோட்டை இருந்தது. அதனை இடித்துத் தள்ளிவிட்டு, நகரைச் சுற்றிலும் ஒருகோட்டை கட்டினார் முதலியார். அக்கோட்டைக்கு உள் மதில் ஒன்று, வெளிமதில் ஒன்று. இரண்டும் மிகப்பெரியன; விசாலமும் வாய்ந்தன. இலகுவில் கோட்டையைத் தாக்கவோ எதிர்க்கவோ இயலாது. கோட்டையிலே எழுபத்திரண்டு கொத்தளங்கள்.

ஒவ்வொரு கொத்தளமும் ஓரொரு பாளையக்காரரின் காவலில் இருக்கும். நிரந்தரமாக அங்கே காவலாளர்கள் இருப்பார்கள். அவர்கள் அந்தந்தப் பாளையத்தைச் சேர்ந்த தளபதிக்கே உட்பட்டிருப்பார். அத்தளபதியோ ஸ்தானாதிபதி போலவும் அரசவையில் வீற்றிருப்பான். மீனாக்ஷி சுந்தரேசுவரரின் ஆலயங்காரணமாக மதுரைக்கு மகத்துவம் அதிகமே. ஆயினும் ராஜீய காரணங்களை மதித்துத் திரிசிரபுரத்தைத் தலைநகரமாகக் கொண்டார் விசுவநாத நாயக்கர்.

திருச்சிக்கு அருகே ஸ்ரீரங்க க்ஷேத்திரம் இருக்கிறது. ஆதிகாலந்தொட்டு அளவற்ற யாத்திரிகர் அத்தலத்துக்கு வந்துபோவர். தஞ்சை வேந்தரின் வசம் திரிசிரபுரம் இருக்கும் வரையில், யாத்திரிகருக்குத் தக்க பாதுகாப்புக்களும், வசதிகளும் கிடைக்கவில்லை. திருடர் பயமும் மிகுதியாய் இருந்தது. ஆதலின் தஞ்சைக்கு அடுத்த வல்லம் கோட்டையை ஈடாகக் கொடுத்து, அத்திரிசிரபுரத்தை அரியநாதர் பெறலானார். பெற்றதும் அந்நகரம் அழகிய அமைப்புப் பலவும் எய்தியது. நகரும் பிரபலமாயிற்று; மக்கள் பலர் வந்து குடியேறினர். யாத்திரிகர்களும் நிம்மதியுடன் அமோகமாக வந்து போயி

னர். திரிசிரபுரம் பலவகையிலும் பெருகிப் பெருமை யடைந்ததற்கு, முதலியாரின் முயற்சியே மூல காரணம்.

திரிசிரபுரத்திலே காவேரிப்பாலத்தின் கிழக்கே தில்லைநாயகம் பிள்ளை படித்துறை உண்டு. பற்பலரும் வந்து நீராடி ஜபதபம் செய்வதற்கு அப்படித்துறை மிக வசதியானது. ஆடிவெள்ளம் புரண்டு வருங்காலத்தில், அப்படித்துறையின் மகத்துவம் புலப்படும். தில்லை நாயகம் பிள்ளை என்பார் அரியநாயகத்தின் வழித்தோன் றல் என்பர் சிலர். அன்று, அரியநாயகத்தின் பெயரை நிலைநாட்ட முற்பட்டவர் என்பர் வேறு சிலர். அரிய நாயகமே அப்படித் துறைக்கு அடிகோலியவர் என்பர் மற்றுஞ்சிலர். இது எங்ஙனமயானும் சரி, நாயகத்தின் பெயரால் அப்படித்துறை வழங்கி வருகிறது; பலருக்கும் பயன்படுகிறது.

3231

## 6. பாளைய வகுப்பு

**பா**ரந்த ராஜ்யமொன்று தேடிவிட்டார் தளவாய் முதலி யார். அதனைக் குட்டி ஸாம்ராஜ்யம் என்றே கூற வேண்டும். அதில் சேர, சோழ, பாண்டி, கொங்கு மண் டலங்கள் அடக்கம். அப்பெரிய பூப்பரப்பை ஒரு குடைக் கீழ்க் கட்டியாள வேண்டும். ஆங்காங்கே பலவாறுன நடையும் உடையும், பழக்கமும் வழக்கமும் கொண்ட பெரு மக்களே மிக அதிகம். அம்மக்கள் தனிக் காட்டு ராஜாக் களே போலவும், குட்டியரசர் போலவும் உள்ளவர்கள். அவர்களை ஒரு கட்டுக்குள்ளடக்கின், நாட்டுக்கு நலம் பல விளையும்; அரசும் ஓங்கி உய்ரும்.

அவர்கள் மூவகையாவர். மூவேந்தர் காலந் தொட்டு, நாட்டிலே ஆங்காங்கு முதன்மையுற்று, அரசியலில் அமைச்சு, தளபதி முதலிய அரும்பதவி வகித்த ஏந்தல் களின் பரம்பரை ஒருவகை. படையெடுப்புக் காலத்தின் போர்க் குழப்பத்திலே தம் புயவலியால் மேன்மை வாய்ந்து, சிறு சிறு படைகளுக்குத் தலைவர்களாகி, ஊர் களையும் கோட்டைகளையும் கைக்கொண்டு, தூசில்கள்

ஆனவர்கள் ஒரு வகை. கம்பன்ன உடையார், நாகம நாயக்கர் இவர்களின் காலங்களிலே தளகர்த்தராகவும், அரசாங்க அதிகாரிகளாகவும் விஜயநகரிலிருந்து வந்து, பாண்டிவள நாட்டிலே குடியேறிய கோமான்கள் ஒரு வகை.

முதல் இருவகையாரும் பரம்பரையாகத் தமிழக வாசிகள். அவர்கள் அனைவரும் ஒரே ஜாதி; ஒரே மதம்; ஒரே நடை நொடியும் வாய்ந்தவர்கள். மூன்றாவது வகையாரோ, வடக்கே விஜயநகரிலிருந்து வந்த தெலுங்கு அல்லது வடுகப் பிரபுக்கள்; மதுரையிலே விசுவநாதரின் ஆட்சி ஏற்படுவதற்கு உதவியும் ஊழியமும் புரிந்தவர்கள். எனவே, அரசியலில் கனமும் தனமும், பரிவும் பரிசும் நாடி நிற்பவர்கள்; அரசாளும் இனத்தைச் சேர்ந்தோம் என்றும், போர் முகத்திலே வெற்றி கொண்டோமென்றும், தருக்குக் கொண்டவர்கள்; நாட்டு மக்களினும், நனி சிறந்தோம் எனும் நினைப்பும் மிகுந்தவர்கள்.

புராதனத் தமிழ்ப் பெருமக்கள் தம்முள் ஒற்றுமை கொள்ளாமையால், வலிமை குன்றிப் போர் முனையிலே வடுகரிடம் தோல்வி கொண்டனர். ஆயினும் வேற்றரசின் எழுச்சி கண்டு, அவர்களுக்கு உள்ளூர ஆத்திரமும் அதிருப்தியும் மிகுதியாக உண்டு. அன்னிய வடுகருக்கு அடங்கி வாழ்வதா என்னும் துடிப்பும் அன்னவரிடம் தணியாதிருந்தது. தமிழகச் சமூகத்துக்கோ அவர்களிடம் பக்தி விசுவாசமும், பற்றும் பிறவும் மிக அதிகம். அத்தகைய நாட்டுப் பெருமக்களை அலட்சியம் செய்யாமல், அணைத்து ஆதரிக்க வேண்டும். அவர்கள் ஒருவர் இருவரன்று, பற்பலராவர்.

உதாரணமாக, அரசிழந்தோமே என்று ஆதி பாண்டிய வமிசத்தார் படபடத்து நின்றனர். வீர மறவர் குலத் தலைவனான சேதுபதி ஒரு பக்கம் சீற்றம் தணியாதிருந்தான். தமிழ்ப் பெரு மக்களில் முதன்மை ஸ்தானம் சேதுபதிக்கே உரித்தாகும். புதுக்கோட்டைத் தொண்டைமான் ஒருபுறம் நின்றான் பொருமலுடன். மதுரைமாநகருக்கு அருகேயுள்ள கவுண்டன் கோட்டை, வெள்ளிய

குண்டம் இவற்றில் கவுண்டத் தலைவர்கள் பரம்பரையான கர்வத்துடன் இருந்தார்கள்.

திருநெல்வேலிச் சீமையின் பெருமக்களோ, வணங்கா முடிமன்னர் போன்றவர்கள். **ஏழாயிரம் பண்ணை, சிவகிரி** இவற்றின் குரிசில்கள் ஒரு புறம்; **தென்னம்பி ஆண்டு கோண்டார், வரதுணாராம வன்னியர்** இவ்விரு ஏந்தல்கள் ஒரு புறம். நடுவக்குறிச்சியின் நாயகமான **தூற்றலத் தேவர்** ஒரு புறம்; தென்னாட்டு வேங்கை எனப்படும் **சிங்கம்பட்டிச்** சீமான் ஒரு புறம்; **ஊத்துமலை மருதப்பதேவ** ரென்ன; ஊர்க்காட்டுத் தலைவரென்ன, இவர்கள் ஒருபுறம்; கோவை, சேலம் ஜில்லாக்களிலும் அத்தகைய பெரு மக்கள் அதிகமே.

குட்டி அரசர் போன்ற அப்பெரு மக்களைத் தட்டிக் கொடுத்துத் தனிச்சிறப்பளிக்க வேண்டும். வட நாட்டி லிருந்து வந்தோருக்கு இம்மியளவும், குறையாத பதவி யளித்தால்தான், அவர்கள் நிம்மதியுடன் துலங்குவர். அன்னியருக்கு நம்மிலும் உயரிய வாழ்வா என்று அவர்க ளிடையே ஆத்திரம் ஓங்கின், அனர்த்தம் விளையும். எனவே தெலுங்கப் பெருமக்கள், தமிழ்ப் பெருமக்கள் இருவருக்கும் இடையே கசப்பும் வெறுப்பும் தோன்றாமல் சமரசமும் ஒருமனமும் உதிக்கும் வண்ணம், வகை தேடவேண்டும். அரசாளும் இனத்தாரென்ற அகம்பாவம் தோன்றாமலும், ஆளப்படும் இனத்தாரென்னும் எளிமை பிறவாமலும் பார்த்துக்கொள்ளவேண்டும்.

பெருமக்களிடையே ஒருமனம் உண்டாக வகை காணுதல் ஒரு புறம் இருக்க, நாட்டு நிர்வாகச் சிக்கலையும் சீர் செய்யவேண்டும். முன்னம் நெடுநாளாக நிலையான ஆட்சியின்றி நாட்டில் குழப்பமும் கொந்தளிப்பும் மலிந்து கிடந்தன அல்லவா? அதனால், மக்களின் உடலும் உயிரும் உடைமையும் உரிமையும் நிலவரமாயில்லை; ஆங்காங்கிருந்த மக்களில் சில பலர் ஆறலைக்கும் கள்வர் தலைவராக மாறிவிட்டனர். எங்குப் பார்த்தாலும் நல்ல அமைதியில்லை; மக்களிடையே நிம்மதியுமில்லை. ஊர்க் காவலும் தேசக்காவலும் அலங்கோலமாய்க் கிடந்தன.

பல இடங்களில் காடுகளைத் திருத்தி நாடு காண வேண்டும். மக்களின் வாழ்க்கைக்குரிய வசதிகள் பலவும் வகுக்கப்படவேண்டும்.

எல்லாவற்றையும் சீராக்கும் நோக்குடன் சீரிய உபாயமொன்று கண்டார் அரியநாத முதலியார். பெருமக்களின் ஆசாபாசம் கைகூடவும், அவர்களிடம் மன வமைதி நிலவவும், அவர்களைக் குட்டி யரசராக ஆக்கினர் அம்மதியூகி. அவர்கள் அனைவருக்கும் பாளையக் காரர் என்று பெயர் சூட்டினர். அவர்களின் தகவு, சேவை, இரண்டையும் மதித்து, பற்பல கிராமங்களை அவர்களுக்கு ஈந்தார். அவை பாளையங்கள் எனப்படும். அப்பாளையங் களிலே வரிதண்டுதல், நீதி வழங்குதல், படை கொள் ளுதல், பாதுகாவல் செய்தல், எல்லாம் அவர்களின் பொறுப்பு. மொத்த வருமானத்தில் மூன்றில் ஒருபங்கு பாளையக்காரருக்கு; ஒரு பங்கு பாளையப் பராமரிப்புக்கு, ஒரு பங்கு காணிக்கையாக மதுரை நாயக்கருக்கு.

சுருங்கச் சொன்னல், தத்தம் கிராமங்களிலே பாளையக்காரர் எல்லாம் வல்ல புருஷர். பாளைய மக்கள் அனைவரும் அவர்களை ராஜா, ராஜா என்றே அழைப் பார்கள். அவர்கள் வசிக்கும் இடம் அரண்மனை அல்லது மாளிகை எனப்படும். மக்களும் பிறரும் புடை சூழ, அவர்களும் கொலுவிருப்பர். விசேஷ தினங்களில் அவர்கள் கொலு வீற்றிருக்க, மக்கள் வந்து காணிக்கை செலுத்துவர். முடிமன்னவனைப் போல் பரிவாரங்கள் புடைசூழ, அவர்கள் பவனி வருதலும் உண்டு. குடை, கொடி, சாமரம், முரசம் முதலிய ராஜ சின்னங்களையும் அவர்கள் பூண்டிலங்குவர்.

அவ்விதம் அரியநாதர் ஆக்கிய பாளையக்காரர் எழுபத்திரண்டு பேராம். மதுரைமாநகரின் கோட்டைக்கு 72 கொத்தளங்கள் உண்டல்லவா? ஒவ்வொரு கொத் தளத்தையும் ஓரொரு பாளையக்காரன் காவல் செய்ய வேண்டும். மதுரைக்கர்த்தா (நாயக்க மன்னவன்) வேண்டும்போது பாளையக்காரன் தன் படைகளுடன் வந்து, யுத்தத்தில் உதவி புரியவேண்டும். காவல் படைக்

கும் துணைப்படைக்கும் உரிய செலவு அவன் பொறுப்பே யாம். மதுரை ராஜசபையிலே, பாளையக்காரின் ஸ்தானாபதி வீற்றிருந்து, பாளையங்களின் நலபலங்களை மன்னவனுக்கு எடுத்துரைக்க உரிமையுண்டு.

அங்ஙனம் குட்டியரசர்போல் விளங்கும் பாளையக்காரர் தம் தம் பிரதேசத்தில் காடழித்தல் என்ன, கிராமங்கள் அமைப்பதென்ன, வேளாண்மையை வளர்ப்பதென்ன, ஆலயங்கள் நிருமிப்பதென்ன, சாலையும் சோலையும் சமைப்பதென்ன, நீர்ப்பாசன வசதிகளைத் தேடி வைப்பதென்ன, புதிதாக மக்களைக் குடியேற்றுவதென்ன, பிரதேசக் காவல் என்ன, இவற்றையெல்லாம் கவனித்தல் வேண்டும். பாளைய பரிபாலன நேர்மையும், பரம விசுவாசப் பெருக்கும் கண்டு, அவர்களுக்கு மேலும் பல கிராமமும் கனதனமும் மன்னன் மனமுவந்தளிப்பான்.

நாடெங்கும் எழுபத்திரண்டு பாளையங்கள் வகுத்தாலும், இடையிடையே மதுரைக் கர்த்தாவுக்குச் சொந்தமான பல கிராமங்கள் இருக்கும். அவற்றின் காவலோ அடுத்துள்ள பாளையக் காரரின் கடமை. அதாவது அரசுக்குரிய கிராமங்களுக்கு அப்பாளையக்காரனே காவல்காரன். காவலுக்காக அக்கிராம வருமானத்தில் ஒரு பங்கு அவன் தண்டிக்கொள்ளலாம். தலையாரி எனும் ஒருவனை அக்கிராமக் காவலுக்கு அவன் நியமிப்பான். ஊரையும் ஊர்ப்பாதைகளையும் அவன் பாதுகாக்க வேண்டும்; திருட்டும் புரட்டும் நடந்தால் அவற்றைக் கண்டுபிடித்தல் தலையாரியின் கடனும். திருட்டைக் கண்டுபிடியாவிடின், தலையாரியே திருட்டுப்போன உடைமையைக் கட்டித் தரவேண்டும்.

அவ்வாறு பாளையங்களை வகுத்ததனால், நாயக்க அரசு நல்ல பலம் கொண்டது. வேற்றரசின் படையெடுப்புக் காலத்தில் பாளையக்காரர் தக்க பக்க பலமாயினர். அத்துடன் நாடும் நன்கு திருந்தியது. எங்ஙனமெனில், பாளையக்காரர் காடழித்து நாட்டாக்கியதனால், வனவிலங்குகளின் தொல்லை குறைந்தது. திருடர் பயம் தணிந்தது. வேளாண்மை ஓங்கியது. மக்களுக்குப்

பிழைப்பும் பெருகியது. பாளையக்காரர் ஏற்படுமுன், மலைபடு செல்வத்தைச் சரிவரக் கண்டெடுக்கவில்லை. பாளையக்காரரோ பழனிமலை, ஆனைமலை, திருவாங்கூர் மலை, சிறுமலை முதலிய மலைகளைச் செம்மை செய்து, பயிர் பல கண்டனர், பலன் மிக்க் கொண்டனர்; மலை வளம் அமோகமாகப் பெருகியது. மலைகளில் வசித்து வந்த முரட்டு மக்களான கானவர், குறவர், வேடுவர், மலையாளிகள் முதலியோரும் நல்வழிப்பட்டு, நாகரிக உணர்ச்சி எய்தினர்.

பாளைய வகுப்புச் செய்ததும், நிர்வாக நலத்தைத் தழுவி ராஜ்யத்தைப் பல மாகாணங்களாக் அல்லது சீமைகளாக் வகுத்தார் நம் முதலியார். அவ்விதம் வகுத்த சீமைகள் சத்திய மங்கலம், கோயம்புத்தூர், திண்டுக்கல், திருச்சி, அல்லது மணப்பாறை, மதுரை, ஸ்ரீவில்லிப்புத்தூர், அல்லது நடு மண்டலம், திருநெல்வேலி எனப்படும். ஒவ்வொரு சீமைக்கும் ஒரொரு கவர்னரை அவர் நியமித்தார். அந்தந்தச் சீமைக்கு அதனதன் கவர்னரே சர்வாதிகாரி; சேனைத் தலைவனுமாம். மாகாணம் அல்லது சீமைக்கு அடுத்தபடியான பிரிவு நாடு எனப்படும். நாட்டுக்கு அடுத்தது கிராமமே. கிராமங்களெல்லாம் பட்டி, குடி, குறிச்சி, மங்கலம் எனும் கடைமொழிகள் கொண்டிருக்கும்.

விசுவநாத நாயக்கரின் காலத்திலும் பின்னுளிலும் மதுரை, திருச்சி, இரண்டும் தலை நகரங்களாக விளங்கின. மதுரையிலே மீனாட்சி சுந்தரேசுவரரின் ஆலயத்தில்தான், முடிசூட்டு வைபவம் நடக்கும். இரண்டு இடங்களிலும் அரசர்க்குரிய மாளிகைகளும் ராஜாங்க காரியாலயங்களும் உண்டு. அந்நகரிலே கிராம மணியக்காரன், கணக்கன் இவர்களை அந்தந்தக் கிராம மக்களே நாடுகூடித் தேர்ந்தெடுப்பர். இவ்விதமெல்லாம் அரசியலை ஓர் உருவாக்கி, வலுப்படுத்தி ஓங்கியுயர வைத்த பெருமை அரியநாத முதலியாரையே சாரும்.

முன்னுளிலே மௌரிய வல்லரசை வகுத்து, அரசியலையும் ஒழுங்குபடுத்தி, மதிமந்திரியாக உடனிருந்து சாணக்கியன் பேரூழியம் புரிந்து பெருமை எய்தினன் என்றால், அங்ஙனமே மதுரை நாயக்க அரசை வகுத்து,

அரசியலையும் பாகுபடுத்தி, மதியமைச்சராக உடனிருந்து ஒப்பற்ற ஊழியம் புரிந்தார், தளவாய் அரியநாத முதலியார்! பாளையங்களை வகுத்தும் தொகுத்தும் வைத்தமையால், பாளையக்காரரின் பரம்பரை யென்று ஒன்று தமிழகத்தில் ஏற்பட்லாயிற்று. அப்பாளையக்காரரில் சிலர் அவரை ஆதி பிதா என்றும், குலதெய்வம் என்றும் கொண்டாடி வந்தனர். அவர் பெயரால் ஆலயப் பிரதிஷ்டையும் செய்தனர். அப் பரம்பரையாரில் பலர் இன்றும் நம் தமிழகத்திலே, ஜமீன்தார்கள் என்று நிலவி வருதல் பிரசித்தம்.

## 7. நன்றியறிவு

பெயரளவில்தான் விசுவநாதன் மதுரை வேந்தன். உண்மையில் அரசு செலுத்தியவர் அரியநாதரே. அந்த அரியநாதரே பேரமைச்சர். பெருவீர தளகர்த்தரு மாம். அது கண்டு, விசுவநாதனுக்குப் பரவசம் மிக அதிகம். அவர் கீறின கீற்றை நாயகன் தாண்டுவதில்லை. உயிரும் உடலும்போல் இருவரும் வாழ்ந்து அரசை நன்கு நடத்திவந்தனர்.

ஒருநாள் மாலைவேளை. விசுவநாத நாயகன் கொலுவிருந்தான். அரியநாதரும் அருகே வீற்றிருந்தார். பாளையக்காரரும் பிறரும் புடைசூழ்ந்திருந்தனர், தேச விசாரணை நடந்து கொண்டிருந்தது. உள்ளே புக முயன்றார் மறையவரொருவர். வாயில் காப்பாளர் வழி மறித்து, "யார் ஐயா நீர்? இது இராஜசபை! போஜன சாலை யன்று; ஞாபகம் இருக்கட்டும்" என்று சற்றே கடிந்து கூறினர்.

வந்த வேதியர் அதுகேட்டு விலவிலக்கவில்லை; "இஃது போஜனசாலை யன்று. ராஜசபைதான். எனக்கு நன்கு தெரியும். ஆனதுபற்றியே உள்ளே புக விரும்புகின்றேன். அவசர வேலை யொன்றுண்டு. போஜனசாலையாயின், உங்கள் வேந்தன் வருந்தி யழைத்தாலன்றி உள்ளே வாரேன், தெரியுமா? பஞ்சைப் பார்ப்பான் என்

றெண்ணி, இலேசாகப் பேசவேண்டாம்; மதுரை மன்னவைக்குள் இம்மறையவன் புக என்ன தடை? கர்த்தாவின் கட்டளையா? தளவாயின் தாக்கிதா?" என்று கம்பீரமாகக் கேட்டார். பார்த்தனர் சேவகர். "நான்மறையாளரின் தோற்றமோ ஒருவிதம்; மாற்றமோ வேறுவிதம். என்ன இது?" என்று சற்றே பிரமித்தனர்.

அப்பால் "ஐயா! அரசர் கொலுவிருக்கிறார். தேச விசாரணை நடக்கிறது. சபைக்குள் செல்ல இது சமயமன்று" என்று நயந்து சொல்லினர் சேவகர். "நல்லது! கொலுவிருக்கும்போதுதான், கொற்றவன் சபைக்கு நான் செல்லுதல் வேண்டும். தேச விசாரணை நடக்கும் பொழுதுதான் என் ஜோலியையும் நான் சொல்லிக் கொள்ள வேண்டும். தளவாய் அரியநாத முதலியாரை நான் காணுதல் அவசியம். உள்ளே செல்லுவேன்; வீணே தடைசெய்ய வேண்டாம்" என்று பூசுரர் பெருமிதமாகப் பேசினார். "சிறிது நேரம் பொறுத்தலாகாதோ?" என்று காவலாளர் மீண்டும் பணிவுடன் மொழிந்தனர்.

"வாயில் காவலரே! உங்கள் தளவாய் எங்கள் ஊர்க்காரர். அவரை நான் கண்டுபேசுதல் வேண்டும். தடை செய்யாதீர்கள். அந்தணருக்கு அன்ன விசாரம் ஏது? ஆன்ம விசாரந்தான் உண்டு. உள்ளே புக எனக்கு உரிமை உளது. சலுகையும் கிட்டும்" என்று அந்நான்மறையாளர் நவின்றார். பின்பு காவலர் தடுப்பதையும் மீறிக்கொண்டு சபைக்குள் புகுந்தார்; அரியநாயகத்தை அணுகி, ஆசி கூறினார்; மன்னவனுக்கும் வாழ்த்துரை பகர்ந்தார்.

**தளவாய்:**—சுவாமி! தாங்கள் யார்? என்ன இவ்வளவு அவசரம்!

**அந்தணர்:**—தாங்கள்தானே அரியநாயகம் என்பது?

**தள:**—ஆம். அப்படித்தான் சொல்லுவார்கள். தாங்கள் எந்த ஊர்?

**அந்த:**—ஊரா? காஞ்சீபுரத்துக்கு அருகே மெய்ப்பேடு.

**தள:**—மெய்ப்பேடா? சந்தோஷம்! நம் ஊர் நிலவரம் எப்படி?

**அந்த :**—கேட்பானேன்! ஊர் முழுதும் தங்கள் பேச்சு! தங்கள் கீர்த்தி!

**தள :**—எல்லாம் ஏகாம்பரன் இன்னருள்! மீனாக்ஷி சுந்தரேசுவரரின் கிருபை! பெரியவர்களின் ஆசீர்வாதம்! தாங்கள் யார்? வந்த காரியம் யாது?

**அந்த :**—பூர்வீகம் எனக்கு மெய்ப்பேடுதான். பால்யத்திலேயே பிதா என்னைவிட்டுப் பரகதி போய்விட்டார். வடக்கே காசி சென்றேன். அத்தியயனம் பண்ணினேன். இரண்டு வேதம் வரும்; சாஸ்திரங்களிலும் பயிற்சி உண்டு. பண்டிதப் பட்டமும் பெற்றுள்ளேன். தங்களைப் பார்த்துவிட்டுப் போகவந்தேன். தங்களுக்கு எல்லா மங்களமும் நிரம்பவேண்டும்.

**தள :**—வேதவித்தா? பரம சந்தோஷம். என்ன வேண்டும்?

**அந்த :**—பிராமணனுக்கு என்ன வேண்டும்! எல்லாரும் இன்புற்றிருக்க வேண்டும்! எங்கும் தர்மம் தழைக்க வேண்டும்! செங்கோல் சிறக்கவேண்டும்!

**தளவாய் :**—நிரம்ப சந்தோஷம்! வேதியரின் இலட்சணம் அஃதேயாம். தாங்கள் இங்குவந்த காரணம்?

**அந்த :**—தங்களைக் கண்டு போகத்தான்.

**தள :**—என்னால் ஏதேனும் ஆகவேண்டியது உண்டோ?

**அந்த :**—தங்கள் பராக்கிரமம்! பரம்பரைப் பாண்டிய வமிசம் போய்விட்டது. நம் தமிழகத்திலே வடுக ராட்சியை நிலைநாட்டுகிறீர்கள்! தெய்வ சங்கல்பம் போலும்! அவனன்றி ஓரணுவும் அசையாதல்லவா?

**தள :**—பாண்டிய பரம்பரை மங்கிவிட்டது. விதியில்லை; நல்லாட்சி ஒன்று வேண்டுமல்லவா?

**அந்த :**—சரிதான்! ஈசன் எண்ணியபடி நடக்கட்டும். பரிபாலனம் நன்கு நடைபெற வேண்டும். நாட்டார் என்றும், அயலார் என்றும் வேற்றுமை பிறவாதிருக்க வேண்டும். என் பிரார்த்தனை இது!

**தள :**—தங்களைப்போன்ற பெரியாரின் பிரார்த்தனை வீண் போகாது. எல்லாம் இனிது நடக்கும்! தாங்கள் வந்த காரணம் தெரியலாமோ?

அந்த :— தங்களைக் காணும் ஆசைதான். இங்கு வந்தேன், இன்புற்றேன்!

தள :— ஆசைக்கு மூலம் யாது?

அந்த :— மூலமா? மொழிகின்றேன். காசியிலிருந்து சமீபத்தில்தான், திரும்பி மெய்ப்பேடு வந்தேன். கன்னி மாதத்திலே ஸரஸ்வதி பூஜை வந்தது. பூஜைக்காக ஏடுகளை எல்லாம் எடுத்து அடுக்கினேன். பிதாவின் ஓலை நறுக்கொன்று தென்பட்டது. உச்சிமீது கொண்டேன், உவகை பூத்தேன். அப்பால் மற்றோர் ஓலை நறுக்கு அகப்பட்டது. அஃதே என்னை இங்கு வரச்செய்தது. பாருங்கள், இது தங்கள் கைப்பட எழுதியதுதானே?

அரியநாத முதலியார் அதனை வாங்கிப் பார்த்தார்; தம் கைச்சாத்தைக் கண்டார்; கண்ணில் ஒற்றிக் கொண்டார்; நாற்பது ஆண்டுகளுக்குமுன் நடந்த சம்பவத்தை எண்ணிப்பார்த்தார்; உடனே பரவசமானார்; அம்மகானுபாவரின் ஆரூடத்தையும் சோதிடத்தையும் உணர்ந்தார்; பெரியவரின்வாக்குப் பலித்ததையும் சிந்தித்தார்; சித்தம் களித்தார்; உடனே எழுந்துவந்து வேதியரை அடிதொட்டு வணங்கினார்; தம் பக்கத்திலே அமர்த்திக் கொண்டார்; அளவிலா அன்பும் காட்டினார்!

சபையோர் அதுகண்டு, ஆச்சரியம் அடைந்தனர். விசுவநாத நாயக்கனும் வியப்புக்கொண்டான். விஷய விவரம் இன்னதென ஒருவருக்கும் புலப்படவில்லை. அரியநாதர் அது கண்டார்; ஆதிமுதல் வரலாறனைத்தையும் விளங்கவுரைத்தார். மெய்ப்பேடு கிராமத்திலே ஏழைக் குடும்பத்தில் பிறந்தது, நம்பியாணிடம் வளர்ந்தது, இளமையில் கலைபலவும் கற்றது, கம்பு வரிசை கொண்டது, வேதியர் வந்து ரேகை வரிசை செப்பியது, அன்று கைப்பட வரைந்து கொடுத்தது, அப்பால் விஜயநகரம் சேர்ந்து படிப்படியாக உயர்ந்தது, இவ்வெல்லாம் கேட்டு அனைவரும் அதிசயித்தனர்.

அப்பால் தளவாய், "ஐயனே! இது அடியேன் எழுதிக்கொடுத்த ஓலையே. அன்று எழுதிக்கொடுத்த

வண்ணம் இன்றே—இப்போதே—நடக்கச் சித்தமாயுள்ளேன். சிறிதும் ஐயப்பாடு வேண்டாம். தங்கள் பிதா—வரந்தருவதுபோல் எனக்கு வாக்களித்த பெரியார்—இன்று இல்லையே என்பதுதான் என்னை வாட்டுகின்றது. என் நன்றியறிவைக் காட்டி, அவரிடம் ஆசிபெற, நான் பாக்கியம் பண்ணவில்லை. ஆனாலும் அவரது புத்திரரான தங்களையாவது கண்டேனே, இது ஒரு பாக்கியந்தான். ஓலை நறுக்கில் கண்டவண்ணம் என் உடைமையில் பாதி இதோ தந்தேன்" என்றார் கனிந்துருகி.

அந்தணர் அது கேட்டு அளவிலா ஆனந்தம் அடைந்தார்; பின்பு "அரியநாதரே! தாங்கள் அஷ்டஐசுவரியங்களுடன் அமோகமாக வாழவேண்டும். தங்கள் சத்தியமே சத்தியம்! கலிகால அரிச்சந்திரன் என்றே இசைக்க வேண்டும். தங்களது சத்தியகீர்த்தி ஜகமெங்கும் பரவுமளவும் திடகாத்திரமும் நீண்ட ஆயுளும் கொண்டு தாங்கள் வாழ்ந்து வரல்வேண்டும். என் பிதா பேசிய வண்ணம், ராஜனுக்கே திகழ்கிறீர்கள். முடிமன்னவரை ஆக்கும் முடிசூடாமன்னராகத் தாங்கள் துலங்குவீர்கள். என் வாக்கும் பொய்க்காது" என்று ஆசியுரைபகர்ந்தார்.

என் உடைமையிலும் உயர்விலும் சரிபாதி இதோ என்றார் தள்வாய் முதலியார். அதற்கு அவ்வந்தணர், "முதலியாரே! முழுஆஸ்தி பெற்றதுபோல் பெருமகிழ்ச்சியடைகிறேன். நானோ ஏழைவேதியன். திரண்ட செல்வம் எனக்கு ஏன்? ராஜபோகமும் எதற்காக? பிறவிப் பெரும் பயனை அடைவதே என் இலட்சியம். எனக்கு வேண்டாம் ராஜ்யபாரமும், ராஜபிருதுகளும்! செல்வமகளைக் கைப்பிடித்தால், என் சிந்தை கெடும்; சீர் குலையும்; வாழ்க்கையும் வீணாகும். எனக்கு ஏதும் வேண்டாம். நாடெங்கும் வாழட்டும், அதுவேபோதும்" என்றார்.

"நன்றியறிவின் அடையாளமாக ஏதேனும் நான் கொடுத்தல் வேண்டும். தாங்கள் தயைகூர்ந்து ஏற்றருளல் வேண்டும்" என்றார் முதலியார். வேதியர் விளம்புவார்:—"எனக்கு ஒன்றும் வேண்டாம். ஏகாம்பரநாதனது இன்னருள் ஒன்றே போதும். வீடுவாசல்,

தோட்டம் துரவு, மாடுகன்று எல்லாம் கர்மத்தை வளர்க்கும். ஆண்டவன் சிந்தனை, ஆத்மசிந்தனை இரண்டும் ஒழிந்த நேரத்தில், குட்சிபாதை தோன்றலாம். அதற்கு வகையிருந்தால் போதும். வேறென்ன வேண்டும்? மதுரையரசு சேர்பிக்க வேண்டும், மக்கள் அனைவரும் சுகமே வாழவேண்டும். எனக்கு இஃதொன்றே போதும்.”

தளவாய் முதலியார் தம்மாலானமட்டும் வேண்டிக் கொண்டார். காசோ தூசோ பெற்றுக்கொள்ள அவ்வந்தணர் ஒப்பவில்லை. சின்னாள் சென்றதும் காஞ்சிமாநகரம் சேர்ந்து, ஏகாம்பரநாதனைத் துதித்து, அவர் வாழ்ந்து வரலானார். அவருக்குப் பசியெடுக்கும் வேளையறிந்து அன்னமிடும் வண்ணம் முதலியார் அங்கே ஏற்பாடு செய்தார். கடைசி நாள்வரையில் அவ்வேற்பாடு நிலையாக நடந்து வந்தது.

வேதியரின் மனநிறைவு கண்டு, மதுரைச்சபையோர் மகிழ்ந்தது ஒருபுறமிருக்கட்டும். மெய்ப்பேடு வாசிகளும் காஞ்சீபுர மக்களும் அவரைப் போற்றிப் புகழ்ந்தனர். ‘வேதிய வித்தகர், விப்பிரோத்தமர்’ என்னும் சிறப்புப் பெயர் பெற்று, அவர் காலங்கழித்து வந்தார். சில சமயங்களில் அவர் மதுரை வழியாக இராமேசுவர யாத்திரை போவார். அப்போது அம்மாநகரிலும் பிறஇடங்களிலும் அவரிடம் எல்லாரும் பயபக்தி விசுவாசமாக நடந்து கொள்வர்.

## 8. மகாராஜ மகுடம்

திருமகளின் அருளிருக்குமேல், ஆகாத காரியம் உண்டோ? கிட்டாத பதவியும் இருக்குமா? அரியநாத முதலியாருக்கு அம்மலர்மகள் மேலும் அருள் பாலிக்கலானாள். விஜயநகர ஸாம்ராஜ்யத்துக்கே அவர் தளவாய் ஆகிறார்; மகாராயர் என்று முடிசூடும் தருணமும் நெருங்குகிறது. இதன் வரலாறு பார்ப்போம்.

விஜயநகர ஸாம்ராஜ்யத்தின் தலைவரான கிருஷ்ண தேவராயர் 1530-ம் ஆண்டு பரகதி போனார். உடனே

அச்சுதராயருக்குப் பட்டம் கிட்டியது. ஒரு மண்டலத்துக்குமேல் அச்சுதராயர் உயிருடன் இருக்கவில்லை. பிறகு, சதாசிவ ராயர் சிம்மாசனம் ஏறினார். பெயரளவில்தான், சதாசிவர் மகாராயர். கிருஷ்ணதேவரின் மருமகன் ராம ராயரே உண்மையில் ஆட்சியை நடத்தியவர். ராமராயரை மாப்பிள்ளை ராயர் என்றும் சொல்லுவர்.

மாப்பிள்ளை ராயர் மகா சமர்த்தர். ஆனால், அவருக்கு மமதை மிகுதி. ராஜதந்திரமோ மிக்வும் கம்மி. கிருஷ்ணதேவரைப் போல் எட்டுத் திக்கும் கீர்த்தி பரப்ப வேண்டும் என்னும் ஆவல் அதிகம். ஆதலின் தக்காண முகம்மதிய அரசுகளின் உட்பகைச் சண்டையில் அவர் பெரிதும் தலையிட்டார். பீஜபுரத்து சுல்தான் அடில்ஷாவுக்குப் பெரிதும் பரிந்து, ஆமத் நகர சுல்தான் நிஜாம்ஷாவின் கடும் பகையைத் தேடிக்கொண்டார். முடிவில் அம் முகம்மதிய அரசுகள் மதிநலங் கொண்டன; தமது உட்பகையை மறக்கத் தொடங்கின; வீறு கொண்டு நின்ற விஜயநகரைப் பழிவாங்கவும் பரம சூழ்ச்சி செய்யலாயின.

இதனை மாப்பிள்ளை ராயர் ஆதியிலேயே மதித்துணரவில்லை. உணராமல் போகவே, முன்னெச்சரிக்கையான ஏற்பாடுகள் செய்தல் எங்ஙனம்? திடீரென்று அந்த ஐந்து (பீஜபூர், ஆமத் நகரம், கோல்கொண்டா, பீரார், பீடார்) அரசுகளும் யுத்த சன்னத்தமாயின. பின்னரே ராமராயர் ஓரளவு கண்விழிப்புக் கொண்டார்; தம் படைகளையும் திரட்டலானார். உடன் பிறந்தோரான திருமலை, வேங்கடாத்ரி இருவர் மீதும் அவருக்கு நம்பிக்கை இல்லை. அரியநாத முதலியாரின் ஆண்மை திண்மை, சூழ்ச்சி தேர்ச்சி, பக்தி விசுவாசம் எல்லாம் அவருக்கு நன்கு தெரியும். ஆதலின், ஆபத்தில் வந்து உதவும் வண்ணம் அரியநாதருக்கு அவர் ஓலை விடுத்தார்.

அச்சமயம் மதுரையிலே விசுவநாத நாயக்கன் பரகதி போன சமயம். விசுவநாதன் புத்திரன் குமார கிருஷ்ணப்ப நாயக்கனுக்கு அரியநாதர் முடி சூட்டினார். உயிர்த்தோழன் மறைந்த துக்கம் ஒரு புறம், புதிய வேந்தனை அரசியலில் பழக்க வேண்டிய கவலை ஒரு

புறம், இரண்டும் தள்வாய் முதலியாரை வாட்டி நின்றன. அத்துடன் தலைக்குமேல் ஆபத்தென்று விஜயநகரி லிருந்து நிருபம் வந்துள்ளது. தமக்கும் சரி, மதுரைக் கர்த்தர்க்களுக்கும் சரி, தாயகமான விஜயநகரைக் காத்தல் முதல் கடமையல்லவா?

குமார கிருஷ்ணப்பனுக்கு உரிய புத்தியனைத்தும் புகன்று, பெருஞ் சேனையுடன் வடக்கு நோக்கிப் புறப் பட்டார், தள்வாய் முதலியார். அவர் விஜயநகரஞ் சேர்ந்ததுதான் தாமதம் - அங்கே மந்திராலோசனை நடந்தது. "இம்முகம்மதியர் எம்மாத்திரம்? கொசுக்கடி கண்டு மிருகேந்திரன் கதிகலங்குமோ? முன்னம் என் னிடம் சிக்கிச் சீரழிந்த அவ்வரசுகளைக் கண்டு யாருக்கும் அச்சம் வேண்டாம்" என்று மாப்பிள்ளை ராயர் படா டோபமாகப் பேசினார். அரியநாதரோ, "மகாராய! பகைவர் ஐவரும் ஒரு மனங்கொண்டு திரண்டுளர். மாநாகத்தின் மூச்சுப் பட்ட அளவில் எலிக்கூட்டங்கள் இறந்து படும். எனினும் வினைவலியும், தன் வலியும், மாற்றான் வலியும் எண்ணி, ஏற்றது செய்வதே கடமை. இலேசாகப் பேசுதல் சரியன்று" என்று இடித்துக் கூறினார்.

முடிவிலே அரியநாதரின் ஆலோசனைக்கு இணங்க ஆயத்தங்கள் எல்லாம் செய்தார் ராமராயர். சேர்தரா ரான திருமலை, வேங்கடாத்ரி இருவருக்கும் படைத் தலைமை யளித்தார்; கிருஷ்ணாநதியின் தென் கரையி லுள்ள முகம்மதியச் சேனைகளை வழிமறித்துப் போர் தொடுக்க அரியநாதருடன் சென்றார். அப்போது விஜய நகரின் சேனையிலே பத்து லக்ஷம் காவலாளர்; ஐம்ப தாயிரம் பரிவீரர்; மூவாயிரம் யானை வீரர்! முகம்மதி யரின் பக்கத்திலே அதில் பாதியளவுதான்.

நள்ளிரவிலே முகம்மதிய அரசர் வெகு தந்திரமாக அக் கிருஷ்ணையின் தென் கரை சேர்ந்து விட்டனர். தலைக் கோட்டை என்னுமிடத்தில் அவர்களின் பாசறை பாங் காக அமைந்திருந்தது. முகம்மதியரின் முன்னேற்றம் கண்டதும், விஜயநகரத்துப் படைகளெல்லாம் ஓரிடத்தில்

குவிந்தன. போகபுரம் என்னும் கிராமத்திலே 1565-ம் வருஷம் ஜனவரி மாதம் இருதிறத்தாரும் கைகலந்தனர். சோதரரான திருமலையும் வேங்கடாத்ரியும் போர் முனையிலே இடது புறமும் வலது புறமுமாக நின்றனர்; ராமராயரோ நடுநாயகமாக நின்று, ஒரு பெரிய யானை மீதேறிப் போரை நடத்தினர். அரியநாதரோ பின்புற மிருந்து போருக்குரிய உதவி பலவும் புரிந்து நின்றார்.

விஜயநகரத்து வீரர்கள் வெடிகுண்டு பாணங்களைச் சோனைமாரிபோல் பொழிந்தனர்; முகம்மதியரின் மேல் விழுந்தும் மூர்க்கமாகத் தாக்கினர். உடனே முகம்மதி யரின் முன்னணிகள் முறிந்தன. முறியவே ராமராயரின் வீரர் முன்னேறிச் சென்றனர்.

அதுகண்டு முகம்மதிய வில்லாளரும் பின்னிடைந் தனர். எனினும் முகம்மதியரின் இருபுறச்சிறகிலும் மறைவாயிருந்த பீரங்கிகள் விஜயநகர வீரர்மீது குண்டு களைப் பொழிந்தன. நூற்றுக்கணக்கில் வீரர் மாண்டு வீழ்ந்ததும், ராமராயர் மனஞ்சலியாமல், தம் படைஞரை ஊக்கி நின்றார். படைஞரும் பராக்கிரமங் காட்டி முன் னேக்கியே மொய்ம்புடன் செல்லலாயினர்.

முகம்மதியரின் குண்டு மழை மொழியுந்தரமன்று. ஒன்றும் பத்துமாக்க் குண்டுகள் வந்து வீழ்ந்துகொண் டிருந்தன. அதனைத் தாங்கமுடியாமல், விஜயநகர வீரர் சற்றே பின் வாங்கினர். அதற்கு ராம ராயர் மனமொப்ப வில்லை. முன்னேற வேண்டுமென்றே ஆணையிட்டார். குண்டு மழையின் கோரங்கண்ட அரியநாதர் யுத்த தந்திரத்தை மதித்து, ஒரு சிறிது பின் வாங்கி, நற்சமயம் நோக்கி முன்னேறுதலே மேலென்றார். தொண்டு கிழவ ராயினும் கட்டிளங் காளையே போல் கம்பீரமாய் நின்ற ராம ராயர் பின்வாங்கும் யோசனைக்குச் சிறிதும் செவி சாய்க்கவில்லை. மற்று இங்ஙனம் இசைக்கலானார் :—

"இந்தப் பூனைச் சுல்தான்களின் போர்வலி எம்மாத் திரம்! இதற்குமுன், பன்முறை அன்னவரைப் போர் முகத்தில் புறங்கண்டுள்ளேன். முதலியாரே! மயங்க

வேண்டாம். ஒரு நாழிகை யளவில் பார்க்கலாம் போரின் விளைவை. சூறைக் காற்றில் பூளைப் பூ பறப்பதுபோல், பகைவர் பறந்தோடுவர். ஆமது நகர வேந்தன் நிஜாம் ஷாவின் சிரத்தைக் கொய்தே திரும்புவேன். ஏனைய முகம்மதிய அரசரையும் சிறை செய்தல் சுலபமே. பன்முறை முதுகுகாட்டி யோடிய பகைவர் இச்சமயத்திலும் புறங்காட்டி யோடுதல் திண்ணம்."

அரியநாதர் அதுகேட்டு, "அரசே! முன்னம் அவர்கள் தோல்வியுண்டு திகைத்தது மெய்தான். என்றாலும், இப்போதோ நிலைமை வேறு. ஐவரும் ஒன்று சேர்ந்துளர். மறைவில் பீரங்கிப்படை யிருப்பதை மதித்தறிந்தோமில்லை. திருமகளும் ஜயமகளும் வேசைகளைப் போல் மாறுவர்; இன்று ஒருவனிடமும், நாளை ஒருவனிடமும் நயந்து நிற்பர். இந்த உண்மையினை உதாசீனம் செய்வதற்கில்லை" என்றார். அதற்கு ராம ராயர், "அரிய நாதரே! விஜயமகள் விஜயநகரை விட்டகலாள். ஒரு கால், அம்மகள் நம்மைக் கைவிடினும், இச்சமர பூமியினின்று நான் தோல்வியுடன் திரும்பேன்; ஒன்று வெற்றி, இன்றேல் வீர சுவர்க்கம்" என்று வீர முழக்கஞ் செய்தார்.

சேர்தரரும் தளகர்த்தரும் அரியநாதரும் பிறரும் ராம ராயரின் வஞ்சினங்கண்டு திகைத்தனர்; தேம்பினர். அதன்மேல் ராம ராயர் பகர்ந்தது இது:—"இந்த ரணகளத்திலே ராம ராயனுவைது முகம்மதிய மன்னராவது மடிதல் உறுதி. ஒரு சமயம் ராமராயன் மடியின், மேல் நடப்பது எப்படி?—என்று ஒருவருக்கும் ஐயப்பாடு வேண்டாம். பொம்மை மகாராயன் - சதாசிவ ராயன் - ஆடின ஆட்டம் போதும். என் சகோதரரோ எனக்குப் பின் ஒருவரோடொருவர் மாறுபட்டு நிற்பர். அதனால், பரந்த இந்த ஸாம்ராஜ்யம் பாழ்படும். இதற்கு இடந்தராமல், காக்கக் கடமைப்பட்டவர் அரியநாதரே. கிருஷ்ணதேவராயரின் காலந்தொட்டு, அரியநாதரினும் ஆப்த புருஷர் இந்த ஸாம்ராஜ்யத்துக்கு வேறெவருமிலர். ஆதலின், எனக்குப் பின் இந்த ஸாம்ராஜ்யம் அரிய

நாதரின் அடைக்கலம். அவர் மகாராயராக் முடிசூடிக் கொண்டு மகிமை வாய்ந்த ஸாம்ராஜ்ய தள்வாயாகவும் துலங்கி, வேற்றரசரிடமிருந்து நம் வல்லரசைக் காத்து ரட்சிக்கவேண்டும். இதுவே என் ஆணை, மரண சாஸனமுமாம்."

அரியநாதர் அதுகேட்டு "என் ஐயனே! தங்களுக்கு யாதொரு தீங்கும் நேராது. ஜயலட்சுமி நம்மைக் கை விடாள். ஒரு சமயம் ஏதேனும் விபரீதம் விளையின், அரியநாதன் இந்த ஸாம்ராஜ்யத்தைக் காக்க உடல் பொருள் ஆவி மூன்றையும் ஒருங்கே வழங்குவான்" என்று சமர பூமியில் சபதஞ் செய்து கொடுத்தார். ராமராயரும் பிறரும் அதுகேட்டு ஆறுதல் கொண்டு போரில் முனைந்தனர்.

முகம்மதியரின் பீரங்கி வரிசைகளையும் குண்டுமாரி களையும் விஜயநகர வீரர் ஒரு பொருட் படுத்தாமல் முன்னேறிப் பகைவரின் மேல்விழுந்து தாக்கினர். முகம் மதிய வீரர்களோ வேசாறிப் போனார்கள். அதுகண்டு முகம்மதிய அரசர் அனைவரும் மனக்கலக்கம் கொண்டனர்; தொடை நடுக்கமும் எய்தி நின்றனர். அவ்வேளை ஆமது நகர சுல்தான் அரிய சூழ்ச்சி யொன்று செய்தான். அதற்கிணங்க, முகம்மதியரோ பீரங்கிகளில் செப்புக் காசுகளைக் கெட்டித்துச் சுட்டனர். உருக்கிய செம்பு வந்து தாரைதாரையாக விஜயநகர வீரர்மீது வீழ்ந்தது. அதனை விஜயநகர வீரர் ஆற்ற இயலாது நாற்புறமும் சிதறுண்டனர்.

இதற்கிடையில், முகம்மதியக் குதிரை வீரரும் முன்னேறி வந்து, சிதறியோடும் வீரர்மீது பாய்ந்தனர். அவர்களுடன் யானை வீரரும் வந்து கலந்துகொண்டனர். விஜயநகரச் சேனையின் முன்னணி யெங்கும் ஒரே குழப்பம் மேலிட்டுவிட்டது. ராமராயர் அதுகண்டு பெரிதும் பிரமித்துப்போனார். ஆனால் போர் முனையின் வலது பக்கத்திலோ திருமலையும் வேங்கடாத்ரியும் முகம் மதியரைத் தாக்கி முறியடித்து முன்னேறினர். இடது

பக்கத்திலோ அரியநாதர் ஆவேசமாக எழுந்து, அப் பகைவர் மீது புலிபோல் பாய்ந்து, முகம்மதிய வீரர் அனைவரையும் முறித்தெறிந்தார். தொலைவில் இருந்த மாப்பிள்ளை ராயர் இவ்வெற்றியைச் சிறிதும் உணர்ந்தா ரில்லை.

திக்பிரமைகொண்டு நின்ற ராமராயரை நோக்கி நிஜாம்ஷா பாய்ந்து வந்தான். அவரது பல்லக்கைச் சுமந்து நின்ற வீரர் கதிகலங்கி, அவரைத் தனியே விட்டு ஓடிப்போயினர். ஆயினும் அருகே நின்ற பரிவீர னொரு வன் விரைந்து வந்து, தனது பரியை அவருக்கு ஈந்தான். அதன்மீது ஏறி யமரப் போகும் சமயம், நிஜாம்ஷாவின் ஆட்கள் வந்து சூழ்ந்துகொண்டு விட்டனர். என்றாலும், அக்கிழவீரர் தம் உடைவாளை உருவி, வீச்சொன்றுக்குப் பத்தும் இருபதுமாகப் பகைவரை வெட்டிச் சாய்த்தார். அவ்வேளை, நிஜாம்ஷாவின் வாள் வீச்சு வந்து, அவரது உடலை இருதுண்டாக ஆக்கிவிட்டது.

நிஜாம்ஷா உடனே ஆனந்தக் களிப்புக்கொண்டான்; அற்று வீழ்ந்த தலையை ஒரு வேலின்மீது செருகினான்; அதனை இருபக்கத்துச் சேனைகளும் காணுமாறு அந்த ரத்தே தூக்கிக்காட்டினான்! முகம்மதியர் அதுகண்டு பெரு மகிழ்ச்சி கொண்டனர்; ஹிந்துக்களோ ஆறாத் துயர் அடைந்தனர். வெற்றி வெறியில் மூழ்கிவிட்ட வீரர், தலை கால் தெரியாமல் விஜயநகர வீரர் மீது விழுந்து தாக்கினர். கதி கலங்கிவிட்ட ஹிந்துக்களில் பலர் விதி யின்றி வெட்டுண்டு வீழ்ந்தனர், நூற்றுக் கணக்கில்! அன்று முகம்மதியரின் கையால் மாண்டவரின் தொகை ஒரு நூறாயிரத்துக்கு மேலிருக்கும்.

ராமராயர் வெட்டுண்டு விழவே, வேறொரு பக்கம் திரு மலையும் அரியநாதரும் உற்றிருந்த வெற்றியும் வீணாகியது. சோதரனது பிரிவைச் சகியாமல், போர்க்களத்திலே பிணக்காடு குவித்து, முடிவில் முதுகு கொடாமல் வெட்டுண்டு வீழ்ந்தான் வேங்கடாத்ரி. சேனையின் சின்னா பின்னத்தையும் மகாராயரின் முடிவையும் கூர்ந்து

நோக்கித் தலைநகரத்தையேனும் காக்கலாமெனக் கருதி, விஜயநகரம் நோக்கினார் அரியநாத முதலியார். படுகளத்தில் முகம்மதியர் கொண்ட கொள்ளை கொஞ்ச நஞ்சமன்று. ஒவ்வொரு வீரனும் ஏராளமான ஆடையும் அணியும் கொள்ளை கொண்டு கொக்கரித்தான்.

சேனை வெள்ளம் சமர்முனை சென்றுள்ளது, வெற்றியுடன் திரும்பிவரும், ஆடம்பரமாக வரவேற்கலாம், என்று விஜயநகரம் ஆவலுடன் காத்திருந்தது. அச்சமயத்திலே, பேரிடி விழுந்ததுபோல் தோல்விச் செய்தி எட்டிற்று. இதனை ஒருவரும் முதலில் நம்பவில்லை. விஜய நகர வீரர் தோல்வி கொள்ளார் என்பதே மக்களின் மனக்கோள். அரியநாதர், திருமலை, தளகர்த்தர் முதலியோர் வாடிய முகத்துடன் வந்த பின்னர், விஜய நகர மக்கள் உண்மை உணர்ந்தனர்; உணர்வு ஒடுங்கினர்; ஒன்றும் பேசாது தம்பித்தும் நின்றனர்.

அரியநாதர் வாளா இருக்கவில்லை. வந்த காரியத்தை ஆராய்ந்தார்; விஜயநகரின் காவலருமையைக் கவனித்தார்; நகர மக்களின் தொகையையும் நோக்கினார்; எஞ்சி யுள்ள மூல பலத்தையும் முற்றும் துருவிப் பார்த்தார்; முடிவில் தலைநகரைக் காப்பதென ஏற்பாடு செய்யலானார். ஆயினும் என்ன? கிலி பிடித்த மக்களில் எவரும் அதற்கு இணங்கவில்லை. ராயர் குடும்பத்தைச் சேர்ந்தவரோ ஓடி ஒளியவே எண்ணினர். திருமலையோ ராயர் குடும்பத்தையும் ஐசுவரியங்களையும் அள்ளிக் கொண்டு ஓட்டம் பிடிப்பதில் கண்ணாயிருந்தான். அதற்குச் சம்மதித்தான், சதாசிவராயனும்.

அங்ஙனமே திருமலைராயன் தலைநகரின் தனசாலையிலிருந்து திரட்டக்கூடிய பொன்மணிகளென்ன, ஜரிகைப் பட்டாடைகளென்ன, ராஜாங்க பிருதுகளென்ன, ஸாம்ராஜ்ய முத்திரை யென்ன, நவரத்தினமயமான அரியாசனமென்ன, இவற்றை யெல்லாம் ஒரு ஜாமப்போதில் சேகரித்தான்; ராயரின் குடும்பத்தைச் சேர்ந்த ஆடவர் பெண்டிரையும் அழைத்துக் கொண்டான்; அறுநூறு

யானைகளைத் திட்டப்படுத்தி, மக்களையும் பொருள்களையும் ஏற்றிக் கொண்டான்; தென்பாலுள்ள பெனுகோண்டா எனும் கோட்டையை நோக்கி ஓடிவிட்டான்! அவன் கொண்டுபோன பொன் மணிகள் மட்டும் பத்துக் கோடிப் பவுனுக்கு மேலிருக்கும்.

இந்நிலையில் அரியநாதர் என்ன செய்வது?

# 9. ஸாம்ராஜ்யம் சிதறல்

"ஸாம்ராஜ்யம் உன் அடைக்கலம். அதனைக் காத்தல் உனது கடமை" என்று மாப்பிள்ளை ராயர் ஆணையிட்டதை அரியநாதர் எண்ணிப் பார்த்தார்; திருமலையும், ராஜ குடும்பத்தினரும் பெனுகோண்டாவுக்கு ஓடி ஒளிந்து கொண்டு விட்டதையும் உற்று உணர்ந்தார். விஜயநகர மக்கள் தாயிழந்த கன்றுபோல் தயங்கித் தவிப்பதையும் கண்கூடாகக் கண்டார்; மகாராயர் என முடிசூடி, ஸாம்ராஜ்ய தளவாய்ப் பதவி வகித்து, ஸாம்ராஜ்யத்தின் கீர்த்தி மங்காமல் பாதுகாக்க வேண்டுமென்ற வாக்கையும் ஆராய்ந்தறிந்தார்; உடனே அன்பர் பலரையும், உற்றார் உறவினரையும் அழைத்து ஆலோசனை செய்யலானார்.

"பரம்பரையான ராஜ குடும்பத்தாரே பயந்தோடி விட்டனர். நமக்கேன் வீண் விருப்பு?" என்றனர் சிலர். "பூவைசியரான வேளாளர் உழு தொழிலைக் கைவிடுத்து, அல்லலுக்கு இடமான மகுடாபிஷேகம் கொள்வதோ?" என்றனர் சிலர். "அரசனுக்கு மகள் - கொடை நேர்தலுக்கும், முடி கவித்தலுக்கும் உரியவரான வேளாளர் வேந்தாவதில் யாது தடை?" என்றனர் சிலர். "சீரழிந்து சிதறும் ஸாம்ராஜ்யத்தினுக்கு மன்னுரிமைப் பொறுப்பு ஏற்பதோ?" என்றனர் சிலர். அரியநாதரின் குருவும் அரசுரிமை எய்த அனுமதி தரவில்லை.

"சிம்மாசனம் ஏறிச் சிறக்க வேண்டுமென்ற சிந்தனை கிடையாது; மாப்பிள்ளை ராயரின் மரண சாஸனம் போன்ற வாக்கினைக் காத்தலே கருத்து; அவ்வாக்கினைக்

கேள்வியுற்றதும் அங்ஙனமே செய்வதாக்ச் சபதம் பண்ணினேன். வேறில்லை" என்றார் அரியநாதர்.

"அரச குடும்பத்தார் அஞ்சி ஓடினும் என்ன! ஆவியுள்ளவரையில் அருஞ்சமர் செய்து அன்னியரை எதிர்த்து நிற்பேன். இதற்கு நகரமக்களின் பக்க பலம் தேவை" என்று பறைசாற்றினார் அரியநாத முதலியார். புலியடித்தது பாதி, கிலியடித்தது பாதி என்னும் மூதுரைக்கு இலக்காகிவிட்ட நகரமாந்தர் அதற்கு எள்ளளவும் ஒப்பவில்லை. அம்மாந்தரில் பலரோ தம்தம் உடைமைகளை வாரிச் சுருட்டிக் கொண்டு, அப்பதியை விட்டகன்றனர். ஏனையோரோ தங்களது நகை நட்டுக்களையும் காசு தூசுகளையும் பூமிக்குள் புதைத்துவிட்டு, நகரைக்காக்க முன்வந்தனர். போர்ப்பழக்க மில்லாத கும்பலின் துணைகொண்டு, அரியநாதர் யாது செய்ய முடியும்? சிதறும் ஸாம்ராஜ்யத்தை இயன்றவரையில் சீர் செய்யாலாமென அத்தளவாயும் பெனுகொண்டா சென்றார்.

மறுதினமே குறும்பர், கானவர் முதலியோர் விஜய நகரினுள் புகுந்தனர் கொள்ளையில் கருத்து வைத்து! மூன்றாம்நாள், மதவெறியும், வெற்றி வெறியும் பிடித்த பகைவர் வந்துபுகவே, குரங்கின் கையில் சிக்கிய பூமாலை போலாயிற்று அப்பொன்னகரம். ஐந்துமாத காலம் அந்நகரம் கொள்ளைக்கும், கொலைக்கும் ஓர் களனாயிற்று. காலதூதரே போல் அவர்கள் களியாட்டம் கொண்டார்கள்; அட்டகாசமும் செய்தார்கள். அமராவதியே போன்ற அப்பெரு நகரில் பேய்மகளும், பாழ்மகளும் குடிகொண்டனர். 'மானிடர்க்கே யன்றி மாநகருக்கும் வாழ்வு தாழ்வுகள் வந்தெய்தும்' என்பதற்கு விஜயநகரம் ஓர் உதாரணமாயிற்று. ஆமதுநகர நிஜாம்ஷா செய்த சீரழிவைப் பார்ப்போம்.

தலைக்கோட்டைச் சண்டையின் வெற்றியை அவன் ஆண்டுதோறும் கொண்டாடி வந்தான். அப்பொழுது ராமராயரின்சிரத்துக்குஅவன் செஞ்சாந்தும் எண்ணெயும் பூசுவான்; அச்சிரத்தை ஆடம்பரமாகத் தனது நகரிலே

நடுநாயகமான ஓரிடத்தில் வைத்து, அனைவருக்கும் காட்டுவர்ன். அவன்மட்டுமன்று; அவன் சந்ததியாரும் அவ்விழாவை நெடுங்காலம் கொண்டாடி ஆனந்தக் கூத்தடித்து வந்தனர். அங்ஙனம் ஓராண்டு, பத்தாண்டா? இருநூற்றைம்பது வருஷம் வெற்றிக் களியாட்டம் நிகழ்ந்து வந்தது. பீஜபுரத்துக்கோட்டைச் சாக்கடையின் தூம்புமுகப்பில் ராமராயரின் தலையைப்போல் கல்லில் அடித்து வைத்ததும் சரித்திரப் பிரசித்தம். சண்டை தீர்ந்தும், வெற்றி எய்தியு மென்ன! மனத்தூடே அம்முகம்மதியருக்குச் சமரசப்பான்மை உதிக்கவில்லை.

பெனுகொண்டா சேர்ந்த அரியநாதர் வாளா இருக்கவில்லை. விஜயநகரத்தின் அழிவைக்கேட்டு ஆற்றெணுத் துயர் கொண்டார். ஸர்ம்ராஜ்யத்தின் சீர் குலைவைக் கண்டு சிந்தை வெதும்பினர். எஞ்சி நிற்பதையேனும் காக்கவேண்டுமென்று பெருங்கவலை கொண்டார்; திருமலைராயரையும் மற்றுமுள்ள பெருமக்களையும் கூட்டி வைத்து, ஆலோசனை செய்தார். திருமலைக்கும் சரி, ராஜ குடும்பத்தாருக்கும் சரி, ஸாம்ரர்ஜ்யப் பற்றே தோன்றவில்லை. எஞ்சிய அரசைப் பங்குபோட்டுக் கொள்வதிலேயே அன்னுர் பலரும் கண்ணுயிருந்தனர். அது கண்டு, அரியநாதரின் உள்ளம் உடைந்தது; உடல் குன்றியது; ஆவியும் சோர்ந்தது. கிருஷ்ணதேவருடன் ஸாம்ராஜ்யக் கீர்த்தி கிழிந்துவிட்டதே என்று அவர் வருந்தியது கொஞ்சமன்று.

தென்னிந்தியாவேனும் அன்னியரின் அழிம்புகளினின்று காக்கப்பட வேண்டுமென அரியநாதர் பெரிதும் விரும்பினர். திருமலையின் மனப்போக்கோ சுய நலத்தில் சூழ்ந்துகிடந்தது. அத்திருமலைக்கு அவர் எவ்வளவோ ராஜநீதி எடுத்துரைத்தும் பயனில்லை. முடிவிலே ஏற்பாடொன்று சொன்னுர் முதலியார். அதன் விவரம் இது:—

வடக்கே கிருஷ்ணை முதல் தெற்கே குமரிவரையிலுள்ள ஸர்ம்ராஜ்யம் மூன்றுபாகமாக வகுக்கப்பட்டது. பெனுகொண்டாவினைத் தலைநகராகக் கொண்டு, அங்கே

மகாராயராக மகுடம் சூடுபவர் முக்கியமாய் தொல்லை நேராமல், வடவெல்லையைப் பாதுகாக்கவேண்டும். மைசூரிலுள்ள ஸ்ரீரங்கப்பட்டணத்தை ராஜதானியாகக் கொண்டு ஆட்சிசெய்பவர், மேற்குமலைத் தொடருக்கு அப்பாலுள்ள பிரதேசத்தைக் காத்து வரல் வேண்டும். சந்திரகிரியைத் தலைமை ஸ்தானமாகக் கொண்டு முடிசூடுபவர் அம்மலைத்தொடருக்குக் கிழக்கில் உள்ள சேர, சோழ, பாண்டி, தொண்டை மண்டலங்களைக் கண்காணித்து வரவேண்டும். பெனுகொண்டாவிலுள்ள மகாராயருக்கு ஏனைய இருவரும் உட்பட்டு அன்னவரின் பிரதிநிதியாக நடந்துவருதல் கடமை.

அந்த ஏற்பாட்டினுக்கு அனைவரும் ஒருவாறு மனமொப்பினர். பின்பு அம்மூவரும் மனமொருமித்து, அரியநாதரே சாம்ராஜ்யத்தின் தளவாய்ப்பதவி வகிக்கவேண்டுமென வேண்டிக்கொண்டனர். அவரும் அதற்கிசைந்து ஓராண்டு காறும் பெனுகொண்டா நகரில் தங்கி இருக்கலானார். ஈதிங்ஙனமிருக்க, மதுரை நாயக்க அரசின் நிலைமையை ஆராய்வோம்.

## 10. தும்பிச்சி நாயக்கன்

தலைக்கோட்டைச் சண்டையில் தலை கொடுக்க வடக்கே சென்றார் அரியநாத முதலியார். அச்சமயம் தெற்கே பாண்டி நாட்டில் என்ன நிகழ்ந்தது? அவர் வகுத்த பாளையப்பட்டு முறை யாது பலன் தந்தது? "குணம் நாடிக் குற்றமும் நாடி, அவற்றுள் மிகை நாடி, மிக்க கொளல்" என்றார் திருவள்ளுவர். மானிடன் வகுத்த யாதிலும் சரி, குணம் குற்றம் இரண்டும் விரவியிருக்கும். குணமே யுள்ளதும் இராது; குற்றமே கொண்டதும் இராது; இரண்டிலும் எது அதிகம் என்று கண்டு, அதற்கேற்ப மதித்தலே அறிவுடைமையாம்.

பாளையப் பட்டு முறை பாங்கான முறைதான். நாட்டைச் சிறிது சிறிதாகப் பிரித்து, ஒவ்வொன்றுக்கும் ஓரொரு தலைவனை நியமித்ததனால், பல வகையில் ஒரு

நாடு செழித்தது; ஏந்தல்களாகவும் குரிசில்களாகவும் விளங்கி வந்தோர், அந் நாட்டினுக்கு ஆங்காங்கே அமைந்த தூண்கள் போலாயினர். அந்நாள் நாடிருந்த நிலைமையில், பாளைய வகுப்பு பெரிதும் பயனுள்ளதாயிற்று. முன்னம் முதலியார் வகுத்து வைத்த பாளையக்காரரின் பரம்பரையாரே தற்சமயம் தமிழகத்திலே ஆங்காங்கு ஜமீன்தார்களாக இருந்து, ஆங்கில அரசினுக்கு அச்சாணிபோல் துலங்குகின்றனர்.

அம்முறையில் குணக் கேடும் உண்டு. நடுநாயகமான அரசு வன்மை வாய்ந்ததாக விளங்கினால், பாளையக்காரர் பக்க பலமாக நின்று, விசுவாசமாக வாழ்ந்து, சேவை செய்து வருவர். அவ்வரசு வல்லமை குன்றிக் கிடப்பின், பாளையக்காரர் பதைத்தெழுந்து பெருமிதங் கொள்ள முயலுவர்; தனியரசு கொள்ளவும் தருக்கிக் கிளம்புவர்; அரசினுக்கு ஊனம் விளைவிக்கவும் முற்படுவர். தும்பிச்சி நாயக்கன் எனும் பாளையக்காரனொருவன் படபடத்து எழுந்த நிலையில், அப்பாளைய வகுப்பு முறையிலுள்ள குணம் குற்றம் இரண்டும் வெள்ளிடை மலைபோல் விளங்கா நின்றன.

தும்பிச்சி நாயக்கன் என்பான் நாகம நாயக்கரின் காலத்திலேயே பாண்டி நாட்டிற்கு வந்து குடியேறியவன்; பேராண்மையும் பெருந் திறலும் படைத்தவன்; தனது வல்லமை கொண்டு, பரந்த பிரதேசங்களைக் கட்டியாண்டவன்; வடக்கே யிருந்து வந்த வடுகப் பெருமக்களில் முன்வைத் தெண்ணத் தக்கவன். ஆயினும் பாளையங்களை வகுக்கும்பொழுது, பற்பல பிரதேசங்களை அவன் இழக்கலானான். அது கண்டு அவனுக்கு உள்ளூர ஆத்திரமுண்டு. எனினும், அரிய நாதருக்கு முன்னே அவன் தலை வணங்கிக் கிடந்தான்.

விசுவநாத நாயக்கர் மறைந்து, அரிய நாதரும் வடக்கே சென்ற சமயமே நற்சமயமென அத்தும்பிச்சி நாயக்கனுக்குத் தோன்றியது. தோன்றவே, தன்னையொத்த பான்மை வாய்ந்த பாளையக்காரரில் சிலரை அவன் துணை கொண்டான்; பெரும்படை யொன்று

திரட்டிப் பிரமாதமாக்க் கிளம்பினான்; அயலிலுள்ள அரசாங்கப் பிரதேசங்களைச் சூறையாடினான்; மதுரைக்குத் தென் கிழக்கே நாற்பது மைல் தூரத்திலுள்ள பரமன்குடி நகரைக் கைப்பற்றிக்கொண்டான்; அதனை ஒரு கோட்டையாக ஆக்கி அங்கே கொக்கரித்து நின்றான். அச் செய்தி மதுரைக்கு எட்டியது.

சாமோபாயமே சாலச் சிறந்ததெனக் கொண்டான் குமார கிருஷ்ணப்ப நாயக்கன்; உடனே ஒரு தூதுவன் மூலம் தும்பிச்சிக்கு நன்மதி புகட்டினான். வீணே போர் புரியவும், உயிர்க் கொலை காணவும் கிருஷ்ணப்பன் விரும்பவில்லை. இதனை அப்பாளையக்காரன் உணராமல், நாயக்க மன்னவன் நடுங்கி விட்டதாகவே நினைத்து விட்டான். அப்பால் கிருஷ்ணப்ப நாயக்கன் விதியின்றிப் போரில் இறங்க நேர்ந்தது. இருபதாயிரம் வீரர் ஈட்டியும் கத்தியும் தாங்கி எழுந்தனர். பல பாளையக்காரரும் பக்க பலமாக முனைந்து கிளம்பினர். கேசவப்ப நாயக்கன் படைத்தலைமை பூண்டு சென்றான்.

சென்ற தலைவன் நேரே பரமன்குடி சேர்ந்து, அதனை முற்றுகை யிட்டனன். ஓரிடத்தில் பரமன்குடிக் (இன்று பரமக்குடி என்று வழங்கும்) கோட்டை தகர்ந்தது. அப்பிளவை நோக்கிப் படையை நடத்திச் சென்றான் கேசவப்பன். அத்தருணம் வேல் ஒன்று பொன்று வந்து தாக்கவே, அத் தலைவன் படுகளத்தில் பொன்றி வீழ்ந்தான். அவ்வளவில், வேந்தன் சேனை சற்றே திகைப்புக் கொண்டது. தும்பிச்சி நாயக்கனே வெற்றி பெற்று விட்டதாக வீறுப்புக் கொண்டான். அச் செய்தி மதுரைக்கு எட்டவே, தளவாயாக யாரை அனுப்புவதென்று நாயக்க மன்னனுக்குச் சிந்தனை பிறந்தது.

அவ்வேளை, கேசவப்பன் மைந்தன் சின்ன கேசவப்பன் என்பான் படைத் தலைமை வேண்டி முன்வந்தான். பழி வாங்க வேண்டுமென்னும் பெருந் துடிப்பு ஒரு புறம்; பெருங் கீர்த்தி எய்தவேண்டுமென்பது ஒரு புறம்; இரண்டும் சின்ன கேசவனிடம் ததும்பி நின்றன. மன்னவன் ஆணை பெற்று அம்மைந்தன் புறப்பட்டான்

பரமன்குடிக்கு! பெரு வீரங் காட்டிச் சமர் செய்தான்; வெகு தந்திரமாகக் கோட்டையைத் தாக்கினன்; தந்தையைக் கொன்று குவித்ததே போல் தநயனையும் கொன்று குவிக்கலாமென்றே மனப்பால் குடித்து நின்றான் அத் தும்பிச்சி நாயக்கன்.

ஆயினும் விதியோ வேறு விதமாக விளைந்தது. பரமன்குடிக் கோட்டை நாற்புறமும் தகர்ந்து விழுமாறு தனிச் சமர் நடத்தினன் சின்ன கேசவப்பன். கோட்டை தகர்ந்தாலும், தும்பிச்சியின் மனக் கோட்டை தகர வில்லை. "வேண்டாம். வீணே படுகளத்தில் பட்டு வீழ வேண்டாம். பணிந்து விடுதலே மேல்" என்று தூது விடுத்தான் பாண்டிய நாதனது படைத் தலைவன். தும்பிச்சி நாயக்கனே அதனைச் சட்டை செய்யாது, கடும் போரே முடுக்கி நின்றான் கர்வமாக. எனினும், சின்ன கேசவப்பனது தந்திரமும் படை வீரரின் பராக்கிரமமும் மேலோங்கி நின்றன. தும்பிச்சி நாயக்கன் விதியின்றிச் சரண் புகுந்தான் கேசவப்பனிடம்.

பழி வாங்கும் வைரம் மிகுந்து நின்றும், சரண் புகுந்தவனை உயிர்வாங்க அப்படைத் தலைவன் மனங் கொள்ளவில்லை. அருகே இருந்தோர் அது கண்டு, "படை முகத்தில் என்ன கருணை இது? இப்பாவியைப் பழி வாங்கியே தீரவேண்டும்" என்று கூறித் தும்பிச்சியின் தலையை வீசி விட்டனர். அத்துடன் அவர்கள் நிற்கவில்லை; வெற்றிச் சின்னமாக அத் தும்பிச்சியின் சிரத்தை யறுத்து, மதுரைக்கு முன்னதாக அனுப்பியும் ஆர்ப்பரித்தனர். குமார கிருஷ்ணப்பன் அது கண்டு களிப்பு மேலிட்டு, அப்படைத் தலைவனை ஆடம்பரமாக வரவேற்றான்; அரிய சன்மானங்களும் பிருதுகளும் வழங்கினன்.

அரசை மதியா தெழுந்த பாளையக்காரருக்கு ஒரு பாடம் புகட்ட வேண்டுமல்லவா? ஆனது பற்றி, தும்பிச்சி நாயக்கனது பாளையத்தை மதுரைநாதன் கட்டிக் கொண்டான். அது கண்டு ஏனையோருக்கு நெஞ்சிலே ஓர் உதைப்பு உதிக்கலாயிற்று. பின்பு தும்பிச்சி நாயக்க

னது மைந்தர் அறிவு கொண்டு, பாண்டியநாதன் காலில் வந்து விழுந்து, மன்னிப்பு வேண்டினர். கிருஷ்ணப்பன் மனமிளகி, அம் மைந்தருக்குப் **பாம்பாறு** என்னும் கிராமத்தை ஈந்தான்; பரமன்குடியின் காவலையும் கொடுத்தான்; தும்பிச்சி நாயக்கனது பல மனைவிய ருக்கும் சில கிராமங்கள் தந்து ஆதரித்தான். அவனை அண்டி நின்ற பலரையும் மதுரை அரசின் சேவகத்தில் அமர்த்திக் கொண்டான். இது நிற்க,

ஆந்திர மொழியிலே **சிம்மளத் துவீப கதை** என அரிய நூலொன் றுளது. அதனை ஆராயப் புகுங்கால், கண்டியின்மீதும் குமார கிருஷ்ணப்பன் படையெடுத்துச் சென்றதாகப் புலப்படும். "அது கட்டுக் கதையே. சரித்திர நிகழ்ச்சி அன்று" என்று சிலர் சொல்லுவர். ஆயினும் போரின் விவரம், யுத்தம் நடந்த இடம்: பாண்டிய சேனை சென்ற மார்க்கம் முதலிய விவரங்களைக் கூர்ந்து நோக்கினால், கட்டுக் கதை யென்று அதைத் துணிந்து கூறுவதற்கில்லை. சரித்திர நிகழ்ச்சி யென்றே சாற்றலாம். ஆதலின் அச் சண்டையின் விவரத்தையும் இங்கே சிறிது கூறுவோம். பாளைய வகுப்பின் பெருமை கண்டிப் போரிலும் துலங்கும்!

## 11. சிம்மள யுத்தம்

இலங்கைத் தீவைச் சிம்மளத்துவீபம் என்பர்; ஈழ நாடென்றும் இசைப்பர்; கண்டிராஜ்யம் என்றும் கூறுவர். ஆதிமுதல், அது வளமை மிக்கது! மலைபடு பொருளும் கான்படு பொருளும் அங்கே மிக அதிகம். புராண இதிகாசங்களிலும் சரித்திரங்களிலும் அது சிறப்பு வாய்ந்தது. அத்தீவின்மீது ஆசை வைத்தான் குமார கிருஷ்ணப்ப நாயக்கன்.

அவன் காலத்திருந்த கண்டிராஜன், தும்பிச்சி நாயக்கனது நண்பன். தோழன் கொலையுண்டது கேட்டு அவன் துடிப்புக்கொண்டான்; கடுஞ்சினங் கொண்டு சீறியெழுந் தான். "குஞ்சரம் கண்டியிலிருக்க, அதன் தும்பிக்கை

யைத் துண்டித்து விட்டதாக வீரம் பேசுதல் வீணே யாம்" என்று மதுரைநாதனை இழித்துப் பேசினான். அதனை யறிந்தும், ஆசை கைகூடச் சமயம் வாய்த்த தெனக் கொண்டான் குமார கிருஷ்ணப்பன். மேலும் "தும்பிக்கையை வெட்டி வீழ்த்தியது கிடக்கட்டும்; சிரத்தையும் வீசித்தள்ளுவேன்" என்று வஞ்சினமும் பேசினான்.

உடனே மதுரையரசின் பாளையக்காரர் அனைவரும் பொங்கியெழுந்தனர்; அளவிறந்த படைகளும் திரண்டு கிளம்பின. கப்பல்களும், படகுகளும் நவபாஷாணத்துறையில் குவிந்தன; இப்போது தேவிபட்டினம் என்பதே நவ பாஷாணத்துறை எனப்படும்; அதுவே இராமபிரான் சமைத்த சேதுவின் எச்சமுமாம். கிருஷ்ணப்பனும் பாளையக்காரரும் படைஞருடன் அத்துறையிலே நாவாய் ஏறினர்; ஈழத்திலே மன்னார் எனும் இடத்தில் இறங்கினர்.

உடனே; "கப்பத்தோடு வந்து, காலில் விழுக; இன்றேல் போர்க்கோலம் பூண்டு புறப்படுக," என்று நாயக்கவேந்தன் தூது விடுத்தான்.

கண்டிராஜனோ கன வீரன்; வணங்கா முடியன்; ஆதலின், போர்முனையில் பேசிக்கொள்ளலாம் என்று பதில் விடுத்தனன்: விடுத்ததும் அமைச்சர் ஐவர், தந்திரத்தலைவர் எண்மர், இவர்களுடன் நாற்பதாயிரம் வீரரையும் போர் முகத்துக் கனுப்பினான். பாண்டியநாட்டுச் சேனைபதியான சின்னகேசவப்பன் சிங்கநாதஞ் செய்து, அப்பெருஞ்சேனையை எதிர்த்தனன். புத்தளம் எனும் இடத்தில் கொடும்போர் மூண்டது. சுருங்கச் சொல்லின், சிம்மளப்படை முறிபட்டது. அமைச்சரில் இருவரும் தலைவரில் ஐவரும் சிறைப்பட்டனர்.

குமார கிருஷ்ணப்பன் அச்சிறையாளரை அவமதியாமல் அன்பு ததும்ப நடத்தினான். அது கண்டு சிறையாளர் சொக்கிப் போயினர்; வடுக வீரரை வெல்லுதல் அரிதெனவும் கண்டனர்; அதன்மேல் இருதேச அரசரும் சமரசமாக வாழவேண்டும் என்று விரும்பினர்; அது

பற்றித் தம் அரசரிடம் தூது போகவும் இசைந்தனர். அங்ஙனமே அவர்களையும் தம்மவர் இருவரையும் கிருஷ்ணப்பன் அனுப்பினான். அவர்கள் சென்று, கண்டி ராஜனைக்கண்டு, கௌரவமான சமாதானம் கொள்ளுதலே சாலச் சிறந்ததெனச் செப்பினர்; அன்றியும் "நம்மிடம் இருமடங்கு அதிகப்படை இருந்தும் என்ன? வடுகரையும் தமிழரையும் வெல்லுதல் என்பது இயலாத காரியம். பகைவரின் வீரத்தையும் திறத்தையும் அணி வகுப்பையும் கண்டு சிம்மளவர் அஞ்சி யோடுவதைத் தவிர வழியில்லை" என்றும் விளம்பினர்.

கண்டியரசனோ சரணாகதியில் சித்தம் வைக்கவில்லை; "வீரவாழ்வு, இன்றேல் வீரச்சாவு — இரண்டிலொன்று தானே நிகழும்? இதற்கஞ்சி யாது பயன்? வருவது வருக! போரே சிறந்தது! பொன்றினால் வீர சுவர்க்கம் கிட்டும்! புறங்கொடுத்தால் பழியே நிலைநிற்கும்!" என்று இயம்பிவிட்டான்.

சென்ற தூதுவர் வாயும் மதியும் இழந்து திரும்பினர். அறுபதாயிரம் சிங்களவரும் பதினாயிரம் முகம்மதியருங் கொண்ட பெரும் படையுடன் சிம்மளவேந்தன் சீறிக் கிளம்பி வந்தான். நெடுநாள் கோர யுத்தம் நடந்தது. முடிவிலே சிம்மளத்தீவார் தோல்வியே கொண்டனர். கண்டியரசின் படையிலிருந்த முகம்மதியரில் எண்ணாயிரவர் படுகளத்தில் மாண்டுபோயினர். சிங்களவரில் பலரும் அது கண்டு திகைப்புக் கொண்டு, திக்கு நோக்கி ஓட்டமெடுத்தனர்.

கண்டி வேந்தனும் மந்திரிமாரும் பின்வாங்க மனங் கொள்ளவில்லை. மிகப் பெரிய யானைமீதேறி மதோன்மத்தமாக வந்தான் ஈழ நாட்டான். அவனது மனவலி கண்டு, மதுரை மன்னவனுக்கு வியப்பு மேலிட்டது. அத்தகையவனைப் போர்முனையில், உயிர் வாங்க அக் கிருஷ்ணப்பன் கருதவில்லை. ஆதலின், "வீணே உயிரைப் பறிகொடுக்க வேண்டாம், வந்து பணிதலே விழுமியதாம்" என்று உணர்த்தினான். கண்டிக் காவலன் அச் சொல்லை உதாசினஞ்செய்து, யுகாந்த கால உருத்திரனைப்

போல உருத்து எழுந்து, ஒப்பற்ற போர் முறுக்கினான்; ஒன்னலரில் பலரை உயிர் கொண்டான், 'சின்ன' கேசவனையும் சிந்தை திரியவைத்தான்; குமார கிருஷ்ணப்பனையும் கதிகலங்கப் பண்ணினான்; கிருஷ்ணப்பன் ஏறியிருந்த ராஜகுஞ்சரத்தின் துதிக்கையையும் வெட்டிச் சாய்த்தான்.

பார்த்தான் குமார கிருஷ்ணப்பன்; படுமோசம் விளையுமென்று கண்டான்; உடனே வில்லை வளைத்துக் கூரிய நச்சம்பொன்று விடுத்தான். எய்த அம்பு பறந்து சென்று மார்பில் பாயவே, வீர சுவர்க்கம் செல்வதாகச் செப்பி, அவ் வணங்காமுடி மன்னன் மண்ணைக் கவ்வினான். உடனே கண்டிராஜ்யம் கிருஷ்ணப்பனது காலடியில் கிடந்தது. கொற்றவன் மீது கொண்ட கோபத்தை இலங்கைக் குடிமக்கள் மீது காட்ட, அவன் விரும்பவில்லை. மற்று "மக்காள்! எவரும் சிறிதும் அஞ்சவேண்டாம்; உங்களது ஆசாரசங்களுக்கு யாதோர் ஊனமும் நேராது. உள்நாட்டு அரசியலில், தலையிட உத்தேசம் கிடையாது. எனவே அனைவரும் நிம்மதியாக இருக்கலாம்" என்று பறையறைவித்தான். போரில் காயமடைந்த சிங்களவரைப் பார்வையிட்டு, அன்னாருக்கு ஆறுதல் கூறினான்; உயிரிழந்த சிங்களவரின் குடும்பங்களுக்கு உதவியும் பல புரிந்தான்.

எனவே, தோற்று விட்டோம் என்று வாடிக்கிடந்த சிங்களவர் மனக்கலக்கம் விண்டு, ஒரு சிறிது மனமலர்ச்சி கொள்ளத் தொடங்கினர். அதன் விளைவாக அத்தீவு வாசிகள் மதுரை மன்னவனைத் தலைநகருக்கு வந்து போக வேண்டினர். அதற்கிணங்க அவனும் சென்றான்; மக்களும் சிறப்புப் பல செய்தனர். அப்பால், ராஜ குடும்பத்தாரை அநுராதபுரத்துக்கு அனுப்பி அங்கே ஒரு மாளிகையி லமர்த்தி, அன்னவருக்கு உரிய வசதிகள் பலவும் தேடி வைத்தான் கிருஷ்ணப்பன். அவனது மருமான் விஜயகோபால நாயக்கன் அத்தீவின் ராஜப் பிரதிநிதியானான். அங்ஙனமெல்லாம் செய்த பின்னர் அம்மன்னவன் மதுரைக்குத் திரும்பினான்.

திரும்புங் காலையில், போரில் நேர்ந்த உயிர்க் கொலைக்குப் பரிகாரமாக, ஆலயங்களில் முறைப்படி அபிஷேகமும் ஆராதனையும் நடத்தி வைத்தான்; மானியங்களும் கொடுத்தான்; அன்னதானம் செய்தான்; வஸ்திர தானமும் வழங்கினான்.

சிறிதுகாலம் விஜயகோபாலன் அத்தீவில் தங்கி, மக்களின் பேரன்புக்குப் பாத்திரமாக விளங்கினான். அப்பால் மக்களின் மன நிலையை மதித்து, ராஜப் பிரதி நிதி பதவியைத் துறந்து, மதுரைக்கு அவன் வந்துவிட நேர்ந்தது. பாளையக்காரரின் பக்க பலம் மிக்கிருந்த தால், சிம்மள யுத்தத்தில் குமார கிருஷ்ணப்பன் இலகு வில் வெற்றி பூண்டான். அரியநாத முதலியார் வகுத்த பாளையப்பட்டு முறையின் பெரும் பலனுக்கு அவ் வெற்றியே ஓர் அத்தாக்ஷி.

# 12. முதலியார் கோட்டை

அப்பன் விசுவநாதனும் அப்பனுக்கு அப்பன்போன்ற அரியநாதரும் ஆக்கிவைத்த அரசினுக்குத் தீம்பு செய்யத் தும்பிச்சி கிளம்பினான். அவனைப் போர் முகத் தில் வென்று, மெய்புகழ் கொண்டான் கிருஷ்ணப்ப நாயக்கன். அப்பால், கண்டிராஜன் கறுவி எழுந்தான் கோலாகலமாக. இவனையும் சமரபூமியில் சிதைத்து இணையிலா வாகை சூடினான். அப்போர் நிகழ்ச்சிகளுக்குப் பின்னரே, (1566–1569) அரியநாதர் பெனுகொண்டாவி லிருந்து மதுரை வந்து சேரலானார்.

விஜயநகர ஸாம்ராஜ்யத்தின் மகாராயராக அரியநாதர் முடிசூடாவிடினும், ஸாம்ராஜ்ய தளவாய் எனும் பெரும் பதம் பெற்றார் அல்லவா? அத்தகைய தளவாய் மற்றைய இரண்டுபாகங்களிலும் தங்காமல், மதுரைக்கு வந்ததேன்? ஸாம்ராஜ்யத்தைக் கட்டிக்காக்கும் ஆன்ற அறிவும் அருந் திறனும் திருமலையிடம் காணப்படவில்லை. ஏனையோரும் தனியரசராய் வாழவே விரும்பிக்கிடந்தனர். இந்நிலையில் தென்னாட்டையேனும் சிதறாமல் காத்துச் சீராக்கி உருப் படுத்தலாமென்று அரியநாதருக்குத் தோன்றியது.

மேலும் ஆருயிர்த்தோழனை விசுவநாதனது புதல்வன் தந்தைக்கேற்ற தநயனாய்த் திகழ வேண்டுமென்றும் அவருக்குப் பேரவா உண்டாயிற்று.

மதுரை வந்து சேர்ந்ததும், அப்போர் நிகழ்ச்சிகளை அரியநாதர் அறியலானார்; அவற்றைக் கேட்டு அகமிக மகிழ்ந்தார்; தன்னருமை நண்பரின் மைந்தனை மெச்சிப் புகழ்ந்தார்; தாம் நிறுவிய பாளைய வகுப்பு பாண்டிய நாட்டினுக்குத் தாரகமானதைக் கண்டு பேரானந்தம் கொண்டார். அதுகண்டு, தந்தையின் காலத்திலே மந்திரியாகவும் தந்திரியாகவும் திகழ்ந்து தாங்கியது போலவே, தன் காலத்திலும் தன்னையும் அரசையும் தாங்கித் துலக்க வேண்டுமென்று குமார கிருஷ்ணப்பன் கோரி நின்றான். அதனைத் தட்டி நடக்க மனமில்லாமல், அங்ஙனமேயாகுக என்று ஒப்பம் கொடுத்தார் அரிய நாத முதலியார்.

அப்போது, சோழவந்தான் எனும் கிராமம் அரிய நாதரின் பிரிய வாசஸ்தலமாயிற்று. ராஜீய நோக்கையும் ராணுவ நலத்தையும் மதித்தே, சோழவந்தானை அவர் தமது இருக்கையாகக் கொண்டார். மன்னவன் மதுரையில் இருக்கத் தாமும் அங்கே வாழ அவர் இசையவில்லை. அரசனை அணுகாமலும் அகலாமலும் இருக்க வேண்டுமென்றே அவர் கருதினார் போலும். இனி, சோழவந்தானே மதுரைக்கும் திண்டுக்கல்லுக்கும் இடையே உள்ள ஒரு முக்கிய ராணுவஸ்தலம். அந்நாளில், இராமேசுவரம் செல்லும் யாத்திரிகர் சோழவந்தானில் தங்கிப் போதல் வழக்கம். அன்னவருக்குரிய வசதிகளை நேரில் இருந்து கவனிக்கவும் அவர் விரும்பினார்.

மேலும் சோழ, பாண்டியர்களின் காலத்திலே சோழவந்தான் பிரசித்திபெற்ற ஸ்தலமாகும். பாண்டி நாட்டின் மீது சீறிவந்த சோழனொருவன் ஒரு சமயம் சோழவந்தானில் தோல்வியுண்டு உயிருமிழந்தான். ஆனது பற்றிச் சோழரும் பாண்டியரும் அவ்விடத்திற்கு ஒரு விசேஷம் உண்டென்று கருதலாயினர். சோழனொருவன் அங்கே ஆவியிழந்தது பற்றி, அந்த இடம்

சோழாந்தகம் என்று பெயர் பெற்றது. அப்பால் சோழாந்தக சதுர்வேதி மங்கலம் எனப் பெயர் பெற லாயிற்று. நாளடைவில் அப்பெயர் சோழவந்தான் என மருவி வழங்கி வருகின்றது.

அல்லாமலும், மதுரைச் சீமையில் சோழவந்தானே வளமை மிக்க தலமாம். வைகை நதிக்கரையில் அமைந் திருத்தலால், நீர்வளத்திற்கு ஒரு குறைவு கிடையாது. நீர்வளங் காரணமாக நிலவளஞ் செழிக்கும் என்பது ஒரு புறமிருக்க, இயற்கையில் பூசாரம் அங்கே மிக அதிகம். ஆற்றங்கரை யோரமெங்கும், அடர்ந்து பரந்த தென்னஞ் சோலைகளும் செழித்து வளரும். செந்நெல் வயல்களும் கண்ணுக் கினிமை பயக்கும்; கருத்தையும் அள்ளிக் கவரும்; வாசத்துக்கோ மிகவும் வாசியானது. மதுரைக்கு வடமேற்கே ஒரு காதத்துக்குள் உள்ளதாம். இத்தகைய அத்தலத்தில் அரியநாதர் வதிந்து வாழ விரும்பியது வியப்பன்று.

செல்வத்துப் பயனே ஈதல் என்பார் தமிழ் மறை வகுத்த நாயனார். மேலும், சுற்றத்தார் சுற்றப்பட ஒழுகல் வேண்டுமென்றும் உரைப்பார். அதனைக் கடைப்பிடித்து நடக்க முற்பட்டார் தளவாய் முதலியார். ஆனதுபற்றித் தொண்டை மண்டலத்திலே தாம் பிறந்த மெய்ப்பேடு, அதற்கு அருகேயுள்ள பெருநாடு முதலிய ஊர்களிலிருந்து தம் இனத்தாரான வேளாளர் பலரைச் சோழ வந்தானுக்கு வருவித்தார்; அவர்களுக்கென்று அங்கே முந்நூறு வீடுகள் கட்டிக்கொடுத்தார்; அன்னவருக்கு ஊழியம் புரியவேண்டி உழவர், கருமார், நாவிதர், வண்ணார் முதலிய தொழிலாளரில் ஆயிரம் குடும்பங்களை வரவழைத்து அமர்த்தினார்: ஊரைச் சுற்றிக் கோட்டை யொன்றும் எழுப்பினார். அது 'முதலியார் கோட்டை' எனப்படும்.

மக்கள் பலர் வந்து குடியேறவே, ஊராயிருந்த இடம் ஒரு நகரமாயிற்று. உடனே ஆங்கு அழகிய ஆலய மொன்று அமைத்தார்; அதற்கு அளவிறந்த மானி யங்கள் கொடுத்தார்; அதன் மேற்பார்வையை வசந்தராய

தருக்கள் எனும் தம்து குலகுருவினிடம் ஒப்படைத்தார்; தவிர, சுப சோபன காலங்களில் பெண் வீட்டார் ஐந்து காசும் மாப்பிள்ளை வீட்டார் மூன்று காசும், அக்குரு வுக்கும் சரி, அவர் பரம்பரைக்கும் சரி, தலைமுறை தலை முறையாகக் கொடுத்து வரவேண்டும் என்றும் விதித்தார். பாலக்காடு முதல் சேதுவரையில் உள்ள வேளாளர் அனைவரும் அவ்விதிக்கிணங்கி நெடுங்காலம் காணிக்கை செலுத்தி வந்தனர். சோழவந்தானில் அவர் கட்டிய கோட்டையை இன்று முழுதும் காணமுடியாது. என்றாலும் ஊரின் ஒரு பாகம் இன்றும் முதலியார் கோட்டை என்றே வழங்கி வருகின்றது.

சோழவந்தானில் மட்டுமல்லாமல் நகரி, புத்தனேரி, திருமங்கலம் முதலிய பல இடங்களிலும் தொண்டை மண்டல வேளாளரையும் உற்றார் உறவின்ரையும் அவர் குடியேற்றுவித்தார். பெரியகுளத்தினருகே தாமிர வாணியின் நதிக்கரையில், அரியநாயகபுரம் எனும் கிராமம் அமைத்தார். ஆங்கும் வேளாண் மக்கள் பலர் சென்று குடியேறினர். அங்ஙனம் பற்பல இடங்களில் குடியேறிய மக்களின் சந்ததியாரை இன்றும் ஆங்காங்கே பார்க் கலாம். அன்னார் அனைவரும் இன்றும் நாளையும் அரிய நாதர் என்றால், அன்பும் ஆர்வமும் கொள்வர். அதிலும் சோழவந்தானில் உள்ளாரோ அந்நன்றியறிவில் மேம் பட்டு விளங்குவர். சோழவந்தான் முதலிமாரில் சிலர் இன்றும் பணக்காரராயுளர்.

இனபிமானத்தில் மட்டுமே அரியநாதர் சிறந்தவர் என்பதில்லை. நன்றியறிவிலும் நனிசிறந்தவர்; வேதி யரிடம் விசுவாசம் கொண்டதிலும் விழுமிய புருஷராவர். மெய்ப்பேடு நம்பி—விநாயகராலய அர்ச்சகன்—அரிய நாதருக்கு எழுத்தும் பிறவும் அறிவித்த இறைவன் அல்லவா? ஆண்மைமிக்க வீரராகவும் அரிய ராஜ தந்திரி யாகவும் அரியநாதர் ஆனதற்கு அந்நம்பியே மூலபுருஷன். அந்நம்பியின் நாமம் யாது? அரிய பதவி பெற்றபின்னர், அரியநாதரும் அந்நம்பியும் சந்தித்ததுண்டா?—என்று சரித்திரம் ஏதும் சொல்லவில்லை.

ஆயினும் அவர்பால் அரியநாதர் காட்டிய நன்றியறிவைச் சரித்திரம் சிறந்து பேசும். நம்பியின் பெயரால் நாள்தோறும் அரியநாத முதலியார் ஆயிரம் பேருக்கு வாரணசி நகரிலே அறுசுவையுடன் கூடிய அன்னதானம் செய்து வந்தார்; அத்தருமம் நன்கு நடைபெற, ஒரு சில கிராமங்களை ஒதுக்கி வைத்தார்; குறிப்பிட்ட தேதிகளில் இங்கிருந்து அக்காசிமா நகருக்கு உண்டியல் மூலம் பணம் போய்ச் சேரவும் ஏற்பாடு செய்தார்.

கைம்மாறு கருதாமல் கடமையை ஆற்றி, அனைவரையும் கைதூக்கி விடுதலே வேதியருக்குரிய இலட்சணமாம். அத்தகைய குலத்தாரென்றால், அரியநாதருக்குப் பரவசம் பிறக்கும். மதுரைச் சீமையிலே அன்னவருக்காக அவர் நிர்மாணித்த அக்கிரகாரங்கள் அனந்தம். அந்த அக்கிரகாரங்களிலே அதிகாலையிலே எங்குப் பார்த்தாலும் வேத கோஷம் எழும்பும்; காலையிலே நீர்நிலைகளின் அருகில் ஜபதபங்கள் நடைபெறும். பகலிலே வீடுகள் தோறும் பூஜை நைவேத்தியங்கள் பரிமளிக்கும்; பிற்பகலிலே வேத பாராயணமும் சந்தை சொல்லுதலும் செவிக்கினிமை தரும். இரவிலே ஆன்ம விசாரமும் தத்வ விசாரணையும் முழங்கும். எல்லோரும் வேத வித்துக்களாய் விளங்க வேண்டுமென்றே அவர் விரும்பி நின்றார்.

# 13. ஆலயத் திருப்பணி

ஆதிநாளிலே அசோக மகாராஜன் வட இந்தியா வெங்கும் மண்டபங்கள் நிறுவினன்; ஆலயங்கள் அமைத்தான்; கல் தூண்கள் நிறுத்தினன்; காசினியெங்கும் புகழ் பெற்றான். பெரிய ஸாம்ராஜ்ய அதிபன் அங்ஙனம் பலவும் அமைத்தல் சுலபம். மந்திரியாகவும் தந்திரியாகவும் திகழ்ந்த அரியநாத முதலியாரோ அம்மன்னர் மன்னனை யொப்ப அமைத்த ஆலயங்களும் ஆற்றிய திருப்பணிகளும் அனந்தமாம்.

தமிழகத்திலே, ஏன்? தென்னிந்தியா வெங்குமே அரியநாதரின் அரும்பணி கொள்ளாத சிவ, விஷ்ணு ஸ்தலங்கள் இல்லை என்னலாம். பாளையங்கோட்டையிலே அவர் அமைத்த ஆலயங்கள் இன்றும் அவர் பெயரைப் பிரகாசிக்கச் செய்யும். மதுரையிலும் திருநெல்வேலியிலும் அவர் எழுப்பிய மண்டபங்களும் கோபுரங்களும் அவர் புகழை வானெல்லைவரையில் கொண்டு சேர்க்கும். பிரமாண்டமான மண்டபங்கள் கட்டுவதிலும் மகத்தான கல்தூண்கள் அமைப்பதிலும் அவர் மோகங் கொண்டார் என்றே மொழிய வேண்டும்.

மதுரையிலும் திருநெல்வேலியிலும் உள்ள ஆயிரக் கால் மண்டபங்கள் அரியநாதரின் அரு முயற்சியினால் எழுந்தனவாம்.

மதுரையிலே வசந்த மண்டபத்தினுக்கு வடக்கிலுள்ள ஆயிரக்கால் மண்டபத்தின் சிற்ப நேர்த்தியினைக் கண்டு கையெடுத்துக் கும்பிட வேண்டும். அங்குள்ள அறுபத்துமூவர் மண்டபமும் அத்தன்மைத்தே. மதுரை மீனாட்சி சுந்தரேசுவரரிடம் அவருக்கு அளவுகடந்த பக்தி விசுவாசம் உண்டு. ஆதலின் மீனாட்சியம்மைக்கு விலை மதிப்பற்ற ஆபரணங்கள் பல அவர் சமர்ப்பித்தார்; பள்ளியறைக் கட்டளை ஏற்படுத்தினார்; அறச்சாலையொன்று நிறுவினார்; வன்னியடி நந்தவனமும் அமைத்தார்; சிவராத்திரித் திருவிழாவினுக்குப் பன்னீராயிரம் பொன்னளித்தார்; ஆண்டவனுக்கு வெள்ளிச் சிங்காதனம் ஒன்றும் செய்து வைத்தார். ஆதலின்,

> **அருந்தவஞ்செய் அறுபத்துமூவர் அணி மண்டபம்**
> **மருவாருஞ்சோலை, அறச்சாலை, மண்டபம் வன்னியடி**
> **முருகேசன் சொக்கற்கு வெள்ளிச் சிங்காதன முற்றுஞ் செய்தான்**
> **வருமாலரிய நயினு முதலி மதி மந்திரியே**

என்று மதுரைத் திருப்பணி மாலை முழங்குகின்றது. மண்டபங்களும் ஆலயங்களும் சமைத்தல் ஆத்மார்த்தமே; பக்திப் பித்துமாம்; வீண் பணச் செலவைத் தவிர வேறென்ன?—என்று சிலர் இன்று பேசலாம். தாம்

இன்புற உலகு இன்புறக்கண்டு காமுறுவர் கற்றறிந்தார் என்பர் பெரியோர். உலகம் இன்புறுவதைக் கண்டு தாம் இன்புறவேண்டும் என்றே அரியநாதர் எண்ணினர் என்போம். ஆலயங்களையும் மண்டபங்களையும் சமைக்கா விடின், உலகத்தார் இன்புறுவது எப்படி? இந்த ஆத்மார்த்தம் கிடக்கட்டும்; பொருளாதாரம் பார்ப்போம்.

பாண்டியிலே நாயக்கரார்ட்சி நிலைக்கு முன்னம், நாடு அலங்கோலமாய்க் கிடந்தது. மக்களுக்கு உழவும் தொழிலும் போதிய ஊதியம் அளிக்கவில்லை; பலர் பிழைப்புக்கு வழியின்றித் திண்டாடி நின்றனர். அத்தகையாருக்கு ஒரு பிழைப்பு உண்டாகவும், அரிய சிற்பமும் ஓவியமும் ஆக்கம் பெறவும், தொழிலாளர் தலை தூக்கவுமே, ஆலயங்களையும் மண்டபங்களையும் ஆங்காங்கே அவர் அமைக்கலானர். புதிய ஆட்சியில் ஒரு பற்றுண்டாக்குவதும் நோக்கமாதல் வேண்டும். இந்நாளில் அத்தகைய பிரமாண்டமான கட்டடங்கள் கட்ட இயலுமா? கட்டி முடிப்பதென்று கங்கணம் பூண்டாலும் எவ்வளவு பொருட் செலவும் 'ஆள் மான'மும் அபார முயற்சியும் அளவிடற்கரிய ஊக்கமும் தேவை! எண்ணிப் பார் என்று இயம்புவார் போல் மதுரை ஆயிரக்கால் மண்டபத்திலே அசுவாரூட்ச் சிலை வடிவில் அவர் திகழ்வதைக் காணலாம்.

அங்ஙனம் நாட்டின் வளப்பத்தையும், சிறப்பையும் பெருக்க அரியநாதர் முயன்று நின்றமை கண்டு, குமார கிருஷ்ணப்ப நாயக்கனும் அவ்வாறே நடக்கத் தொடங்கினன். திருநெல்வேலி நகருக்கு ஒரு காதம் கிழக்கே, திருச்செந்தில் பதிக்குப் போகும் பாதையில் **கிருஷ்ணபுரம்** எனும் நகரை நிருமித்தான் கிருஷ்ணப்பன். நுண்ணிய சிற்ப வினையில் சிறந்த கற்பணி நிறைந்த கோயிலொன்றை எழுப்பினன்; கோபுரங் கண்டான்; குளம் வெட்டினன்; அக்கிரகாரம் அமைத்தான். திருநெல்வேலிக்கு மேற்கே **கடையம்** எனும் கிராமத்தினருகில் கிருஷ்ணபுரம் எனும் மற்றோர் நகரும் நிருமித்தான். பாண்டி மண்டலத்தை அலங்கரிப்பதில் அவ்வாறு

அமைச்சனும் அரசனும் போட்டி போட்டு முனைந்தன ரென்றே புகழ்ச்சியர்கப் புகல வேண்டும்.

ஆலயத் திருப்பணியில் மட்டுமே அரியநாதர் முயன் ருர் என்பதில்லை. ராணுவத் திருப்பணியிலும் அவர் முனைந்தது கொஞ்சமன்று. முன்னம் சொல்லிய வண் ணம், திருச்சி, மதுரை, பாளையங்கோட்டை இந்த இடங் களில் ஏற்றமான கோட்டைகள் கட்டி வைத்தவரும் அரியநாதரே. அக்கோட்டைகள் தற்காலத்தில் அநேக மாக மறைந்து விட்டன. ஆங்காங்கே இடிந்து கிடக்கும் மதிள் - சுவர்களின் சின்னங்களே காணப்படும். நாயக்க ராட்சிக்கு முன்பு தான் நாடு அலங்கோலமாகக் கிடந் தென்றால், அன்னவரது ஆட்சிக்குப் பின்னும் அலங் கோலமே கொண்டு குமுறியது. அச்சமயம் கோட்டை களில் பலவும் இடியுண்டு போயின. காலத்தின் கொடுமையை வேறென்ன விளம்பலாம்!

தஞ்சை, வேலூர், ஸ்ரீரங்கப்பட்டணம் இந்த இடங் களிலும் அரியநாதரின் முனைப்பினாலேயே கோட்டைகள் எழுந்தன என்று சிலர் கூறுவர். விஜயநகர ஸாம்ராஜ் யத்தினுக்கே தளவாய் ஆதலின், ஆங்குள்ளவற்றையும் அவரே கட்டினுரென்று கூறுகின்றனர் போலும். இது எங்ஙனமாயினும், அவர் முயற்சியின் விளைவாக நம் தமி ழகத்திலே எழுந்த கட்டடங்கள் பலவாம், பலவகைப் பட்டனவுமாம்.

1572-ம் ஆண்டிலே குமார கிருஷ்ணப்பன் ஈசன் பாதம் சேர்ந்தான். உடனே அவன் மகன் வீரப்ப நாயக் கனுக்கு முடிசூட்டி வைத்தார் அரியநாதர். ஏட்டளவில் தான் விசுவநாதன், கிருஷ்ணப்பன், வீரப்பன் இவர்கள் மன்னவர்கள். மெய்யாக அரசியலை அழகுற நடத்தி வந்தவர் தளவாய் முதலியாரே. அரியநாதர் இட்டது தான் சட்டம்; சொன்னது தான் தீர்ப்பு. எனவே, இறைவர்கள் அனைவரையும் கைப்பொம்மை போல் அவர் ஆட்டி வைத்தார் என்பர் சிலர். பிறர்க்குரியதை அபகரித்து ஆண்டனுபவிக்க அரியநாதர் என்றும் விரும்பியதில்லை. எல்லாம் இனிது நடக்கவேண்டும்,

நாயக்கராட்சியில் நலக்குறைவு ஒரு சிறிதும் கூடாது என்பதே அவர் கோட்பாடாயிற்று.

சூரியனுக்கு முன்னே உடுக்கள் ஒளி வீசா என்பது கிடக்கட்டும்; உடுபதியும் ஒளி வீசான். அங்ஙனமே அரியநாதருக்கு முன்னே நாயக்க மன்னவர் சோபிக்க வில்லை. அவருடைய அபார ஊழியத்தில் எவரும் அப் பழக்குக்காண இயலாது. மக்களுக்குத் தந்தை போலவும் தாய் போலவும் துலங்கினார். ஆதலின், அவரிடம் அரசன் முதல் ஆண்டிவரையில் பயபக்தி விசுவாசம் கொள்ளலா யினர். ஒழுங்கீனமாகவோ கட்டுக்கடங்காமலோ நடக்க நினைப்போருக்கு அரியநாதர் என்றால், சிம்ம சொப்பனந் தான். மிகவும் மிடுக்கான புருஷராயினும், அவரிடம் அன்பும் அபிமானமும் ததும்பும்.

ஏராளமான மானியங்கள் தந்தும், தாராளமாகத் தான தருமங்கள் செய்தும், அழகிய அக்கிரகாரங்கள் அமைத்தும், அந்தண குலத்தாரின் ஆன்ற மதிப்பி னுக்கு அரியநாதர் பாத்திரமானார்; நீர்வளத்தைப் பெருக்க எண்ணி, எண்ணிறந்த குளங்களை வெட்டியும், கால்வாய்களை உண்டாக்கியும், இதர வசதிகள் பல தேடித் தந்தும், உழுகுலத்தின் ஒப்பற்ற நன்றிக்கு ஓர் இலக்கானார்; உரிய பட்டம் பதவி உதவியும், உற்ற காலத்தில் ஊன்றுகோலாகியும், இனிய வசனங்கள் பேசியும், பாளையக்காரரின் பரம பிரியத்துக்குப் பாத்திர மாக விளங்கினார்.

பாண்டிநாடனைத்தும் பரிந்தும் புகழ்ந்து பேசும் வண் ணம் அரியநாதர் விளங்கி வருகையில், சிறிய கலக மொன்று உண்டாயிற்று. மாவலி வாணர் என்போர் மதுரைச் சீமையிலே பரம்பரையான பெருமக்கள். அம் மக்களின் தலைவனொருவன் வெறும் பாளையக்காரனாக வாழ விரும்பவில்லை. ஆதலின், முடியரசு கொள்ளக் கருதி மானாமதுரை, காளையார் கோவில் ஆகிய இரு பிரதேசங் களையும் கைப்பற்றிக் கொண்டான்; தானே தனியரசன் எனவும் முடிசூடிக்கொண்டு மொய்ம்பு காட்டவும் முற் பட்டான். உடனே அரியநாதரும் வீரப்ப நாயக்கனும்

ஒரு பெருஞ் சேனையுடன் கிளம்பினர். மீண்டும் பகை வளரவும், மக்கள் மாண்டு மடியவும் தளவாய் ஒப்பவில்லை.

மாவலிவாணரின் தலைவனுக்கு அவர் தூது போக்கினார் நீதிகூறி. முதலியாரின் பெருந்தன்மையும், பராக்கிரமமுங் கண்டு, அம்மாவலிவாணன் தன் மனத்தூடே மகிழ்ந்தனன். ஆயினும் மானம் என்பது குறுக்கே நின்றது. ஆதலின், போரே சிறந்தது என்றான் அப் பெருமகன். விதியின்றி அரியநாதர் அருஞ்சமர் ஆற்ற நேர்ந்தது. அதில் மாவலிவாணன் தோல்வியே கொண்டனன். அவன் பாளைய மனைத்தையும் பறித்துவிட வேண்டு மென வீரப்ப நாயக்கன் வெகுண்டுரைத்தான். படை முகத்திலும், பகைவனிடத்திலும் பெருந் தன்மையே காட்ட வேண்டு மென்றார் அரியநாத முதலியார். அங்ஙனமே அரியநாதர் அவனை மன்னித்துப் பாளையத்தையும் திரும்பக் கொடுத்தார். பின்னாளிலே அம்மாவலிவாணன் பரம விசுவாச புருஷனாக விளங்கினானென்று சரித்திரம் சாற்றும்.

## 14. மகா புருஷன்

**த**ளவாய் அரியநாத முதலியார் பரம தெய்வ பக்தர்; புராதன ஹிந்து மதத்தில் பெரும் பற்றுக் கொண்டவர். ஆயினும் சமரஸ நோக்கே வாய்ந்தவர். வீரப்ப நாயக்கரின் காலத்திற்கு முன்பே, மேனாட்டுக் கிறிஸ்தவப் பாதிரிமார் தூத்துக்குடியிலும் அதனை யடுத்த கடற்கரை நகரங்களிலும் பரவர்களுக்கு இடையே மதப் பிரசாரஞ் செய்து வந்தனர். அன்னவர் மதுரைமா நகரிலும் புகுந்து, தம் மதத்தைப் பரப்ப ஆவல் கொண்டனர். வீரப்ப நாயக்கன் ஆணையின்றி மதுரைப் பதியில் புகுவது எங்ஙனம்? அவ்வேந்தனது அனுமதியை நாடி நின்றனர் அப்பாதிரிமார்.

அரியநாதருடன் ஆலோசியாமல் — ஏன்! அரிய நாதரின் சம்மதி பெறாமல் — வீரப்பன் ஏதுஞ் செய்யான். பாதிரிமாருக்கு அனுமதி தரலாமா என்று அரியநாதரை

அவன் வினவினன். அரியநாதர் ஒப்பங்கொடுத்த பின்னரே, அன்னிய மதத்தார் சில நிபந்தனைகளுக் கிணங்கி, மதுரையில் கால்வைத்தனர்; மாதா கோயி லும் மடமும் கட்டிக் கொண்டனர்; மதப்பிரசாரமும் பண்ணத் தொடங்கினர்.

வீரப்ப நாயக்கனும் அரியநாதரின் சொற்படி, அக் கிரகாரங்கள் அமைத்தும், ஆலயங்கள் சமைத்தும் அரும் புகழ் பெற்றான். சிதம்பரம் நடராஜப் பெருமானது ஆலயத்துக்கு வீரப்பனே மதில் சுவர் எழுப்பினான்; மதுரையிலே கம்பத்தடி மண்டபமுங் கட்டினான். அருப்புக்கோட்டையில் அழகிய கற்கோட்டை யொன்று கட்டியவனும் அவனே.

நாளடைவில் அவ்வீரப்பன் விமலனது பாதஞ் சேர்ந்தான். உடனே அவன் மைந்தன் வீர கிருஷ்ணப் பனுக்கு முடிசூட்டி வைத்தார் அரியநாத முதலியார்; வீர கிருஷ்ணப்பனது தம்பியான விசுவப்பன் சற்றே பிணங்கினன். அது கண்டு, அரச குலத்தில் பிணக்கு நேரக் கூடாதென அரியநாதருக்குத் தோன்றியது. தோன்றலும் அத்தம்பியைச் சின்னதுரை என்று பட்டஞ் சூட்டித் துணையரசனாக அமைத்தார் அரியநாதர். அதன் மேல் சோதரருக்குள் சமரஸமும் வாஞ்சையும் பெருக லாயின. மூன்று தலைமுறையாகத் தளவாய்ப் பதவியும், முதன் மந்திரி ஸ்தானமும் வகித்துவரும் முதலியாரிடம் வீரகிருஷ்ணப்பனும் அவன் தந்தையும் பக்தி விசுவாசத் துடன் நடந்து வந்தனர்; தளவாய்த் தாத்தா என்றும் செல்வமாக அழைத்து, உச்சிமீது கொண்டு அவரைக் கொண்டாடி நின்றனர்.

மதுரைமா நகரிலே நாயக்க மன்னவர் சர்வாதிகார புருஷரா யிருந்தும், தென்காசியிலே பாண்டிய வமிசத்தைச் சேர்ந்தோர் குறுநில மன்னவராகக் குலவி நின்றனர். அவர்களில் மிகச் சிறந்தவன் அதிவீர ராம பாண்டியன். இவனே வெற்றி வேற்கை, நைடதம், கூர்ம புராணம், காசி காண்டம், திருக்கருவை வெண்பா அந்தாதி, திருக்கருவைப் பதிற் றுப் பத்தந்தாதி முதலிய பல நூல்கள் இயற்றியவன்;

பெரும் பண்டிதன்; மகா மேதை. இவன் ஒரு சமயம் அரியநாதருக்கு ஒரு போரிலே உற்ற துணையானான். அதன்பின் இருவருக்கும் நேசம் முதிர்ந்து வளர்ந்தது. இருவரும் அடிக்கடி சந்தித்து, இலக்கிய ஆராய்ச்சியும், ஆன்மவிசாரமும் செய்து வந்தனர். ஆயினும் அவ்விரு பெரியாரின் நட்பு முறையின் விவரங்கள் அந்தோ! கிடைத்தில. தமிழ்ப் பெரியாரும் தமிழகப் பெரியாரும் கூடிப் பேசிய வர்த்தமானங்கள் தெரியாமற் போனமை கேட்டுத் தமிழ் மக்கள் பெரிதும் வருந்துவர்.

பாண்டி நாட்டிலே நாயக்க வமிசத்தை 1529-ம் ஆண்டிலே ஸ்தாபித்தார் அரியநாத முதலியார்; 1600-ம் ஆண்டுவரையில் அதன் தளவாயாகவும் பிரதானியாக வும் துலங்கினார்; நான்கு நாயக்க மன்னவருக்கு நற்றுணை யாக விளங்கினார்; நாயக்க மன்னவ குலத்தில் பீஷ்மர் போல் பிரகாசித்தார். மகுடஞ் சூடாவிடினும், மன்னவ னுக்கே மகிமை பெற்றார்; மன்னரை அமைக்கும் மகா புருஷனாக விளங்கினார்; 1600-ம் ஆண்டு சித்திரைத் திங்களிலே சிவன் பாதம் சேர்ந்தார். அப்போது அவ ருக்கு வயது ஒரு நூறுக்கு மேலிருக்கும். மதுரை நாயக்க மன்னவர் அவரைத் தளவாய்த் தாத்தா என்று அருமையாகக் கொண்டாடினார் என்றால், தென்னாட்டு ஜமீன்தார்களிலே பலரோ அவரைக் குல தேவதையாக, குடும்ப தெய்வமாகக் கொண்டாடலாயினர்.

உப்பிட்டவரை உள்ளளவும் நினை என்பது முதுமொழி. மதுரை நாயக்க மன்னவர்கள் சர்வாதிகார புருஷராக இருந்தும், விஜயநகர ராஜ்யத்தின் சிற்றரசர் என்றே தம்மைக் கருதி அவ்வாறே நடந்தும் வந்தனர். இதற்கு அரியநாதரே மூல காரணம். அவர் கண் மூடிய பின்பு தான், மதுரை நாயக்க மன்னவர் தனி அரசரெனத் தருக்கி வாழக் கருதுக் கொண்டனர். மேலும் ஸாம் ராஜ்யம் சிதறுண்ட காலையில், கிருஷ்ணதேவராயரின் குடும்பத்தாரும் சந்ததியாரும் திக்கற்றுப் போக, அன் னாரைப் பேரன்புடன் அணைத்து ஆதரித்து வந்தார் நம் அரியநாதர்!

அரியநாதர் ஆவி துறந்தாரென்று கேட்டதும், சந்திரகிரியிலிருந்து ஆண்டு வந்த அரசன் ஆருத்துயர் கொண்டான்; மதுரை நாயக்கரும் மனம் புழுங்கினர். வடக்கே உடையார் பாளையம் முதல் தெற்கே குமரிமுனை வரையில் அரியநாதர் அரியநாதரென்று புகழாதார் இல்லை. அவர் உயிருடன் இருக்கும் வரையில், மதுரை நாயக்கரசு மகிமையே பெற்று நின்றது. மறவர் குல திலகமும் திருவாங்கூர் மன்னவனும் அரியநாதரென்ருல், அன்பு விரவிய அச்சங்கொண்டு கிடந்தனர். மதுரையில் உள்ள ஆயிரக்கால் மண்டபத்தின் முகப்பில் அசுவாரூடராய்த் திகழும் அவர் சிலைக்கு ஆண்டியும் அரசனும் இன்றும் மலர்மாலை சூட்டி மகிழ்ந்து மகிமை செய்வதைப் பார்க்கலாம்.

அரியநாத முதலியார் எளிய குடும்பத்தில் வந்தவர்; உழுதொழிலுக்குப் பிறந்தவர், உணவுக்கும் வகையின்றி இருந்தவர். அப்பாலோ அரசப் பெருமக்களும் தொழத்தக்க சீரும் சிறப்பும் எய்தினர். வேளாண்மைக்குப் பிறந்தாரேனும், வாளாண்மையிலும் அதிவல்லவரானர்; அடுத்தடுத்து நான்கு நரபதிகளிடம் தளவாயாகத் திகழ்ந்தார்; ஈடும் எடுப்புமில்லா அரசியல் திறமை காரணமாக, முதன் மந்திரியாகவும் முழங்கினர்; தன்னலத்தினும் பொது நலமே பெரிதெனக் கருதினர்; தென்னாட்டினைத்தும் வளம் பல பெற வைத்தார்; ஏழை சொல் அம்பலம் ஏறும் என உலகறியச் செய்தார்.

இவ்வளவுக்கும் அவரது பேரறிவு, தெய்வ பக்தி, சத்திய விரதம், இவையே காரணம். அவர் புகழ் மணம் இன்றும் கமழ்கின்றது.

Printed at the Indian Express, Branch Press, Madras.

# பத்திரிகை அபிப்பிராயங்கள்

## ரவீந்திரநாத டாகுர்—
## வாழ்க்கையும் கவிதையும்

### 'ஹிந்து' பத்திரிகையின் விமர்சனச் சுருக்கம்

"கவிதானுபவத்திற்கு உள்ளே பிரவேசிக்க ஒருவாயிலாகவே டாகுரின் வாழ்க்கை ஆராயப்படுகிறது. சாதாரண ஜீவிய சரித்திரங்களில் காணப்படும் தினசரி வாழ்க்கையின் பல விவரங்களும் தேதி விவரங்களும் இங்கே காணப்படவில்லை. கவிதை வளர்ச்சிக்கு உதவிய வாழ்க்கை-அம்சங்களையே, ஆசிரியர் விவேகமாய்க் குறிப்பிடுகிறார்: புஸ்தகத்தின் கடைசி நாலு அத்தியாயங்களிலும் உண்மையும் தெளிவும் குதூகலமும் புதுமை-உணர்வும் ஊட்டக்கூடிய இலக்கிய விமர்சனக் குறிப்புக்கள் நிறைந்திருக்கின்றன. புஸ்தகத்தின் கடைசிப் பகுதியில், டாகுர்-பாடல்களில் சில, அழகிய தமிழில் மொழிபெயர்க்கப்பட்டிருக்கின்றன. பக்தனுடைய பக்திக் காதலுடனும், நிபுணனுடைய அறிவுத்திறமையுடனும் ஜீவிய சரித்திரம் என்ற மெல்லிய ஒளிமயமான திரையின் மூலமாக டாகுரின் கல்வித்திறமையையும், கவித்திறமையையும் திரு. கே. சந்திரசேகரன் வெளியிடுகிறார்."

'கலைமகள்' விமர்சனம்

"ரவீந்திரருடைய வாழ்க்கை பெரிது; கவிதை உன்னதமானது. இந்த இரண்டையும் கலைக்கண்களோடு பார்த்து இதன் ஆசிரியர் எழுதியிருக்கிறார்."

## கைலாஸம் - மானஸரோவர்

'பாரதமணி' விமர்சனம்

"'உன்னைத்துண்டு துண்டாக வெட்டிக் காக்காய்க்கு இடுகிறேன்' என்று பயமுறுத்துகிறேமே, இந்த வசனம் எவ்வாறு எழுந்தது என்பதை அறியவேண்டுமானால் கைலாஸம் — மானஸரோவர் என்ற நூலைப் படித்துப் பாருங்கள்......தாம் இரண்டு ஸ்திரீகளுக்குத் துணையாக மானஸரோவரைக் காண்பதற்கும், கைலாஸத்தைப் பரிக்ரமஞ் செய்வதற்கும் போய்வந்ததைக் குறிப்பிடுகிறார். என்ன சொற்செட்டு!"

## போலந்து - பின்லந்து

'பாரததேவி' விமர்சனம்

"இந்தப் புஸ்தகம் சரியான சமயத்தில் வந்திருக்கிறது. போலந்து இன்னும் நேசநாடுகளுக்கு ஒரு சோதனையாகவேயிருந்து வருகிறது. பின்ல[illegible] ஒருவாறாக முடிந்து விட்டது. இவை[illegible] தெரிந்து கொள்வதற்கு இந்நூல் இன்றிய[illegible]

# தினமணி வெளியீடு

பதிப்பாசிரியர்: பி. ஸ்ரீ.

## வெளிவந்து விற்பனையாகிவரும் நூல்கள்:

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | மகாத்மா காந்தி — நினைவு மாலை .. | 0 | 8 | 0 |
| 2. | ரவீந்திரநாத டாகுர் — கவிதையும் வாழ்க்கையும் .... | 0 | 8 | 0 |
| 3. | கைலாஸம் — மானஸரோவர் .... | 0 | 8 | 0 |
| 4. | போலந்து — பின்லந்து .... | 0 | 12 | 0 |
| 5. | சிறு கதை மஞ்சரி .... | 1 | 0 | 0 |
| 6. | ஹாஸ்ய நாடகங்கள், கட்டுரைகள் | 2 | 0 | 0 |
| 7. | தில்லைக் கோவிந்தன் .... | 1 | 0 | 0 |
| 8. | அன்னை கஸ்தூரிபா .... | 0 | 12 | 0 |
| 9. | முன்னிலா .... | 0 | 12 | 0 |
| 10. | தளவாய்த் தாந்தா அல்லது தளவாய் அரியநாயக முதலியார் | 0 | 12 | 0 |

ஒவ்வொன்றுக்கும் தபால் செலவு பிரத்தியேகம்

---

### எதிர் பாருங்கள்!

**மௌலானா ஆஜாத்**

எம். எம். இஸ்மாயில், எம். ஏ. — விலை அணா 12

**பால விநாயகர் முதலிய கதைகள்**

டி. எஸ். வரதன், எம். ஏ. — விலை அணா 12

ள்

லகில் நவரஸங்களையும் அறிந்து

பபதற்கு ஒரு சிறந்த திறவுகோல்.